22 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397

www.mahendran.ca
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 பாலம் 22 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 15, 2012

# அமெரிக்கப்பொருளாதாரம் ‘நிதிநிலை உச்சி விளிம்பில்’

அமெரிக்க அரசு ஜனவரி 01, 2013 இல் மிகப்பெரிய பொருளாதார பிரச்சினையான Fiscal Cliff ஐ (நிதிநிலை உச்சி விளிம்பில் இருப்பதை) எதிர்நோக்கியுள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தல் முடிந்த மறுநாளில் இருந்தே எல்லோராலும் இது முக்கியமாகப் பேசப்பட்டு வருகிறது. இவ் அமெரிக்க பொருளாதார பிரச்சினையான ‘நிதிநிலை உச்சி விளிம்பில்’ இருப்பது கனேடிய பொருளாதாரத்தையும் பாரதூரமாக பாதிக்கும் என்பதால் கனேடிய அரசியல்வாதிகளும் பொருளாதார நிபுணர்களும் அமெரிக்கா இப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணப்போகின்றது என அவதானித்துக்கொண்டு இருக்கின்றனர்.

முதலில் ‘நிதிநிலை உச்சி விளிம்பில்’ இருப்பது என்றால் என்ன? அது எவ்வாறு ஏற்பட்டது எனப் பார்ப்போம். ஜோர்ஜ் W. புஷ் அமெரிக்க அதிபராக இருந்த காலத்தில் 2001 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சிக்காகவும், 2003 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் என தற்காலிகமாக வருமான வரிக்குறைப்பு சட்டமூலங்கள் இரண்டை அமல்படுத்தியிருந்தார். இவை இரண்டும் சேர்த்து “Bush Tax Cuts” என அழைக்கப்பட்டது. இச்சட்டமூலங்கள் மூலம் அமெரிக்கர்கள் உடைய (ஏழை மக்கள் முதல் மிகவும் பெரிய பணக்காரர்கள் வரை) வருமானவரியின் அளவு குறைக்கப்பட்டிருந்தது. இச்சட்டமூலம் ஜனவரி 01, 2013 இல் காலாவதியாகிறது.

அமெரிக்க அரசு ஒன்றும் செய்யாது இருந்தால் இச்சட்டமூலம் ஜனவரி 01, 2013 இல் காலாவதியாகும் போது அமெரிக்க மக்களுடைய வருமானவரி திடீர் என உயர உள்ளது. அத்துடன் பல செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடும் திடீர் என குறைக்கப்படும். இவ்வாறு நடந்தால் $600 பில்லியன் டொலர் பெறுமதியான செலவினங்கள் நிற்பாட்டப்படும். வருமான வரி உயர்வு அமெரிக்க சராசரி குடும்பம் ஒன்றிற்கு $3,500 ஆல் அதிகரிக்கும். இது அமெரிக்க பொருளாதாரத்தில் ஒரு பெரும் அதிர்ச்சியை கொடுப்பதுடன் அமெரிக்க பொருளாதாரத்தை மந்தநிலைக்கு (Recession) கொண்டு சென்றுவிடும். அதாவது மலை உச்சி விளிம்பில் இருந்து செங்குத்தாக கீழே விழுந்த மாதிரியான நிலையை பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் என்பதாலேயே இந்த நிகழ்வு (Fiscal Cliff) ‘நிதி நிலை உச்சி விளிம்பில்’ என பொருளாதார நிபுணர்களால் அழைக்கப்படுகின்றது. உண்மையில் செலவினங்களின் குறைப்பும் வருமான வரி உயர்வும் நாட்டின் வரவுசெலவு திட்டத்தின் துண்டு விழும் தொகையை குறைக்க உதவினாலும் இத்திடீர் செலவினங்களின் குறைப்பையும் வருமானவரி உயர்வையும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை தாங்கமாட்டாது என்பதே பொருளாதார வல்லுனர்களின் கருத்தாகும்.




இந்நிலையை தவிர்க்க அமெரிக்க அதிபர் குடியரசு கட்சியை பெரும்பான்மையாக கொண்ட நாடாளுமன்றத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக முயற்சி செய்து வருகின்றார். ஆனால் குடியரசு கட்சி உறுப்பினர்கள் எந்தவித உடன்பாட்டிற்கும் வரவில்லை. நொவம்பர் 06, 2012 இல் அதிபர் தேர்தல் முடிவடைந்தவுடன் இரண்டு கட்சிகளும் தாங்கள் தமது கட்சி நிலையை மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக சேர்ந்து உழைப்போம் என உறுதி எடுத்துக்கொண்டனர். புதிய நாடாளுமன்றத்திலும் குடியரசுக்கட்சியே பெரும்பான்மையாக உள்ளது. அவர்கள் ஜனநாயகக் கட்சி அதிபருடன் சேர்ந்து ஒத்துழைத்து இந்த ‘நிதிநிலை உச்சி விளிம்பில்’ இருக்கும் பிரச்சினையை தீர்ப்பதற்கு, நாட்டிற்கு பொருளாதார மந்த நிலை ஏற்படாமல் ஒரு தீர்வு கொண்டு வருவார்கள் என கனடா உட்பட உலகில் உள்ள பல நாடுகளும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றன.

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் ஒரு நாளைக்கு $1.7 மில்லியன்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
- Residential/Commercial needs
- Purchase/Refinancing/Renewal/Switch
- Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
- Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
- 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5 Markham & Eglinton Tel:416.264.3232
3351Markham Rd., #129 Markaham & Steeles Tel: 416.609.2022

Allstate Insurance Company Of Canada
Allstate. You're in good hands.
Home & Auto Insurance





Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca
4525 Kingston Road
Unit H5 Scarborough, ON M1E 2P1

REAL ESTATE
• RESIDENTIAL • INVESTMENTS
வீடு என்பது உங்கள் கனவு! தாயகம் என்பது உங்கள் நினைவு!!
இவை இரண்டையும் உங்கள் கண் முன் கொண்டுவருவேன்.
இலங்கை சென்றுவர இருவருக்கு
இலவச விமானச்சீட்டு
என்னிடம் வீடு வாங்குபவர்களுக்கு மட்டும் இரண்டு பேருக்கு விமானச்சீட்டு. இலங்கை சென்றுவர எந்த வித சீட்டு குலுக்கலுமின்றி வழங்கப்படும்.
இந்த சலுகை November 20, 2012 திகதி வரை என்னிடம் வீடு வாங்குபவருக்கு மட்டும்.
"உங்கள் கண் உள் இருக்கும் கனவுகளை உங்கள் கண்முன் கொண்டு வருவேன் உங்களுக்கு அதிஷ்டம் இல்லை என்று கவலையா! என்னிடம் வந்தாலே உங்களுக்கு அதிஷ்டம் தான்"



Lourdson Antonipillai (B.sc)
Sales Representative
Dir: 416-738-8824
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
HomeLife/Future
Realty Inc., Brokerage*
205-7 Eastvale Drive, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated
HOMELIFE HIGHER STANDARDS



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# அமெரிக்கப்பொருளாதாரம்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

டொலர் ஆகும். இதனால் அமெரிக்காவின் உற்பத்தியாளர்களோ அல்லது இறக்குமதியாளர்களோ பொருளாதார நிலையால் பாதிக்கப்பட்டால் அது கனடாவுடனான வர்த்தகத்தினையும் பாதிக்கும் என்பது நிச்சயம். "அமெரிக்கர்கள் இந்த 'நிதிநிலை உச்சி விளிம்பில்' இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக தீர்வுகண்டால் உலகம் முழுவதற்கும் அது பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்" என கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் அண்மையில் தெரிவித்திருந்தார். "இந்த அமெரிக்காவின் நிதி நிலை உச்ச விளிம்பில் இருக்கும் நிலைமை கனடா உட்பட உலகம் முழுவதிற்குமான தற்போதைய மிகப்பெரிய பொருளாதார பிரச்சினை" என கனேடிய நிதி மந்திரியும் அண்மையில் தெரிவித்திருந்தார். இப்பிரச்சினைக்கு தீர்வுகாண அமெரிக்க அரசிற்கு இன்னும் 45 நாட்களே இருக்கின்றன. இப்பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் அது கனடாவின் 2013 ஆம் ஆண்டிற்கான GDP (Gross Domestic Product) யை 1.8% இல் இருந்து 0.6% ஆக குறைத்துவிடும். இந்நிலை கனடாவையும் பொருளாதார மந்த நிலையின் விளிம்பிற்கு கொண்டுபோய் விட்டுவிடும்.

இவ்வாறு TD வங்கியை சேர்ந்த பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இந்த பொருளாதார "நிதி நிலை உச்சி விளிம்பில்" இருப்பது அமெரிக்க பொருளாதாரத்தை மிகவும் பாரதூரமாக பாதிக்கும் என எல்லா பொருளாதார வல்லுனர்களும் எதிர்வு கூறுகின்றபடியால் உடனடியாக ஒரு தீர்வுக்கு ஜனநாயக்கட்சி அதிபரும் குடியரசுக்கட்சியை பெரும்பான்மையாக கொண்ட நாடாளுமன்றமும் வராவிட்டாலும் புதிய வருடம் பிறந்து ஒரு சில கிழமையில் ஒரு தீர்வு எட்டப்பட்டு விடும் என பொருளாதார வல்லுனர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

# மீண்டும் முதல்வர் பராக் ஒபாமா

கடந்த நொவெம்பர் 06, 2012 இல் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா மீண்டும் அமெரிக்க அதிபராக தெரிவு செய்யப்பட்டு ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார். அமெரிக்காவில் 51 (50 + DC) மாநிலங்களிலும் மொத்தமாக 538 வாக்குகள் (Electoral Votes) உள்ளன. அவற்றில் 27 மாநிலங்களின் 332 வாக்குகளை பெற்று 62 அதிகப்படியான வாக்குகளால் பராக் ஒபாமா மீண்டும் அதிபராக தெரிவு செய்யப்பட்டார். அவரை எதிர்த்து போட்டியிட்ட மிற் ரொமெனி ஆல் 24 மாநிலங்களின் 206 வாக்குகளை

# மீண்டும்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

மட்டுமே பெறமுடிந்தது. பொதுமக்கள் அளிக்கும் வாக்குகளின் எண்ணிக்கையில் அதிபர் தெரிவு நேரடியாக தங்கியிருக்காவிட்டாலும் அது அதிபரின் செல்வாக்கை கணிக்க (Popular Vote) பயன்படுகின்றது. பராக் ஒபாமா இற்கு 62,607,953, (51%) வாக்குகளும் மிற் ரொமனிக்கு 59,133,831 (48%) வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் பராக் ஒபாமா 29 மாநிலங்களின் 365 வாக்குகளை பெற்றிருந்தார். அப்போது அவருக்கு 69,456,897 (53%) வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட ஜோன் மக்கெயின் இற்கு 59,934,814 (46%) வாக்குகளும் விழுந்திருந்தன.



நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் அமெரிக்க அதிபரின் ஜனநாயகக்கட்சி 194 ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியது. குடியரசுக்கட்சி 232 ஆசனங்களைப்பெற்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கட்சியாக உள்ளது. 435 ஆசனங்களை கொண்ட நாடாளுமன்றத்தில் இன்னும் 9 ஆசனங்களுக்கான முடிவு அறிவிக்கப்படவில்லை. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்திலும் 242 ஆசனங்களுடன் குடியரசுக்கட்சியே பெரும்பான்மை கட்சியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க மேற்சபையில் அமெரிக்க அதிபரின் ஜனநாயகக்கட்சி 53 ஆசனங்களை பெற்று பெரும்பான்மை கட்சியாக இருக்கிறது. இங்கு குடியரசு கட்சி 45 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது. மேற்சபையில் மொத்தமாக 100 ஆசனங்கள் உள்ளன. இவற்றில் 2 இடங்களுக்கு சுயேட்சை வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கலைக்கப்பட்ட மேற்சபையிலும் ஜனநாயகக்கட்சி 53 ஆசனங்களையே வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(நொவம்பர் 01, 2008 இல் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரித்தது மீள் பிரசுரம் செய்யப்படுகிறது)

**பிறப்பு** - ஓகஸ்ற் - 04 - 1961 இல் அமெரிக்காவில், ஹவாய் மாநிலத்தில் உள்ள, 'ஹொனொலூ' நகரம் (Honolulu, Hawaii State, U.S.A)

**வாழ்விடம்** - Kenwood, சிக்காக்கோ நகரம், இலினோஸ் மாநிலம்.

**தந்தையார்** - கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள 'கென்யா' (Kenya) நாட்டினை பூர்வீகமாக கொண்ட முஸ்லீம் பாரம்பரியத்தில் வந்த முற்றுமுழுதான கறுப்பின இனத்தவர் Barack Hussein Obama. 1936ஆம் ஆண்டு பிறந்த இவர் 1982 இல் தனது 46வது வயதில் வாகன விபத்தில் பலியானார். 18 ஆவது வயதில் தனது நாட்டில் தம்மினத்தில் உள்ள பெண்ணை முதல் திருமணம் செய்து கொண்டு இரு பிள்ளைகளுக்கு தந்தையானார். அமெரிக்காவில் உள்ள ஹவாய் பல்கலைக்கழகத்தில் புலமை பரிசில் பெற்று படிக்க வந்து படித்துக் கொண்டிருந்த காலத்தில், இரண்டாந்தடவையாக இன்றைய ஜனாதிபதியின் தாய் ஆன் டுன்காம் (Ann Dunham) என்பவரைச் சந்தித்து காதல் திருமணம் செய்து இவர்கள் இருவருக்கும் பிறந்த ஒரே மகன் பராக் ஒபாமா. பொருளியல் துறை முதுகலைமானி பட்டம் பெற்று 'பொருளியல் நிபுணராக' (Economist) பணிபுரிந்தார்.

1964ஆம் ஆண்டு தனது மனைவியை, அதாவது ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்களின் தாயை பராக் ஒபாமாவுக்கு இரு வயதாக இருக்கும் போது விவாகரத்து பெற்று தனது சொந்த நாடான கென்யாவுக்கு திரும்பினார். அந்த நாட்டின் அரசாங்கத்தில் பொருளியலாளராக (Economist) பணிபுரிந்தார். ஒபாமாவின் தந்தையார் கென்னியாவில் மூன்றாம் மனைவியை திருமணம் செய்து ஒரு பிள்ளைக்கும் நான்காவது மனைவியை திருமணம் செய்து இன்னுமோர் பிள்ளைக்கும் தந்தையானார். 1971ஆம் ஆண்டு பத்து வயதில் இன்று ஜனதிபதியான தனது மகனை ஒருமுறை இறுதியாக பார்த்திருந்தார்.




**தாயார்** - அமெரிக்க ஆங்கில வெள்ளைக்கார இனத்தினை சேர்ந்த கலாநிதி. ஸ்ரான்லி ஆன் டுன்காம் (Dr. Stanley Ann Dunham) அமெரிக்காவில் 'கான்சாஸ்' (Kansas) மாகாணத்தில் 1942இல் பிறந்தவர். 1995இல் புற்று நோயால் காலமானார். 'மனித வர்க்க சாஸ்திரம்' (Anthropology) என்னும் பாடத்தில் தனது முதுகலைமானி மற்றும் கலாநிதி பட்டம் பெற்றவர்.

1961ஆம் ஆண்டு ஹவாய் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்தில் இன்றைய ஜனாதிபதியின் தந்தையினை பெற்றோரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருமணம் செய்து கொண்டவர். ஜனாதிபதி பராக் ஒபாமா இரு வயதாக இருக்கும் போதே கணவனுடன் விவகாரத்து செய்து கொண்டார். பின்னர் இவர் 1967ஆம் ஆண்டு, இந்தோனேசியாவிலிருந்து அமெரிக்க பல்கலைக்கழகத்தில் வந்து கல்வி பயின்று அந்நாட்டு பூர்வீக குடிமகன் ஒருவரை திருமணம் செய்து இருவரும் பின்னர் இந்தோனேசியாவில் குடியேறி அந்நாட்டு அரசாங்கத்தில் உயர் பதவியில் தொழில் புரிந்தார். இவர்கள் இருவருக்கும் ஒரு பெண் பிள்ளையும் உண்டு.

**ஆரம்பக்கல்வி** - இந்தோனேசியா நாட்டினை சேர்ந்தவரை மறு திருமணம் செய்து கொண்ட தனது தாயாருடன் சேர்ந்து 1967 இல் அந்நாட்டின் தலைநகரான 'ஜகாற்றா' (Jakarta) நகரில் குடியேறி தனது பத்து வயதுவரை ஆரம்ப கல்வியினை அங்கு பயின்றார்.

1971ஆம் ஆண்டு தனது பத்து வயதில் ஐந்தாம் வகுப்பு படித்து கொண்டிருந்த நேரம், அமெரிக்காவுக்கு திரும்ப வந்து தனது தாயாரின் பெற்றோரோடு இருந்து வளர்ந்து தனது இளமைக்கால கல்வியினை அமெரிக்காவில் தொடர்ந்தார்.

2008 ஜனாதிபதி தேர்தலுக்கு முதல் நாள் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் இருந்த நேரம் இவரை அன்போடு வளர்த்த பேத்தியார் தனது 86 ஆவது வயதில் காலமாகினார். இச்செய்தி இவரை இறுதிக் கட்ட தேர்தல் பிரச்சார நேரத்திலும் சற்று கவலையை உருவாக்கியிருந்தது என்பதை அவரே தெரிவித்திருந்தார். இச்சிறுபராயத்தில் பலமுறை விடுமுறை காலத்தில் இந்தோனேசியா சென்று தனது தாயாருடன் இவர் வசிப்பது உண்டு.

**உயர்கல்வி** - பாடசாலை கல்வியினை முடித்துக் கொண்டு 'லொஸ் ஏஞ்சல்ஸ்' (Los Angles) நகரத்துக்கு இடம் பெயர்ந்து அங்குள்ள கல்லூரி ஒன்றில் இரு வருடங்கள் பயின்றார். தொடர்ந்து நியூயோர்க் நகரில் உள்ள கொலம்பியா கல்லூரியில் சேர்ந்து அரசியல் விஞ்ஞானத்தில் குறிப்பாக 'சர்வதேச விவகாரம்' என்னும் துறையில் ஆய்வு படிப்பினை தொடர்ந்து 1983இல் B.A பட்டம் பெற்றார்.

பட்டப்படிப்பினை முடித்ததும் நியூஜோர்க் நகரில் நான்கு வருடங்கள் சர்வதேச வர்த்தக கூட்டுத்தாபனத்தில் நியூஜோர்க் மக்கள் நல ஆய்வு மையத்திலும் (New York Public Interest Research Group) பணிபுரிந்தார். தொடர்ந்து சிக்காக்கோ நகருக்கு இடம்பெயர்ந்து சமூக ஆய்வு மையம் ஒன்றில் மூன்று வருடங்கள் பணி புரிந்தார். 1988இல் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டத்துறையில் கல்வி பயின்று வக்கீல் பட்டம் பெற்றார்.

சட்டத்துறையில் பயின்ற காலத்தில், அங்கிருந்து வெளிவந்த 'ஹார்வார்ட் மாகாண சட்டங்களின் பரிசீலனை' (Harvard Law Review) என்ற சட்டங்கள் தொடர்பான சஞ்சிகையில் ஓர் எழுத்தாளராக ஆரம்பித்து இறுதியில் ஆசிரியராக சுமார் எட்டு வருடங்கள் பணிபுரிந்து சட்டத்துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டார். இப்பிரபல சஞ்சிகையின் அதி உயர் தலைமைப்பீடத்தில் இருந்த முதல் கறுப்பின மனிதன் என்ற பெயர் அன்று உருவாகியிருந்தது. சட்டத்துறையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் விடுமுறை காலங்களில் சிக்காக்கோ நகருக்கு வந்து அங்குள்ள பிரபல சட்ட வல்லுனர்களின் அலுவலகங்களில் பகுதி நேரமாகவும் பணிபுரிந்தார்.

1991இல் சட்டத்துறையில் பட்டம் பெற்று வக்கீலாக வெளி வந்தார்.

**சட்டத்துறை தொழிலும் விரிவுரையாளர் பணியும்** - 1992 ஆம் ஆண்டில் இருந்து சுமார் பன்னிரண்டு வருடங்கள் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் 'அரசியல் அமைப்பு சட்டம்' என்னும் பாடத்தில் விரிவுரையாளராக பணி புரிந்தார். அதேநேரம் அங்குள்ள பிரபல்யமான சட்ட அலுவலகத்தில் சேர்ந்து குடியுரிமை தொடர்பான சட்டத்துறை ஆலோசகராக பணிபுரிந்தார்.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# புதுவீடு புது பூசணி!



## சத்குரு வாசுதேவ்

**புதுமனைப் புகுவிழா போன்ற பல நேரங்களில், வீட்டின் முன் சாம்பல் பூசணிக்காயைக் கட்டித் தொங்க விடும் பழக்கம் நமது கலாச்சாரத்தில் இருக்கிறது. பூசணிக்காயை ஏன் கட்டுகிறார்கள். அந்தக் காய்க்கு மட்டும் அப்படி என்ன சிறப்பு?**

கேள்வி - புதுமனைப் புகுவிழா போன்ற பல நேரங்களில், வீட்டின் முன் சாம்பல் பூசணிக்காயைக் கட்டித் தொங்கவிடும் பழக்கம் நமது கலாசாரத்தில் இருக்கிறது. பூசணிக்காயை ஏன் கட்டுகிறார்கள். அந்தக் காய்க்கு மட்டும் அப்படி என்ன சிறப்பு?

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

சத்குரு - உணவுகளில் மிகவும் அதிக பிராண சக்திகொண்ட சில உணவுகள் உள்ளன. அந்த உணவுகளிலும் மஹா பிராண சக்தி கொண்டது சாம்பல் பூசணி. அந்தக்காய் மிக அதிகமான நேர்மறை பிராண சக்திகொண்டது. எனவேதான், அதை வீட்டு முன் கட்டித் தொங்க விடுகிறோம். புதிய வீட்டில் குடியேறும் போது சில தீய சக்திகள் அங்கே இருக்கலாம். எனவே, ஒரு பூசணிக்காயை நம் வீட்டின் முன் கட்டும்போதே அந்த இடத்தில் உண்டாகும் நேர்மறை அதிர்வுகள் அந்த இடத்தில் உள்ள எதிர்மறைச் சக்திகளை அகற்றி விடுகின்றன.

நாம் அதைச் சாப்பிடும்போது, அது நமக்கு மிகவும் நல்லது செய்கிறது. ஆனால், நம் கலாச்சாரத்தில் ஒரு வழக்கம் இருந்தது. நம் வீட்டிலேயே ஒரு பூசணிக்காயை வளர்த்தாலும் அதை அந்தணருக்குத் தானமாகக் கொடுத்து விடும் பழக்கம் இருந்தது. நீங்கள் அதைத் தானமாகக் கொடுக்கும்போது உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். வாங்குபவருக்கோ இங்கேயே நல்ல உணவு கிடைத்து விடுகிறது. குறிப்பாக வட இந்தியாவில் கீழ் ஜாதியினர் பூசணிக்காய் சாப்பிடுவது தடை செய்யப்பட்டிருந்தது. ஏனெனில், பூசணிக்காய் சாப்பிடுபவருக்கு உடலும் மனமும் கூர்மையாவதால் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியாது. எனவேதான், அவர்கள் பூசணிக்காய் சாப்பிடுவதிலிருந்து தடை செய்யப்பட்டனர். ஆனால், இப்போது அது போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை.

பூசணிக்காயைத் தொடர்ந்து சாப்பிடும் போது நம் மனம் மிகுந்த விழிப்புணர்வை அடைகிறது. புத்திக் கூர்மையும், புத்துணர்வும், சமநிலையும் அதிகரிக்கிறது.

இவ்வளவு பிராண சக்தியுடன் இருப்பதால் வீடு கட்டி புதிதாக குடியேறும் போது அனைத்து எதிர்மறைச் சக்திகளைக் களைவதற்கான ஒரு வாய்ப்பாக பூசணிக்காயை பயன்படுத்துகிறார்கள்.

இந்த மாதம் தீபங்களின் திருவிழாவான தீபாவளியின் மாதம். தெய்வீகம் தீமையை அழித்ததைக் கொண்டாடும் திருவிழா. உண்மையிலேயே கடவுளின் வடிவத்தில் தெய்வீக சக்தி வந்து தீய சக்தியை அழித்ததோ இல்லையோ, அனைத்து உயிர்களும் தங்களுக்குள் உள்ள தீமைகளைத் தோற்கடித்து அழிப்பதற்கு, தங்களுக்குள் தெய்வீகத்தை அனுமதிப்பதற்கு, தூண்டுகோலாய் இருக்கும் விழா தீபாவளி.

ஆன்மீக சாதனாக்களின் நோக்கமே, உள்ளார்ந்து இருக்கும் தெய்வீகத்தை அணுகுவதற்கான ஒரு வழியை ஏற்படுத்துவதுதான். குருவின் அருளுடன் முறையான - தொடர்ச்சியான சாதனா செய்வது, குறிக்கோளை அடைவதற்கு நிச்சயமான ஒரு வழி.

நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தில், இருள் என்றால் வெளிச்சமின்மை என்று பொருள். ஆனால் மனிதனின் உள்நிலைப் பரிமாணத்தில் இருள் என்றால், தெளிவின்மை என்று பொருள். தீபாவளி தீபங்களின் பண்டிகையாக அறியப்படுகின்றது. மேலும் அது தெளிவையும், ஞானமடைதலையும் கொண்டாடும் பண்டிகையாகவும் உள்ளது. இந்தத் தீபாவளி வெறும் தீபங்களின் பண்டிகையாக மட்டுமில்லாமல், ஞான-மடைதலை நோக்கி நீங்கள் எடுத்து வைக்கும் ஒரு படியாகவும் இருக்கட்டும்!. இந்தத் தீபாவளி உங்களுக்கு மிகவும் கோலாகலமானதாக இருக்க என் வாழ்த்துக்களும், ஆசிகளும்.

அன்பும் அருளும்,
சத்குரு.




# மீண்டும்...

**அரசியல் பிரவேசம்** - 1996 ஆம் ஆண்டு அமெரிக்காவில் 'இலினோஸ்' மாகாணத்தில் தாம் வாழும் தொகுதியிலிருந்து சட்டசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இதே மாகாண சட்டசபை தேர்தலில் 1998, 2002 இலும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் 2000 ஆம் ஆண்டில் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை எ ன



தேர்தல் நடக்கும் அமெரிக்க செனற்சபைக்கு (அமெரிக்க மத்திய நாடாளுமன்றம்) ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்டு தோல்வி கண்டார். மீண்டும் 2004ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி கண்டு அமெரிக்க செனற்சபைக்கு தெரிவு செய்யப்பட்டார். 'இலினோஸ்' மாகாண சபையின் பிரதிநிதி என்ற நிலையில் இருந்து மாறி பின்னர் மத்திய நாடாளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். பெப்ரவரி 10, 2007 இல் முதன் முதலில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட போவதனை அறிவித்தார். முதல் ஆறுமாத காலத்தினுள் தேர்தல் நன்கொடை நிதியாக 58 மில்லியன் டொலர் பணம் இவரால் இவரின் ஜனாதிபதி தேர்தல் நிதியாக சேகரிக்கப்பட்டது ஒரு பெரிய சாதனையாக கருதப்பட்டது.

நவம்பர் - 04 -2008 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியாக பெரும் வெற்றி கொண்டார். இதேநாள் அமெரிக்க மத்திய நாடாளுமன்றத்தின் போட்டியிலும் இவர் தலைமை வகிக்கும் ஜனநாயக கட்சியே பெரும் வெற்றி கொண்டது. அமெரிக்காவில் ஐந்தாவது கறுப்பின செனற்சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பெருமையும், முதல் கறுப்பின ஜனாதிபதி என்ற ஒரு வரலாற்று பெயரை தனக்கு உருவாக்கியுள்ளார்.

**ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வருமானம்** - அமெரிக்காவில் பொதுவாக ஜனாதிபதியின் வருட சம்பளம் 2001ஆம் ஆண்டிலிருந்து வருடம் ஒன்றுக்கு $400,000 டொலராக உயர்த்தப்பட்டதுடன் $50,000 டொலர் மேலதிக ஜனாதிபதியின் செலவுகளுக்கும் வழங்கப்படுகின்றது. ஆனால் இவர் வக்கீலாக பணி புரிந்த காலத்தில், இத்தொழிலிலும், அமெரிக்க சட்டங்கள் தொடர்பாக வெளியிட்ட புத்தக விற்பனையிலும் பலமில்லியன்களை வருடம் ஒன்றுக்கு உழைக்கும் திறமை படைத்து சாதனை படைத்தவர்.

**மனைவி** - மிசேல் லாவாகான் ஒபாமா. (Michelle Lavughan - Obama). 1964 ஜனவரி 17 இல் சிக்காக்கோ நகரில் பிறந்த முற்றுமுழுதான கறுப்பினப்பெண். சமூகவியல் துறையில் கலைமானி பட்டமும் (B.A) சட்டத்துறையில் பயின்று வக்கீல் பட்டமும் பெற்று வக்கீலாக தொழில் புரிந்தவர். ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது, கணவனின் தேர்தல் பிரச்சாரத்திற்காக முன்னின்று உழைத்தவர்.

**திருமணமும் பிள்ளைகளும்** - 1992 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட இவர்களுக்கு இரு பெண்பிள்ளைகள் உள்ளனர். 1998இலும், 2001இலும் பிறந்த பிள்ளைகள் ஆவர்.

விவாகரத்து வழக்கினால் குழம்பிப்போனது நான் மட்டுமல்ல எனது கிறடிட்டும் தான் எப்படி இதனை மீள கட்டியெழுப்புவது?

உறவுகளுக்கிடையில் வீட்டினை பெயர்மாற்றி புதிய மோட்கேச்சுக்கு செல்வதனால் நன்மையுண்டா ?

வீட்டு விலை ஏற்றத்தினை பயன்படுத்தி அதிகளவு வட்டி செலுத்தும் அனைத்து கடன்களையும் ஒன்றாக்கலாமா?

நீங்கள் சுயதொழில் புரிபவராக இருந்தாலென்ன கைக்காசுக்கு உழைப்பவராக இருந்தாலென்ன, வருமான முறைக்கேற்ப மோட்கேச் ஒழுங்கு செய்து தரப்படும்

ஏற்கனவே உள்ள மோட்கேச்சினை பெனால்ட்டி கட்டி பிரேக்பண்ணினால் நன்மையுண்டா?

# செக்கண்ட் மோட்கேச் தேவையா?

# வோக் - இன் மோட்கேஜ் கிளினிக்

## சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm வரை



# 416-644-3555



**CENTUM Rapid Mortgages Inc.**
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc.
Independently Owned and Operated, Brokerage
"Rapid Response, Rapid Results"

⟹ **"Rapid Response; Rapid Results"**
FSCO LIC # 10156

# விளையாட்டுத் தகவல்கள்

340

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் அவுஸ்திரேலியாவில் சாதனை



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் இரத்தினசிங்கம் செந்தூரன் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் விக்டோரியா விளையாட்டுப் போட்டியில், உயரம் பாய்தலில் பங்குபற்றி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார். அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகர், அல்பேர்ட் பார்க்கில் நடைபெற்ற இந்த போட்டியில் 1.95 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார். இவர் தேசிய கனிஸ்ட பிரிவு உயரம் பாய்தலில் 1.92 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை நிகழ்த்தியிருந்தார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் விக்டோரியா மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினைப் பெற்றிருந்தார். வடக்கைச் சேர்ந்த செந்தூரனுடன் இப்போட்டிக்கு இலங்கையிலிருந்து எட்டு வீரர்கள் அவுஸ்திரேலியா சென்றமை குறிப்பிடத்தக்கது. செல்வன் இரத்தினசிங்கம் செந்தூரன் ஐ விளம்பரம் பத்திரிகையும் வாழ்த்துகின்றது.

## பீலேவின் சாதனையை முறியடித்தார் மெஸ்சி

ஒரு ஆண்டில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார் அர்ஜென்டினாவின் லியோனல் மெஸ்சி. மாட்ரிட் நகரில் நடந்த ஸ்பானிஷ் லா லிகா உள்ளூர் கால்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா, மாலோர்கா அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய பார்சிலோனா அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா அணி இதுவரை விளையாடிய 11 லீக் போட்டியில் 10 வெற்றி, ஒரு டிரா உட்பட 31 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. இப்போட்டியில் இரண்டு கோல் அடித்த பார்சிலோனா அணியின் அர்ஜென்டினா வீரர் லியோனல் மெஸ்சி, இந்த ஆண்டு இதுவரை விளையாடிய உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகளில் மொத்தம் 76 கோல் அடித்துள்ளார்.

இதன்மூலம் ஒரு ஆண்டில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் பிரேசில் வீரர் பீலேவை பின்தள்ளி இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். கடந்த 1958ல் சான்டோஸ் மற்றும் பிரேசில் அணிக்காக விளையாடிய பீலே 75 கோல் அடித்தார். மெஸ்சி இன்னும் கூடுதலாக 10 கோல் அடிக்கும் பட்சத்தில், ஜேர்மனி வீரர் ஜெர்டு முல்லரை பின்தள்ளி முதலிடம் பிடிக்கலாம். பேயர்ன் முனிக் மற்றும் மேற்கு ஜேர்மனி அணிக்காக விளையாடிய முல்லர், கடந்த 1972ம் ஆண்டு 85 கோல் அடித்து முதலிடத்தில் உள்ளார்.

## அவுஸ்திரேலியா- தென் ஆப்ரிக்கா முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று விளையாடுகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது. 4வது நாள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 487 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில், நாளை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுகளை தொடர்ச்சியாக இழந்து 565 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்தி கொள்வதாக அறிவித்தது. இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை எடுத்தது. இதனை தொடர்ந்து போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொள்ள அவுஸ்திரேலிய அணி சம்மதித்த நிலையில், போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைவதாக அறிவிக்கப்பட்டது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆப்பிரிக்க அணி 450 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்ததோடு, இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முழுமையாக இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. போட்டியின் நாயகனாக அவுஸ்ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவானார்.

**எஸ். கணேஷ்**



# எழுத்தாளர் இணையத்தின் இருபதாவது ஆண்டு விழா!

'அடுத்தாண்டு கனடா எழுத்தாளர் இணையத்தின் இருபதாவது ஆண்டாகும். அதனை முன்னிட்டு விழா மலர் ஒன்று வெளியிட உத்தேசித்துள்ளோம். அம்மலருக்கான சிறந்த கட்டுரைகள், கதைகள், நாடகங்களை எழுத்தாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். கிடைக்கப்பெறும் விடயதானங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவை மலரில் பிரசுரிக்கப்படும். அவுஸ்திரேலியாவில் உள்ள சாகித்திய விருது பெற்ற பிரபல எழுத்தாளரான திருமதி கோகிலா மகேந்திரன் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளார்'.

ஸ்காபுறோ சிவிக் சென்ரர் நிலையத்தில் கனடா எழுத்தாளர் இணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுகதை பட்டறை வைபவத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றிய தலைவர் திரு. சின்னையா சிவநேசன் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 'இன்றைய காலகட்டத்தில் நம்மவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கம் வெகுவாக அருகி வருகின்றது. இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையிலேயே இத்தகைய பட்டறைகளை நாம் தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளோம். எதிர்வரும் வெள்ளிக்கிழமை, நொவம்பர் 16ஆம் திகதிமாலை ஆறு மணிக்கு இதே மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறும். எழுத்தாளர்கள், வாசகர்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார்.

பிரபல எழுத்தாளரான திரு. குரு அரவிந்தன் சிறுகதையின் அம்சம் பற்றி விளக்குகையில் சிறு கதைக்கு கரு, கதை சொல்லும் பாணி, எழுத்து நடை ஆகிய மூன்றும் முக்கியமாகும். உண்மைச் சம்பவங்களை கருப் பொருளாகக் கொண்டு சிறுகதைகளை எழுதும்போது அதனுடன் கற்பனையையும் கலந்து எழுத வேண்டும். அப்போது தான் அப்படைப்பு சிறப்படையும். ஈழத்திலுள்ள இன்றைய இளம் தலைமுறையினர் தரமான சிறுகதைகளை எழுதும் ஆற்றல் மிக்கவர்களாக உள்ளனர். மகாஜனா கல்லூரியின் சார்பில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலாம், இரண்டாம் பரிசுகள் முறையே மகாஜனாக் கல்லூரி மாணவனுக்கும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிக்கும் வழங்கப்பட்டன. அவர்கள் எழுதிய சிறுகதைகள் சிறந்த முறையில் எழுதப்பட்டிருந்தன என்றார்.

சிறந்த எழுத்தாளரான ஸ்ரீரஞ்சனி உரையாற்றிய போது 'எமது பிள்ளைகளுக்கு இளவயதிலிருந்தே சிறுகதைகளை வாசிக்கும் பழக்கத்தினை பெற்றோர் ஏற்படுத்த வேண்டும். நாமெல்லாம் சிறுவர்களாக இருந்த போது எமக்கு கதை சொல்லி தூங்க வைத்த எமது பெற்றோர் பின்னர் நாம் பாடசாலைக்கு செல்ல ஆரம்பித்த பின்னர் நாம் கதைப் புத்தகங்களை வாசிப்பதற்கு தடை விதித்தார்கள். காரணம் நாம் அவற்றை வாசித்தால் பாடங்களில் கவனம் செலுத்த மாட்டோம் என்பதாகும். இருப்பினும் நான் ஒளித்து ஒளித்து கதைப் புத்தகங்களை வாசித்ததினால் தான் இருபத்தி நான்கு வயதிலிருந்தே என்னால் சிறுகதைகளை எழுதக் கூடியதாக இருந்தது' என்றார்.

கவிஞர் கந்தவனம் அவர்கள் உரையாற்றிய போது, 'David Alanco என்பவர் தான் சிறுகதைக்கு முதன் முதலில் வரைவிலக்கணம் வகுத்தவராவார். சிறுகதைகளுக்கு முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன முக்கியமானவையாகும். ஆரம்ப காலங்களில் சிறுகதைகள் இரண்டு மணிநேரம் வாசிக்கக் கூடியவையாக இருந்தன. ஆனால் அவை காலக்கிரமத்தில் ஒரு மணிநேரம் வாசிக்கக் கூடியவையாகவும் பின்னர் அரை மணிநேரம் வாசிக்கக் கூடியவையாகவும் குறுகி விட்டன. தற்போது ஒரு நிமிடக் கதைகளும் வெளிவருகின்றன. நான் கூட அத்தகைய கதைகளை எழுதி உள்ளேன்' என்றார்.

வீரகேசரி மூர்த்தி உரையாற்றிய போது, 'நான் சிறுகதை எழுதுவதற்காக கருப்பொருளைத் தேடி அலைவதில்லை. மனதைக் கவரும் உண்மைச் சம்பவங்களைக் கண்ட பின்னரே அவற்றைக் கருவாகக் கொண்டு கதைகளைப் புனைவேன். குறிப்பாக சமூகத்தில் நடைபெறும் மோசடிகள், மூடக் கொள்கைகள் ஆகியவற்றினை சகித்துக் கொள்ள முடியாமல் அவற்றினை கருப்பொருளாக வைத்து சமூகத்தை விழிப்படையச் செய்யும் வகையிலான சிறுகதைகளை எழுதி வருகின்றேன்' என்றார்.

**Free Real Estae Class**
Free Realestate Class
Call: **416.321.6969**

# அரசின் ஆதனத்தின் மீதான மதிப்பீடு

## Tax Assessment

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 378**

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஆதனத்தின் பெறுமதி அதிகரித்து வந்துள்ளது. முக்கியமாக கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக குறிப்பிட்டளவு விலை அதிகரிப்பு



ஏற்பட்டுள்ளது. இது ஒரு நல்ல செய்தியாக பலரிற்கும் இருக்கும். ஆனால் இதில் உள்ள துக்கமான விடயம் என்ன என்றால், இதனால் எதிர்வரும் நான்கு வருடங்களிற்கு அதிகமான சோலை வரி (Property Tax) ஐ அரசிற்கு செலுத்த வேண்டியிருக்கும்.

ஒக்ரோபர், நவம்பர் மாதங்களிலிருந்து எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குரிய (2013, 2014, 2015, 2016) ஆதனத்தின் மதிப்பீடு அரசின் சார்பாக MPAC [(Municipal Property Assessment Corporation) = (MPAC)] அனுப்பி வைத்துள்ளது. இந்தப் பெறுமதியைக் கொண்டே எதிர்வரும் நாலு வருடங்களிற்குரிய சோலைவரி (Property Tax) கணக்கிடப்பட வேண்டியிருக்கும். சராசரியாக, ரொறொன்ரோவின் குடியிருப்பாளர்கள் 22.8% ஆன ஆதன விலை அதிகரிப்பை 2008 இலிருந்து காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த ஆதன மதிப்பீடு 2008 இன் இறுதிப்பகுதியில் அனுப்பப்பட்டது. அதனை ஆதாரமாகக் கொண்டே கடந்த நான்கு வருடங்களாக 2009, 2010, 2011, 2012) சோலை வரி செலுத்தப்பட்டது. ஒவ்வொரு நகர-சபை கிராமசபை (Municipal Council)களும் தமக்குரிய வரி வரி வீதத்தை அந்தந்த ஆண்டிற்குரிய வரவுசெலவு திட்டத்தை முன் வைக்கும்போது வெளியிடுவார்கள். அதனைக் கொண்டே புதியவரி கணக்கிடப்படும்.

(உதாரணமாக, ரொறொன்ரோவின் 2012 ஆம் ஆண்டிற்கான குடியிருப்பிற்குரிய வரிவீதம் (Tax Rate) 0.80% எனவும் வீட்டின் பெறுமதி $400,000 ஆகவும் இருந்தால், 2012 இற்கான சோலை வரி (Property Tax) $400,000 X 0.80 = $3,200 ஆகும். 2012 இற்குரிய சோலைவரி $3,200 ஆகும்.

குறிப்பு - உங்களிற்கு கிடைத்திருக்கும் ஆதனத்தின் பெறுமதியில் உடன்பாடு இல்லாமல் இருப்பின் MPAC உடன் தொடர்பு கொண்டு, இதனை உறுதி செய்து கொள்ளலாம்.

இணையதள முகவரி - www.aboutmyproperty.ca


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

**"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"**



**Raja Mahendran,** P.Eng.
Broker / Owner

**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666**

## DENTAL OFFICE SPACE FOR SALE
### MIDDLEFIELD & FINCH

About 1800 sq.ft in GTA Square mall.
Two designated parking & locker.
2 seperate washroom.
Call for price.

## CONDO FOR SALE NEILSON & MCLEVIN



*1 Bedroom. 1 Washroom. 1 parking. Close to Malvern mall. Price $129,900*

## For your rent / lease www.just2rent.com

## CONDO. SALE
### (Bank Sale)

- **WARDEN & FINCH**
- 2 Bedroom + den
- 2 Washroom
- Price129,000

## CONDO. FOR. SALE KENNEDY & HWY 401



*1+ Den condo. 1 Parking. Close to HWY 401, mall. Asking Price $269,900*

## CONDO FOR SALE SALE DONMILLS & EGLINTON



*2 Bedroom condo. 1 Washroom. Close to science center. Price $139,900*

## BUSINESS SPACE FOR LEASE ON MAIN FLOOR



*2000 sq.ft. 480sq.ft. Zoning for retail or professional office.*

# நீதிமன்றத்தில் எதிராக நின்று வாதிடும் பொலீஸ் விசாரணையில் வெளிவிடும் வார்த்தைகள்

***Anything you said to police could be used as evidence in court.***

## கனடிய தகவல் தொடர் 184

'மனிதனின் வாழ்வில் ஏற்படும் அனுபவங்கள் என்பது ஒரு திறந்த வெளி பல்கலைக்கழகம் மாதிரி'
இது கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீஸ் சொன்ன வார்த்தை!

சரி! விடயத்திற்கு வருகிறேன்! ஏனெனில் இப்படியும் சில சம்பவங்கள்.

பொலீஸ் உத்தியோகத்தர் வந்து அந்த பெண்ணின் வீட்டுக் கதவினை தட்டுகிறார். வீட்டில் உள்ளவர்களுக்கு வியப்பு! அமைதியாக, பண்பாக கேள்வியினை ஆரம்பிக்கின்றார். 'Yesterday' after noon your vehicle involved any collision on street? (நேற்று மாலை உங்கள் வாகனம் வீதியில் ஏதாவது விபத்துக்குள்ளானதா?) இதுவே கேள்வி! 'அது ஒரு பெரிசாக குறிப்பிடும் விபத்தோ அல்லது பாதிப்போ இல்லை. சும்மாய் முட்டுப்பட்டது' (Just Touching). 'அந்த இடத்தில் நாங்களே பேசி தீர்த்து விட்டோம்' இது வழங்கப்பட்ட பதில்! அந்த இடத்தில் பேசி தீர்த்த மற்றப் பகுதிக்கு காப்புறுதி கம்பனியில் இந்த சந்தர்ப்பத்தில் பணம் கறக்கலாம் என எவரோ மூளைச் சலவை செய்துவிட்டனர். அந்தப் புத்திமதி பொலீஸ் முறைப்பாட்டில் என்பதனை புரிந்து கொள்ள அங்கு அவகாசம் அவர்களுக்கு இருக்கவில்லை.

பொலீஸ் உத்தியோகத்தர் தமது சிறு நோட் புத்தகத்தினை எடுத்து கண்ணியமாக கேள்விகளை கேட்டுக் கேட்டு எழுதத் தொடங்குகின்றார். 'உங்கள் பெயர், விபரங்கள்' எந்த இடத்தில்? எந்த நேரம்? எப்போது நடந்தது? என்னமாதிரி விபத்து நடந்தது. முடிவில் அந்த சிறு நோட் புத்தகத்தில் ஒரு சிறு கையொப்பம். இறுதியில் இரு தண்டனை ரிக்கற்றுகள்! 'Careless Driving' (கவனமில்லாத வாகன ஓட்டம்). 'Fail to Yield to Other Vehicle' (மற்ற வாகனத்திற்கு முதல் உரிமை வழங்கத் தவறியது) குறிப்பிட்ட சட்டப்பிரிவின் கீழ் தண்டனை பணமும் குறிப்பிடப்பட்டிருந்தது. விரும்பினால் நீதிமன்றத்திற்கு மனு செய்யுங்கள். குற்றித்தினை ஏற்றுக் கொள்ளும்போது தண்டனைக் குறைப்பு வழங்குவார்கள் என பொலீசார் ஆலோசனையும் வழங்கி விட்டு போயிருந்தார்.

சரி இன்னொரு சம்பவத்திற்கு வருகிறேன்.

வேற்றினத்தைச் சேர்ந்த சாரதி பயிற்றுனர் ஒருவர் வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுத்துக் கொண்டு இருக்கும்போது வாகனம் பழகுபவர் திடீரென வேகப் பெடலை (Acceletator) வேகமாக மிதிக்க, சாரதிப்பயிற்றுனர் பாதுகாக்கத் தெரியாத நிலையில் வாகனம் வீதியோரமாகவிருந்த சிறு கம்பம் மற்றும் அதிலிருந்த இருந்த தபால் பெட்டியுடன் மோதி விட்டது. அந்த இடத்தால் நடந்து வந்த ஒருவர் அந்த அதிர்ச்சியில் பனிக்கட்டிக்குள் சறுக்கி விழுந்து விட்டவனாக இருக்க வேண்டும்.

அங்கு விழுந்த பாதசாரிக்கு காப்புறுதியிலிருந்து பணத்தினை பெறலாம் என ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் அவரோ மூளைச் சலவை செய்திருக்க வேண்டும். சில நாட்கள் கழித்து பொலீஸ், பனிக்கட்டிக்குள் விழுந்தவனை நேரே அழைத்துவந்து அந்த சாரதி பயிற்றுனரின் வீட்டுக் கதவினை தட்டினார். கண்ணியமான பொலீசாரின் விசாரணை யில் சாரதி பயிற்றுனர் நடந்த எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். நான்கு பாரிய குற்றசாட்டில் தண்டனை ரிக்கற்றுகள். வாகனம் ஓடப் பழகியவரின் விபரங்களையும் சாரதி பயிற்றுனரிடமே இருந்து பெற்று அங்கு தேடிப்போய் பொலீஸ் விசாரணை செய்ய அவரும் பொலீசாரின் கேள்விகளுக்கான பதிலை சொல்லிவிட்டார்.



இந்த இரு சம்பவங்களிலும், நீதிமன்ற விசாணையில் பொலீஸ் உத்தியோகத்தரின் கேள்விகளுக்கு இவர்கள் இருவரும் வழங்கிய பதில்கள் யாவும் குற்றச்சாட்டில் இவர்கள் நிரபராதி என வாதாடி தப்பிக்க முடியாத அளவுக்கு இறுக்கி கொண்டு இருந்து விட்டது. இவற்றினை பொறுப்பு எடுத்த சட்ட உதவியாளர்களினாலும் (Para Legal Professionals) ஒன்றும் செய்ய முடியாத நிலைமை! குற்றங்களை ஏற்றுக்கொண்டு தண்டனை குறைப்புக்கு கோருவதனை தவிர வேறு வழியே இல்லாத நிலைமை!

இத்தகைய நிலைமைகளில் ரொறொன்ரோவின் பிரபல்யமான கிரிமினல் வக்கீல் திரு. டானியல் பிரவுண் (Mr. Daniel Brown) அவர்கள் கனடாவின் அரசியல் அமைப்பு சட்டத்தில் உள்ள மனித உரிமைகள் சட்டம், சுதந்திரம் (The Canadian Charter Rights & Freedoms which part of Canada's Constitution) என்பது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"கிரிமினல் குற்றசாட்டுகள் உட்பட எந்த குற்றசாட்டுகளிலும் குற்றம் நிரூபிக்கப் படாத வரை குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியே ஆவார். சம்பவம் தொடர்பான விசாரணையில் பதில் சொல்லாது மௌனமாக இருக்கும் உரிமை குற்றம் சாட்டப் பட்டவருக்கு உண்டு. அவசரப்பட்டு சொல்லும் வார்த்தைகளை பொலீசார் தங்களுக்கு எதிராக உபயோகப்படுத்தும் போது அதிலிருந்து தப்பமுடியாது. *'Any thing you said to the police, could be used as evidence in court)*** இவ்வாறு குறிப்பிடுகின்றார்.**

ஸ்காபரோ 42 பிரிவு பொலீஸ் நிலையத்தின் உள்ளே பெரிய எழுத்தில் சுவரில் ஒரு பதாதையில் மனித உரிமைகளை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கியமாக கைது செய்யப்பட்டு உள்ளே வந்திருக்கும் எவரும் தங்கள் வக்கீலுடன் ஆலோசனை பெற்றுவிட்டு பதில் வழங்கும் உரிமை உண்டு. எனவே கைது செய்யப்பட்டு வைத்திருப்பவர் இங்கு இருந்தே தனியாக வக்கீலுடன் ஆலோசனை நடத்தும் உரிமையும், சுதந்திரமும் பொலீஸ் நிலையத்தில் இருந்தே வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

எந்த சந்தர்ப்பத்திலும் பொலீசார் பெயர், விபரங்கள், கேட்கும் போது பொய் சொன்னால் குற்றம். அடையாள அட்டைகளுடன் நிரூபித்து உண்மையினை கூறலாம். கூறாது விட்டால் கைதும் செய்யலாம். வாகனத்தினை வீதியில் நிறுத்தி, லைசென்ஸ், இன்சூரன்ஸ், வாகன பதிவுகள் காட்டுமாறு கேட்டு, காட்டாது விட்டாலும் தண்டிக்கப்படலாம்.

ஆனால் சம்பவம், பிரச்சினை ஒன்றின் விபரங்கள் பற்றி கேட்கப்படும் போது உடனடியாக பதில் கூறாது விட்டால் அது மனித உரிமை சட்டத்தில் கனடாவில் வழங்கப்பட்ட சுதந்திரம் என்பது சட்டத்துறைசார்ந்த நிபுணர்கள் குறிப்பிடும் வார்த்தைகள் ஆகும். இதனையே Canadian Civil Liberties Association தங்களின் அறிக்கைகளில் தெரிவிக்கின்றனர். எனது சட்டத்துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து விட்டே கூறுவேன் என்றால் அது அடிப்படை உரிமை ஆகும்.

சரி! கனடாவின் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் மனித உரிமையினை மீறினால் அதற்கும் முறைப்பாடு செய்யும் இடம் உண்டு.

**பொலீசாருக்கு எதிராக முறைப்பாடு செய்யும் நியாயமன்றம்**
பொலீஸ் உத்தியோகத்தர்



தொடர்ச்சி 10ஆம் பக்கம்


**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment

சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# காலத்தோடு வளரும் கணினிகள் - 9

கடந்த இதழில் கணினியில் உள்ள உள்ளீட்டுக்கருவிகளைப் (Input Devices) பற்றியும், வெளியீட்டுக் கருவிகளைப் (Output Devices) பற்றியும் கவனித்தோம். இப்பொழுது உங்களால் கணினிப்பாவனையில் காணப்படும் கருவிகள் (Devices) உள்ளீட்டுக் கருவியா அல்லது வெளியீட்டுக் கருவியா என்பதை இலகுவாக ஊகித்து அறிந்து கொள்ளலாம். கணினிக்குள் தகவல்களை உட்செலுத்த உதவும், விசைப்பலகை அல்லது மின்னணுத் தட்டச்சு (Electronic keyboard) மைக்கிரோபோன், குறியமுத்தி (Mouse), மின்பிரதிச் சாதனம் (Scanner), எண்ணியல் நிழற்படச் சாதனம் (Digital Camera) போன்ற கருவிகள் எல்லாம் உள்ளீட்டுக் கருவிகள் (Input Devices) ஆகும். மின் பிரதிச் சாதனமானது அச்சடிக்கப்பட்ட தாளில் அல்லது படத்தில் உள்ள தகவல்களைப் பிரதி செய்து எண் முறையில் மாற்றிக் கணினியுள் செலுத்துகின்றது.

கணினியில் இருந்து தகவல்களை வெளிக்கொணர உதவும் திரையகம் அல்லது மின்னணுத் திரை (Monitor). ஸ்பீக்கர், மின்னணு அச்சேற்றி (Electronic Printer) போன்றவை வெளியீட்டுக் கருவிகள் (Output Devices) ஆகும். காலத்தோடு வளரும் கணினி உலகில் பல புதிய உள்ளீட்டுக் கருவிகளும், வெளியீட்டுக் கருவிகளும் அவ்வப்போது வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.




நாங்கள் எல்லோரும் அடிப்படைக் கணினியறிவு கொண்டவர்களாக இருப்பது காலத்தின் கட்டாயம் என்று சொல்லிக் கொள்ளலாம். கணினிக்குப் புதியவர்கள் கட்டாயமாக இந்தக் கட்டுரையை வாசிக்க வேண்டும். கணினியறிவு கொண்டவர்களுக்கும் தங்கள் அறிவை விரிவுபடுத்த இந்தத் தொடர்கட்டுரை உதவலாம் எனவும் நம்புகின்றேன். நாளாந்தம் கணினியைப் பாவிப்பவர்களுக்கும் கூட இந்தக் கட்டுரை சில விடயங்களில் மேலும் தெளிவினைக் கொடுக்கக் கூடும்.

ஒரு கணினியில் உள்ள அடிப்படையான கருவிகள் (Essential Devices) மையச் செயற்பாட்டகம் (Central Processing Unit - CPU), விசைப்பலகை (Keyboard), திரையகம் (Monitor) என்பவை ஆகும் என முன்பு குறிப்பிட்டிருந்தேன். நுகர்வோர் கணினிகளில் (Personal Computers) ஒரு பெட்டி (Case) போலாக காணப்படும் மையச்செயற்பாட்டகம் பற்றிச் சற்று விரிவாக ஆராய்வோம். மனிதரில் காணப்படும் மூளையைப் போன்றது கணினியின் மையச்செயற்பாட்டகம். இதனுள்ளே பிரதான மின்னணுத் தட்டு (Motherboard) உள்ளது. மின்னணு இணைப்பு (Bus) என்பது மின் தொடர்பியல் இணைப்புக்களைக் குறிக்கும். இந்த இணைப்புக்களை மின் தட்டில் செம்பிலான (Copper) நுண்ணிய இணைப்புகளாகவும், மின் கம்பிகளாகவும் காணலாம். ஒரு கணினியின் செயற்பாட்டை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். தகவலை உட்செலுத்தல், தகவலை செயற்படுத்தல் அல்லது பரிமாற்றம் செய்தல் (Processing), தகவலை வெளிப்படுத்தல் (Output) என்பவை இவை ஆகும். இந்த மூன்றும் சேர்ந்துதான் கணினியின் இயக்கம் அமைகின்றது. நாளாந்தம் பாவிக்கும் கணினியின் பாகங்களைப் (Components) பற்றியும் அவற்றின் செயற்பாட்டினையும் விளங்கிக் கொள்ளுதல் முக்கியமானது. மின்னணுத் தட்டில் பொருத்தப்பட்டிருக்கும் செயற்பாட்டகம் (Processor) தகவற் பரிமாற்றத்தினை அல்லது செயற்படுத்தலைச் செய்கின்றது. வெளியுலகில் இருந்து செயற்பாட்டகத்திற்கு அல்லது ஒரு பாகத்திலிருந்து இன்னொரு பாகத்திற்குத் தகவல்களை எடுத்துச் செல்லுவது உட்செலுத்தல் (Input) ஆகும். உதாரணமாக மின்னணுத் தட்டச்சில் உள்ள அழுத்திகளை அழுத்தும் பொழுது தகவல்கள் கணினியின் பிரதான மின்னணுத் தட்டில் காணப்படும் நினைவகக் குதங்களில் (Memory Chips) பதியப்படுகிறது. மின்னணுத் தட்டில் காணப்படும் நிலையற்ற நினைவகம் (ரண்டம் அக்சஸ் மெமோறி Random Access Memory - RAM) என்பது ஒரு தற்காலிக நினைவகம் ஆகும். இதில் பதியப்படும் தகவல்கள் மின் துண்டிக்கப் படுகையில் இழக்கப்படுவதால் இதனைத் தற்காலிக நினைவகம் (Temporary Memory) என்று கூறப்படுகின்றது. இது தற்காலிகமானதாக இருந்தாலும் ஒரு கணினியின் தொழிற்பாட்டில் மிகவும் முக்கியமானது. கணினியில் உட்செலுத்தப்படும் தகவல்கள் இந்தத் தற்காலிக நினைவகத்திலேயே தங்கி நிற்கின்றன. இந்த RAM Chip இனது அளவு 512 MB , 1GB, 2GB அல்லது 4GB ஆக இருப்பதுடன் கணினியின் வேகத்தினையும் தீர்மானிக்கும் காரணியாகவும் விளங்குகின்றது. கணினி தொழிற்படுவதற்கான இடவசதியைக் கொடுப்பதாக இந்தத் தற்காலிக நினைவகம் விளங்குவதால் இடவசதி குறையும் போது கணினியின் வேகமும் குறைகின்றது. பிரதான மின்னணுத் தட்டில் வாசிக்க மட்டும் இயலும் நினைவகம் (Read Only Memory – ROM) என மேலும் ஒரு நினைவகக் குதம் (Memory Chip) இருக்கின்றது. கணினியை உற்பத்தி செய்பவர்கள் கணினி இயங்கத்தொடங்கி வின்டோஸ் 7 போன்ற இயக்க மென்பொருளின் கட்டுப்பாட்டுக்குள் செல்வதற்கு முன்பு செயற்படும் ஒரு மென்பொருளை இதனுள் வைத்துள்ளார்கள். இந்த மென்பொருளை கணினி பாவிப்பதைத் தவிர எங்களால் மாற்றீடு செய்ய முடியாததால் Read Only Memory என அழைக்கின்றோம். ROM இன் அளவைப் பற்றியும் யாரும் அலட்டிக் கொள்வதில்லை. மேலும் பிரதான மின்னணுத் தட்டில் பல மின்னணுக் குதங்கள் (Electronic Chips) உள்ளன. இவையெல்லாம் சிலிக்கோனாலும் (Silicon), செமிகொண்டக்ரலாலும் (semi-conductors) செய்யப்பட்டவை. பல இணைப்புக்களை மேற்கொள்வதற்கான விரிவாக்க இணைப்புக்களையும் (Expansion Slots) பிரதான மின்னணுத் தட்டில் காணலாம். மையச் செயற்பாட்டகத்தின் (CPU) உள்ளே நிரந்தரச் சேமிப்பகமும் (Hard Disk or Fixed Disk) உள்ளது. அநேகமான புதிய கணினிகள் 200 GB சேமிக்கும் அளவு கொண்டதாக உள்ளன. பிரதான



**- அகணி -**

authorakani@yahoo.com

தொடர்ச்சி 10ஆம் பக்கம்




# GTA Square இல் அமைந்துள்ள Heros Catering உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்க வேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.

**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு *November 27* இற்கு முன்பாக தொலைநகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)* மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர்களுள் ஒரு அதிஷ்ட சாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Heros Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**
(* Some conditions may apply)

• **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)* 416.282.8059 இல் தொடர்புகொள்ளவும்.**

போட்டி இலக்கம் 3இல் வெற்றிபெற்றோர் N. கருணாகரன், பிரம்ரன்

### போட்டி இலக்கம் - 4

| | | | |
|---|---|---|---|
| 4 | 24X | 3- | 3+ |
| 4+ | | | |
| | | 24x | 3 |
| 2÷ | | | |

### விடை- போட்டி இலக்கம் - 3

| | | | |
|---|---|---|---|
| 2 | 4 | 1 | 3 |
| 4 | 3 | 2 | 1 |
| 3 | 1 | 4 | 2 |
| 1 | 2 | 3 | 4 |

***Instructions:*** 1. Each row and each column must contain the numbers 1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

# நீதிமன்றத்தில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒருவர்
கனடாவில் பொது மனிதன் எவருடனாவது நியாமற்ற முறையில் நடந்து கொண்டால், அது தொடர்பான முறைப்பாடுகளை தங்கள் அலுவலகத்திற்கு கொண்டு வாருங்கள். புலன்விசாரணை செய்து நியாயமான தீர்வினை வழங்குவோம் என குறிப்பிட்டு இந்நியாமன்றத்தின் கதவுகள் பொதுமக்களுக் காக என்றும் திறந்த வண்ணமேயுள்ளது. “OFFICE OF THE INDEPENDENT POLICE REVIEW DIRECTOR” (OIPRED) என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இந்நியாய மன்றத்தின் அலுவலகம் ரொறொன்ரோவில் பின்வரும் விலாசத்தில் இயங்குகின்றது.

OIPRED
655, BAY STREET, 10TH FLOOR
TORNTO, ON, M5G 2K4
PHONE (416) 327.4965
FAX (416) 327.8332
இணையதளம்- WWW.OIPRED.ON.CA

ஒன்ராரியோ சட்டமாதிபதி அமைச்சின் (Arms - Length Agency of the Ontario Ministry of Attorney General) ஒரு பிரிவாக கனடாவில் பொலீசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல் உறவுகள், நம்பிக்கையை வளர்ப்பதற்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. இவ் ஆண்டுக்கு முன்னர் வேறு நிறுவனம் இவற்றினை கையாண்டு வந்தது.

முறைப்பாடு செய்யும் விண்ணப்ப படிவத்தினை மேலே குறிப்பிட்ட இந்நிறுவன இணையதளத்தில் பதிவு இறக்கம் செய்து எடுத்து நிரப்பியும் அனுப்பலாம். ஏதாவது பொலீஸ் நிலையத்தில் அல்லது நேரடியாக இவ் அலுவலகத்திற்கு சென்றும் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பப் படிவத்தினை தாங்களாகவும் நிரப்பலாம். இன்னொருவர் உதவியுடனும் நிரப்பலாம். இவ் அலுவலகத்திற்கு நேரே சென்றால் அங்குள்ள உதவியாளர்கள் நிரப்பி, இதனை முன் எடுப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவார்கள். ஆனால் சம்பவம் நடந்து ஆறு மாதத்திற்குள் முறைப்பாடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனால் இது சமர்ப்பித்து ஆறு மாததிற்கு பின்பு சற்று காலதாமதாகவும் இந்நியாயமன்ற இயக்குனர் இதனை கருத்தில் கொள்ளலாம். தாங்கள் விரும்பினால் வழங்கிய முறைப்பாட்டினை வாபஸ் வாங்கும் உரிமையும் உண்டு. ஆனால் ஒரு முக்கிய விடயம்! மறைந்து நின்று அனுப்பும் முறைப்பாடுகள் (Anonymous Complaint எவையும் சிறிதளவேனும் கருத்தில் எடுக்கப்பட மாட்டாது. தம்மை அறிமுகப்படுத்தி, அடையாளப்படுத்தியே முறைப்பாட்டினை முன் எடுக்க வேண்டும். தங்களின் முறைப்பாடு கிடைத்ததும், அது கிடைத்தது பற்றி கடிதம் (Acknowledgement Letter) அனுப்பி வைப்பார்கள். எந்த பொலீஸ் உத்தியோகத்தருக்கு எதிராக முறைப்பாடு செய்தீர்களோ? அவருக்கு உங்களின் பிரதி அனுப்பி அதற்குரிய பதில் நியாயம் கேட்டு சரி? பிழை? பற்றி தீர்மானிப்பார்கள்.

குற்றவாளி என பொலீஸ் உத்தியோகத்தர் குறிப்பிடப்பட்ட முறைப்பாடு விடயத்தில் முடிவு பண்ணப்பட்டால் அதற்குரிய நடவடிக்கைகள், தண்டனைகளை அவர்களே முன் எடுப்பார்கள். முறைப்பாட்டில் நியாயமில்லை யெனில் அதனையும் நிராகரிப்பார்கள்.

# காலத்தோடு...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

மின்னணுத் தட்டில் காணப்படும் செயற்பாட்டகத்தின் வேகம் (Processor speed) Hz இல் அளக்கப்படுகின்றது. புதிய கணினிகள் 2GHz இனை விட அதிக வேகம் கொண்டவையாக உள்ளன. மையச்செயற்பாட்டகத்தின் (CPU) உள்ளே காணப்படும் மின்வழங்கல் பாகம் 110 Volts or 220 Volts AC மின் சக்தியை மாற்றி DC இல் கணினியின் தேவைக்கேற்ப கொடுக்கிறது. கணினியில் உள்ள



மின் வழங்கி (Power Supply Unit) மேலதிகமான மின் சக்தியின் அளவைக் கட்டுப்படுத்துவதோடு இடிமுழக்கம், மின்னல் போன்றவற்றால் ஏற்படும் பாரிய மின் தாக்கத்தால் கணினி பழுதடையாமல் இருக்கவும் உதவுகிறது. CPU என அழைக்கப்படும் மையச்செயற்பாட்ட கத்தைக் கொண்ட பெட்டி தேவையற்ற மின் தொடர்புகளைக் குறைக்கவும், மின்னலைகளின் பாதிப்பைக் குறைக்கவும் உதவுகின்றது. இதனுள்ளே உள்ள பாகங்களின் தொழிற்பாட்டால் ஏற்படும் வெப்பத்தினால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு மின் விசிறிகளும் பொருத்தப்பட்டிருக்கும். மனிதர்களின் தலை சூடேறுவது போலாக செயற்பாட்டகமும் விரைவில் சூடேறும் தன்மை கொண்டது. இதற்காகவே செயற்பாட்டகத்தின் மேல் ஒரு மின் விசிறி பொருத்தப்பட்டிருக்கும். இது பற்றித் தொடர்ந்து உரையாடுவோம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**
**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**

நந்தா ஐயாத்துரை
*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

## UNPARALLELED ANTICIPATION DELIVERS CONDO WITHOUT EQUAL

# Tridel launches TEN YORK, Toronto's waterfront icon

Considered the biggest condominium announcement in the GTA of 2011, the release last November of preliminary details about TEN YORK from Tridel
generated headlines across North America.

"Less than a year after TEN YORK was first introduced to the public it is now poised to go on sale," says Jim Ritchie, Tridel's senior vice-president of sales and marketing. "The number of registrations that have steadily built since last November have been truly remarkable and demonstrate the heightened anticipation and pent up excitement for the launch of TEN YORK."

Since the announcement, Tridel has have been working with their architect Rudy Wallman, Toronto city staff and local politicians, area residents and an independent peer review panel to create a condominium worthy of all the excitement.

The result is an iconic 224-metre, 65-storey glass tower at the corner of York and Harbour that will serve as a dramatic and remarkable addition to the Toronto skyline, at a AAA downtown location.

Set on one of the most prominent locations in downtown Toronto, overlooking Lake Ontario and conveniently close to the subway, GO Train and VIA Rail service at Union Station, TEN YORK is steps away from the Air Canada Centre, Maple Leaf Square, the Rogers Centre and Harbourfront.

Boasting 694 residences starting from the mid $300,000's, the suites will range from smartly designed 564 s.f. one-bedroom suites to a spacious 3,858 s.f. three-bedroom design. Defined by the award-winning II BY IV Design Associates, the suites blend urban sophistication, timeless elegance, and modern technology (an imbedded fibre optic network throughout the building will provide lightning fast internet connection for residents).

Besides cutting edge technology, a prime location, and exquisite finishes, TEN YORK boasts an abundance of luxurious amenities. Offering a fully equipped fitness centre, as well as studios for spinning, yoga and cardio, and a juice bar and lounge ideally suited for a post-workout wind-down, there is also an outdoor infinity pool, spa, and separate men and women's saunas. The amenities also include a billiards room, media/gaming space, theatre, party venue and private dining room.

Reflecting on the amount of anticipation and attention that greeted the announcement of TEN YORK last year, Tridel's Jim Ritchie is pleased with the development his company has responded with, noting that the massive coverage and heightened expectations "raised the bar" for this condominium and for Tridel.

"With unparalleled anticipation, we felt compelled to deliver a condominium without equal and that's what we've done. TEN YORK is a one-of-a-kind condo opportunity for this market," he adds.

The TEN YORK Presentation Centre is located at 4800 Dufferin Street. Hours are Monday to Friday, from 11 a.m. to 7 p.m., and Saturday, Sunday and holidays from 12 p.m. to 6 p.m.

For more information call 416-596-9888,
e-mail tenyork@tridel.com
visit www.tridel.com





# நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

'ஓதுகின்ற மலக்கூட்டை ஒழிய வைத்தால் உடலிலுள்ள உபாதையெல்லாம் ஒழிந்து போகும்' என்பது சித்தர்பாடல்

மலச்சிக்கலும், மனச்சிக்கலும் ஆதிநோய்கள். இதில் மனச்சிக்கலைப் போக்கினால் மலச்சிக்கல் நீங்கும். இதுபோல் மலச்சிக்கலைப் போக்கினால் மனச்சிக்கல் நீங்கும். நோய் வருவதற்கு மலச்சிக்கல்தான் முக்கிய காரணியாகும். அதிக உணவு, நீண்டநேர பட்டினி, மன அழுத்தம் போன்றவற்றால் குடலில் புளிப்பு ஏற்பட்டு அதனால் குடலில் உள்ள அபாண வாயுவானது சீற்றம் கொண்டு சீர்கெட்டு குடலானது ஜீரண சக்தியை இழந்துவிடுகிறது. இதனால் வாயு அதிகமாகி, குடலிலுள்ள தேவையற்ற கொழுப்புகள் இறுகி, மலத்தை வெளியேற்றும் சக்தி குறைந்து விடுகிறது. இதனால் மலச்சிக்கல் ஏற்படுகிறது. வாயுவின் சீற்றம் மலச்சிக்கல் உருவாக முக்கிய காரணமாகின்றது. அபாண வாயு கீழ் நோக்கி பாயும் குணம் கொண்டது. மலச்சிக்கல் ஏற்படுவதால் வாயு வெளிவராமல் உடலில் உள்ள நரம்புகளில் தங்கி நரம்பு சம்மந்தப்பட்ட நோய்களை ஏற்படுத்துகின்றது.

மலச்சிக்கல்; இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களின் மூலகாரணமாக அமைகிறது. இதுபோல் பழைய மலங்கள் வெளியேறாது குடலில் தங்குவதால் சிறுபுண்கள் ஏற்பட்டு அவை தோல்வியாதி மற்றும் குடல் நோய், வயிற்றுக் கோளாறுகளை உண்டாக்குகின்றது. மேலும் ஒற்றைத் தலைவலி, மயக்கம், மார்பு நோய் போன்றவை தோன்ற ஏதுவாகின்றது. அத்துடன் மூலநோய் போன்றவற்றிற்கும் மலச்சிக்கலே காரணம். உண்ட உணவு சீரணமாகாமல் மேலும் மேலும் உணவு உட்கொள்வதால் சீரணிக்கும் சக்தி குறைந்து அஜீரணக் கோளாறு உண்டாகின்றது. இதனால் உடலில் பித்தம் அதிகரித்து ஒவ்வொருவரது உடற்கூறுகளுக்குத் தகுந்தவாறு மலத்தை இறுக்கமடையவோ அல்லது அடிக்கடி வெளியேற்றவோ செய்கிறது.

சிலர் மலச்சிக்கல் என்றால் மலம் இறுகி வெளியேறாதிருப்பது தான் என்று நினைக்கின்றனர். அதுவும் ஒருவகை மலச்சிக்கல்தான். அடிக்கடி மலம் வெளியேறுவதும் மலச்சிக்கல்தான். அதுபோல மனஅழுத்தம, திடீர் கோபம், தேவையின்றிய படபடப்பு போன்றவற்றாலும் மலச்சிக்கல் வரலாம். போதிய உடற்பயிற்சியின்மை, நீண்டநேரம் ஒரேஇடத்தில் அமர்ந்திருத்தல், மது, புகை பழக்கங்கள் இவற்றாலும் மலச்சிக்கல் உருவாகலாம். மலச்சிக்கலானது உடற்கூறுகளுக்குத் தகுந்தவாறு பாதிப்பை ஏற்படுத்தும்.



## பித்த உடற்கூறு கொண்டவர்களுக்கு

பித்த உடற்கூறு உள்ளவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படும்போது ஒற்றைத் தலைவலி, நெஞ்சுவலி, மார்புச்சளி, நுரையீரலில் சளி என்பன ஏற்படும். இதனால் பித்தமயக்கம், பித்தக்கிறுகிறுப்பு, அதிக இரத்த அழுத்தம் ஏற்பட வாய்ப்புண்டு.

## வாத உடற்கூறு உள்ளவர்களுக்கு

இவர்களுக்கு மலச்சிக்கல் உண்டானால் உடலில் உள்ள நரம்புகளில் வாயு தங்கி நரம்புகளை இறுகச் செய்து மூட்டுகளில் வலியை ஏற்படுத்தும். இதுபோல் தோள்பட்டை, முதுகுத்தண்டு, கை, கால் போன்றவற்றிலும் வலியை ஏற்படுத்தும்.

## கபஉடற்கூறு (நீர்) உள்ளவர்களுக்கு

இவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படும் போது கழுத்து, இடுப்பு, கைகள், கால்கள் போன்றவற்றில் நீர் கோர்த்து கொள்ளும். நடக்கும்போதும், இருந்து எழும்போதும் வலி உண்டாகும். அடிக்கடி ஜலதோஷம், மூக்கடைப்பு, சளி போன்றவற்றை ஏற்படுத்தும்.

பொதுவாக அதிக மூக்கடைப்பிற்கு மலச்சிக்கலும் ஒரு காரணமாகும். கை, கால், எரிச்சல், கண்புகைச்சல், தூக்கமின்மை போன்ற உபாதைகள் மலச்சிக்கலால் தான் ஏற்படுகின்றன. அதேபோல் மலச்சிக்கலால் இரத்த குழாய்களில் அடைப்பு உண்டாகி இதயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். உடலில் நீர்சத்து, நார்ச்சத்து குறைவதாலும் அதிக மருந்து மாத்திரைகளாலும் மலச்சிக்கல் ஏற்படும். குழந்தைகளிலிருந்து முதியோர்வரை மலச்சிக்கலே நோய்களின் ஆணி வேராகும்.

## மலச்சிக்கலைத் தவிர்க்க

உணவுமுறைகளில் மாற்றத்தைக் கடைப்பிடிப்பதன் மூலலே மலச்சிக்கலைப் போக்க முடியும். குளிர்காலமே அதிகமாக உள்ள கனடா போன்ற நாட்டில் வாழ்பவர்கள் எளிதில் செரிமானமாகக் கூடிய கீரை மற்றும் பச்சைக்காய்கறி வகைகளை அதிகம் உணவில் சேர்க்கவேண்டும். அதிகம் நார்ச்சத்து (Fiber) நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். பித்தத்தையும் வாயுவையும் அதிகரிக்கச் செய்யும் உணவுகளைத் தவிர்க்கவும். மலத்தை தினமும் இருமுறையாவது வெளியேற்று வது சிறந்தது. அதனை அடக்கக்கூடாது.

## நடைப்பயிற்சியும் யோகாவும்

தினமும் நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்பில்லை. அதனோடு சில குறிப்பிட்ட யோகாசனப் பயிற்சியையாவது மேற்கொண்டு வந்தால் இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் என்பன செம்மையாக இயங்கும்போது உடலிலுள்ள கழிவுகள் தங்காது வெளியேற்றப்படுகிறது. உடல் கழிவுகள் முறையாக அகற்றப்பட்டால் நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைந்து விடும்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# ஓடும் நீர் உறைவதில்லை 155

## என்ன நடக்கிறது?



அழகான மலை அடிவாரம்
இதமான அந்தி நேரக் காற்று
இயற்கையின் எழிலை
இரட்டிப்பாக்கி
இன்பத்தில் மூழ்கியது இதயம்.

அருகே ஒரு கல் ...

தன்மீது அமர்ந்து
இயற்கையின் அற்புதத்தை
அனுபவிக்கும் ஒருவருக்காகக்
காத்துக்கொண்டிருந்தது.

தொலைவில் ஒரு உருவம்

கண்களை விரித்துக் கைகளை அகட்டி
இதயத்தைப் பெரிதாக்கி
ஆயத்தமாகியது கல்

நெருங்கியது அந்த உருவம்

வெறுமை, விரக்தி
நிர்ப்பந்த மௌனம்

கண்களை மேலும் விரித்தது கல்
கடந்து சென்றது அந்த உருவம்
"என்ன நடக்கிறது?" என்றது கல்
"பிணம் ஒன்று நடக்கிறது" என்றேன் நான்.

## மனித விழுதுகள்

ஆறு கல் தொலைவில் ஒரு ஆலமரம்
ஆண்டுகள் அறுபது ஆகியும்
அறுதியுடனும் உறுதியுடனும்
நிமிர்ந்து நிற்கின்றது

பத்து வருடங்களில்
ஆறு விழுதுகள்

அவை
நீண்டு நிமிர்ந்து
நிலத்தைத் தொட்டு
தூண்களாகி
துணையாக நிற்கின்றன



இங்கேயும்
ஒரு அறுபது வருட ஆலமரம்
அதன் பெயர் குடும்பம்

பத்து வருடங்களில்
ஆறு விழுதுகள்
அவற்றின் பெயர் குழந்தைகள்

அவையும்
நீண்டு நிமிர்ந்து
நிலத்தைத் தொட்டன

ஆனால்
தூண்களாகவில்லை
அதனால்
துணையும் ஆகவில்லை

மாறாக
மரங்களாகி விலகிச் சென்றன

இருப்பினும்
விழுதுகள் மரங்களாகி
விலகிச் செல்லும் விந்தையை ஏற்று
தூண்களும் இன்றி
துணைகளும் இன்றி
வாழ்ந்துகொண்டிருக்கின்றது
குடும்ப ஆலமரம்.

## எது அழகு?

இயற்கையின்
அத்தனை நிறங்களையும்
இறக்கைகளில் உள்வாங்கி
அசைந்துகொண்டிருந்தது மயில்
அசந்து போனேன் அதன் அழகில்

சில வினாடிகளில் ...
அகவியது மயில்
அதிர்ந்தன செவிப்பறைகள்

எதிரே ...
கரிய நிறத்தில் ஒரு பறவை
காகத்தின் சாயல்
"கருங்குயில்" அதன் பெயர்

கூவியது கருங்குயில்
குளிர்ந்து என் உள்ளம்
பிறந்தது ஒரு கேள்வி

புறத்தில் மயில் அழகு
அகத்தில் குயில் அழகு
புறமா? அகமா?
எது அழகு?





**KG Master**-www.kgmaster.com
- www.facebook.com
- kgmaster.yourlifecoach

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

**Film Show: 79th Academy Awards Best Foreign Language Film winner**
**The Lives Of Others**
saturday,
November 17, 2012
@ 3:00 P.M
Scarborough Civic Centre
150 Borough Drive

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# ‘செலுலிரிஸ் (*Cellulitis*) பக்றிரியா தொற்றால் ஏற்படும் நோய்’

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இந்நோயானது எமது தோல் பகுதியில் சிறுபுண்கள் அல்லது காயங்கள் ஏற்பட்டு அதன் கீழ்பகுதியில் உள்ள தோல் இழையத்தில் ‘ஸ்பெக் கொகர்ஸ்’ என்ற பக்றீரியா உள்சென்று ஏற்படுகின்றது.

காயங்கள் என்று குறிப்பிடும்போது அது கீறல், வெட்டுக்காயங்களாகவும் இருக்கலாம். அல்லது நுளம்புக்கடியால் நாம் சொறியும்போது ஏற்படும் காயம், நகச்சுத்தி, நீர்த்தன்மை பொருந்திய பொக்களம் போன்ற நிலையில் இந்த பக்றீரியா தொற்று இலகுவாக ஏற்படலாம். அத்துடன் கால் விரல்களுக்கு இடையில் ஏற்படும் பங்கஸ் நோய் படர்தல் போன்ற நிலையிலும் செலியிடிஸ் என்ற நோய் உருவாகலாம் என அறியமுடிகின்றது.

இந்தப் பக்றீரியா உள்சென்றவுடன் இரத்தத்துடன் கலந்து உடம்பு பூராகவும் பரவும் நிலையுடையது. உரியவரும் நோய் எதிர்க்கும் சக்தி இல்லாவிடில் அல்லது குறைந்து காணப்படின் விரைவில் தாக்கும் இயல்புடையது. வயது எல்லையோ, ஆண், பெண் வேறுபாடுகளோ கிடையாது. எவருக்காவது நோய் எதிர்க்கும் சக்தி இல்லாதிருந்தால் அல்லது எதிர்க்கும் சக்தி குறைந்திருந்தால் இந்நோய் ஏற்பட ஏதுவாகும். பெரும்பாலும் இந்நோய் முதியோர்களை கூடுதலாகத் தாக்கும். இவர்களுக்கு நோய் எதிர்க்கும் சக்தி குறைந்தோ அல்லது இல்லாதிருக்கும்.

இந்நோய் ஏற்பட்டுப் பாதத்தை இழக்கமுன் ஆரம்பத்திலேயே காயங்களுக்கு ஏற்ற சிகிச்சை பெற்றுக்கொள்வது நன்மை பயக்கும். இந்நோய் ஆனது உடம்பில் எப்பகுதியிலும் ஏற்படலாம். அதாவது தோலின் அடிப்பகுதியில் உள்ள இழையத்தில் ஏற்படும் என்பதை ஞாபகத்தில் வைத்திருப்பது நன்று. நமது கைகள் போன்ற உறுப்புகளில் ஏற்பட்டால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு சிகிச்சைமூலம் குணப்படுத்த முடியும் எனவும் கூறப்படுகின்றது. இருந்து இந்நோய் ஆரம்பநிலையாக இருந்தால்தான் குணப்படுத்த முடியும்.

ஆனால் கால் பாதங்களில் ஏற்படும் இந்நோயைக் குணப்படுத்துவது கடினம் எனவும் அறியப்படுகின்றது. பெரும்பாலும் பாதத்தை அகற்றும் நிலையே ஏற்படும். மதுமேக (நீரிழிவு) நோய் உள்ளவர்கள் தமது பாதங்களை நன்னிலையில் தாக்கம் இன்றி வைத்திருந்தால் பாதிப்புஇல்லை. தவறின் இவர்களுக்கு நோய் எதிர்க்கும் சக்தி குறைந்து காணப்படுவதினால் பாதங்களை இழக்க வேண்டி வரலாம் எனவும் அறிய முடிகின்றது. இவர்கள் தங்கள் பாதங்களைக் காயம் இன்றி பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

என்றும் பாதங்களின் இழையங்கள் ஆரோக்கியமான நிலையில் இருந்தால் இந்நோயில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும். ஒருவருக்குப் பாதத்தில் காயம் ஏற்பட்டு வீக்கநிலையில் இருந்தால் கால்பாகத்தை உயர்த்தி வைக்க வேண்டும். இரத்தம் இருதயத்திற்கு செல்வதினால் படிப்படியாக பாதத்தின் வீக்கநிலை குறையத் தொடங்கும். பாதத்தில் உள்ள நரம்புகள் சாதாரண நிலையில் இருக்க வேண்டும். நரம்புகள் தடிப்பாக முறுக்கப்பட்டு, நீண்டகாலங்களாக நிணநீர் சுரப்பிகள்



தடைப்பட்டு அதனால் யானைக் கால் வியாதி ஏற்படலாம். இப்படிப்பட்டோருக்கு பாதங்கள் ஆரோக்கிய மற்றுக் காணப்படும். கால்விரல் நகங்கள் யாவற்றையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

மேலும் ஒரே இடத்தில் இருந்து வேலைபார்ப்போருக்கு கால் பாதங்களில் பல நோய்கள் ஏற்படலாம். உ-ம் விறைப்பு, பிடிப்பு, வீக்கம் போன்றவையைக் குறிப்பிடலாம். சாதாரண சிகிச்சை செய்து குணப்படுத்த முடியும். பெரும்பாலும் இந்நிலையில் உள்ளோர் பாதத்தை உயர்த்தி வைப்பது நன்மை பயக்கும். இந்நிலையில் வீக்கம் தளர்வடையும்.

பாதத்தின் தோல் பகுதியில் ஏதும் தழும்புகள், குஷ்டம் காணப்பட்டால் அவ்விடத்தில் அடிக்கடி சொறியக்கூடாது அது நோய்க்குறி காணப்படும் கால் பாதமாக குறிப்பிடமுடியும்.

ஆரோக்கிய நிலையில் உள்ளவர் விபத்து ஏற்பட்டு கால் பாதத்தில் காயம் காணப்படின் அதற்கு சிகிச்சையின்றி பாரமுகமாக இருந்தால் அதனூடாக விஷக்கிருமிகள் உள்நுழைந்து இவ்வியாதியை ஏற்படுத்த முடியும். எனவே விபத்து நடந்தால் உடன் தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதே போன்று பாதங்களின் விரல் இடையில் ஏதும் நீர்க்கிருமிகள் (Fungus) தாக்கம் மற்றும் கால்விரல் நகம் அசுத்தமாக இருந்தாலும் இந்நோய் ஏற்பட ஏதுவாகும். எனவே ‘சுத்தம் சுகம் தரும்’ என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

காயங்களின் ஊடாக பக்றீரியா பரவிச் செல்லும் போது சில சந்தர்ப்பங்களில் ஒரு இடத்தில் தேங்கி தங்கிவிடமுடியும். இதனால் அவ்விடத்தில் ஆழ்கட்டிகள் உருவாகிவிடும். இந்நிலையில் உரிய வைத்தியர்களிடம் சென்று காட்டப்படும் போது அதனைக் கீறி அழுக்குகளை வெளியகற்றிக் தகுந்த மருந்தையும் இட்டுக்கொள்வார். எனவே எதற்கும் தாமதிக்கக் கூடாது. இதனைச் செய்யத் தவறின் பக்றீரியா முழுப்பகுதிக்குச் சென்று இறுதியில் பாதத்தை இழக்கும் நிலையும் ஏற்படலாம். இந்நோயின் குணங் குறிகளைப் பார்க்கும்போது நடுக்கத்துடன் உடம்பில் குளிர்நிலைகாணப்படும். சற்றுநேரம் சென்ற பின் பாதம் வீங்கி வேதனை தென்படும். சூடும் இருக்கும். நாட்கள் செல்லச்செல்ல அப்பகுதி சிவந்து காணப்படும். எனவே பாதங்களில் சிறுகாயம் ஏற்பட்டாலும் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

சாதாரண இளம் வயதினருக்கு இத்தகைய நிலை பிரச்சினையைக் கொடுக்காத போதிலும் நோய் கொண்ட கால், பாதம் உள்ளவர்களுக்கு நாட்கள் செல்ல பாரதூரமான விளைவை ஏற்படுத்தும். நகங்கள் மூலம் தோல்பகுதியை சேதப்படுத்த முடியும். நகங்களை வெட்டித் துப்பரவு செய்யும் வேளையில் காயம் ஏற்படலாம். இவ்வேளையில் பக்றீரியா கிருமி தோலின் ஊடாகச் சென்று உடல் பூராகவும் பரவிக் கொள்ளும். தோலின் சுரப்பிகள் முக்கியமாக அமைவதினால் தோல்பகுதி பழுதின்றி இருக்க வேண்டும்.

எனவே எதற்கும் காயங்கள் ஏற்படும்போது தாமதியாமல் சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டும். எந்நேரமும் பாதங்களில் அழுக்கு படியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். தொற்று நீக்கிச் சோப்புகளைப் பாவிக்க வேண்டும்.

சித்த வைத்திய முறைப்படி வேப்பிலையும் + கறிமஞ்சலும் சேர்த்து நன்கு அரைத்து புண் காயங்கள் ஏற்படும் இடத்தில் ஆரம்பநிலையில் வெளிப்பூச்சாகப் பூசிவர கிருமிகள் அகன்று காயங்கள் மாறிக் கொள்ளும் நிலையும் உண்டு.

எண்ணெயில் ‘விஷப்ர்ப்பகர’ நாமம் கொண்ட எண்ணெய் உண்டு இதனையும் வெளிப்பூச்சாக பூசிக்காயங்களை மாற்றிக் கொள்ளலாம். உள்மருந்தாக கிருமிகளைத் தாக்கக்கூடியதான திரவ நிலையில் நிம்மாரிஷ்டமு (நிம்மா என்பது வேம்பு)ம் குவாதமும் உண்டு. இவற்றை இதில் குறிப்பிட்ட போதிலும் அதனை பாவிக்க முன் இத்துறையுள்ள வைத்தியர்களுடன் கலந்து ஆலோசித்துக் கொள்வது மிக நன்று.

எனவே எதற்கும் தாமதம் இன்றி சிகிச்சை பெற்றுக் கொள்வது நன்மை பயக்கும்.


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.707.4378*




# குடும்ப வன்முறை

ஒழுங்குசெய்து வைத்திருக்கவும்.

- ‘உங்கள் அகத்தின், காரின் சாவிகளுக்கு மாற்றுச் சாவிகள் செய்வித்து ஒரு பத்திரமான இடத்தில் வைத்திருக்கவும்.
- ‘உங்கள் சொந்தப் பெயரில் ஒரு வங்கிக் கணக்கை அல்லது வரவு அட்டையை வைத்திருக்கவும். வங்கிக் கூற்றுகளோ மற்றும் பிற அழைப்புகளோ நீங்கள் நம்பும் ஒரு நண்பருக்கோ குடும்பத்தவருக்கோ அனுப்பப்பட ஒழுங்குசெய்யவும்.

‘உங்களால் இயன்றளவு பணத்தை அவசர தேவைக்குச் சேமித்து வைக்கவும்.

‘தடையுத்தரவுகள், பிள்ளைகளைப் பொறுப்பேற்றல் / சந்தித்தல் பற்றிய கட்டளைகள் உட்பட நீதிமன்றக் கட்டளைகள் அனைத்தின் பிரதிகளும், துன்புறுத்தும் வாழ்க்கைத் துணைவரின் படமும் பாடசாலைக்கு / பாலர் பராமரிப்பகத்துக்கு கிடைக்கச் செய்யவும்.



‘உங்கள் பிறப்புச் சான்றிதழ், சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வங்கிப்பதிவேடுகள், பாடசாலைப் பதிவேடுகள், சுகாதாரப் பதிவேடுகள், கடவுச்சீட்டுகள், குடிவரவு ஆவணங்கள், அடமான அல்லது வாடகைப் பத்திரங்கள், மணவிலக்கு அல்லது வேறு நீதிமன்ற ஆவணங்கள், விலாசக் கோவை, தொலைபேசி இலக்கக் கோவை போன்ற முக்கிய ஆவணங்களுக்குப் பிரதியெடுத்து தயாராக வைத்திருக்கவும்.

# குடும்ப வன்முறை

**குடும்ப வன்முறை ஒரு குற்றம் ஆகும்.** ஒருவர் தனது குடும்பத்தைச் சேர்ந்த இன்னொருவரைத் தாக்குவதோ அச்சுறுத்துவதோ சட்டத்துக்கு மாறாகும். குடும்பத்தவரின் வன்முறை கடும் காயத்துக்கும் தற்கொலைக்கும் கொலைக்கும் வழி வகுக்கக்கூடும்.

**குடும்ப வன்முறையினுள்** ஒருவரை அச்சுறுத்தி, தனிமைப்படுத்தி, அவரை அடிபணியச் செய்து கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் செயல்கள் அடங்கும். ஒருவருடைய உடல், பாலியல்பு, உணர்ச்சி, உள்ளம், பொருள் உட்படப் பலவற்றை இன்னொருவர் தீண்டக்கூடும்.

**ஒருவர் இன்னொருவரைத் துன்புறுத்துவதுண்டு.** அது சமூக, மத, இன, பண்பாடு, வருமான, கல்விக் குழுமங்கள் அனைத்திலும் வயது, பால், பால் நிலைப்பாடு, மண நிலை அல்லது உறவு நிலை என்ற பாகுபாடின்றி நிகழ்வது.

**ரொறன்ரோ காவல்துறை** குடும்ப வன்முறையில் தலையிட்டு, குற்றம் புரிவோர்மீது நடவடிக்கை எடுத்து அந்த வன்முறையைத் தடுப்பதிலும் குறைப்பதிலும் உதவுவதற்கு உறுதி பூண்டுள்ளது. ஒரு குற்றம் புரியப்பட்டுள்ளது என்று நம்புவதற்கு நியாயமான சான்று கிடைக்கும்பொழுது சம்பந்தப்பட்டவர்மீது வழக்குத் தொடுப்பது காவல் துறையினரின் கடன்.

### பாதுகாப்புத் திட்டம்



• ‘உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தவர் ஒருவருக்கு உடனடி ஆபத்து உண்டானால், அழைக்கவும்: 9-1-1.

• ‘உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான நண்பர்களுடனும் குடும்பத்தவர்களுடனும் உங்கள் நிலைவரம் குறித்து கதைக்கவும்.

• ‘அவசரசேவையை நாடுவதற்கு வேண்டிய தொலைபேசி இலக்கங்களை நினைவில் வைத்திருக்கவும் அல்லது எளிதில் எடுக்கக்கூடிய இடத்தில் அவற்றைப் பத்திரமாகக் குறித்து வைக்கவும்.

• ‘உங்கள் அகத்தில் ஒரு பாதுகாப்பான அறையில் தங்கியிருக்கவும். கதவில் பூட்டும், அறையில் அல்லது கையில் தொலைபேசியும் இருப்பது நல்லது.

• ‘காவல் துறையினரை உதவிக்கு அழைப்பதற்காக, உங்கள் பிள்ளைகளுடனும் அயலவர்களுடனும் சேர்ந்து ஒரு குறியீட்டுச் சொல்லை அல்லது சைகையை உருவாக்கவும்.

**- மணி வேலுப்பிள்ளை -**

• ‘நீங்களும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் அகத்திலிருந்து வெளியேறக்கூடிய வழிகள் அனைத்தையும் அறிந்து வைத்திருக்கவும்.

• ‘நீங்கள் வெளியேற நேர்ந்தால், செல்லக்கூடிய இடங்களை-நெருக்கடியான கட்டத்தில் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் செல்லக்கூடிய பாதுகாப்பான இடங்களை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# ஆன்ற தமிழ் புலமையாளர்களை அச்சிலேற்றி அறிமுகம் செய்த ஆய்வாளர் அதிபர் அமரர் அப்புத்துரை அவர்கள்

இலங்கை மக்கள் மீது, தங்கள் மதம் பரப்ப வந்த மேல்நாட்டவர்கள் தமது மொழி, மதம், கலாச்சாரம், பண்பாடு அத்தனையையும் மக்களிடையே புகுத்தி அதன் மோகத்தால் அரைகுறை ஆங்கிலேயராக மாற்றிக் கொண்டிருந்த காலம் அது.

நாவலர் வழி பின்பற்றியோ அல்லது ஊரபிமானம் கருதியோ இந்த அற்ப ஆசைகளுக்கு இடங்கொடாமல் தமது மொழி, மதம் என்பவற்றைக் காப்பாற்றி வந்த ஊர்களும் உண்டு.

ஈழத்திரு நாட்டின் வடபகுதியிலே புராணங்களிலும் இதிகாசங்களிலும் கீரிமலை எனவும் நகுலேஸ்வரம் எனவும் பெயர் பெற்ற புராதன ஸ்தலம் அமைந்துள்ளது. மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் அடங்கிய மும்கோணப்பிரதேசம், இந்த மோகங்களுக்குள் அகப்படாது பழைய பஞ்சாங்கங்களாகத் தம் தனித்துவம் பேணி வந்தன.

பன்னாலை, கொல்லங்கலட்டி, கருகம்பானை, மாங்கொல்லை, விழிசிட்டி, பளை, மாவிட்டபுரம், தையிட்டி, போயிட்டி போன்ற பலகுறிச்சிகளை அடக்கியுள்ளது இப்பிரதேசம்.

யாழ்ப்பாணக் குடாநாடு, கிழக்கிழலங்கை எங்கும் உள்ள சைவமும் தமிழும் நன்கறிந்த புலமையாளர்கள் வெள்ளி அல்லது ஞாயிறு வாரங்களில் கீரிமலை மடத்தில் கூடி சாஸ்திர நூல்களை ஆராய்ந்தும், பொருள்விளக்கியும் மாவைக்கந்தனைத் தரிசித்தும் அடியார்கள் வீடுகளில் விருந்தயர்ந்தும் செல்வர். இதன் காரணமாக புலோலிக்கும் மாவிட்டபுரத்துக்கும் சம்பந்த உறவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இதனை ஒரு பின்னணியாக வைத்துக் கொண்டு கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை பற்றி அறிய முற்படலாம். பண்டிதர் அவர்கள் சைவமும் தமிழும் தலைதூக்கி நின்ற கருகம்பானை எனும் குறிச்சியில் பிறந்தவர். இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் ஆங்கிலம் கற்க அயலவர் எல்லோரும் சென்ற போதும் இவரது பெற்றோர் தமிழ் பாடசாலையிலேயே இவரைக்கற்க வைத்தனர். 1930ஆம் ஆண்டு பிறந்த இவர் தமிழ் கலாசாலைகளிலேயே ஆசிரியர் பயிற்சி பெற்றவர். ஆய்வுக் கண்ணோட்டத்தோடு கூடியவகையில் தமிழைத் துறைபோகக்கற்றவர். சமஸ்கிருதமும் ஆங்கிலமும் ஓரளவு அறிந்தவர். சமயம் சம்பிரதாயங்களை பிறமதங்களிலும் இனங்களிலும் எவ்வாறு அமைந்துள்ளன எனவும் அவதானித்தவர்.

நீண்டகாலமாக மயிலிட்டி கலைமகள் வித்தியாசாலையில் அதிபராக கடமையாற்றியவர். அதேசமயம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்தமிழ் புலவர் வரலாறு நோக்கில் ஆய்வுகளையும் தொடங்கியிருந்தார். புலவர்கள் வரலாறு பல அறிஞர்களாலும் காலத்துக்குக் காலம் எழுதப்பட்டு வந்திருக்கிறது. க.சி. குலரத்தினம் அவர்களால் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் எனும் தலைப்பில் ஒரு சிலபாகங்கள் வெளிவந்தன.

இதனை அடுத்து வந்த வரலாற்று நூல் கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களதே. காலக்கிரமப்படி ஒழுங்கு படுத்தி வெளியிட்டிருந்தார். இவரது தோற்றமே ஒரு மதிப்பை வரவழைப்பது போல் இருக்கும். என்றுமே தூயவெள்ளை வேட்டி, மடிப்பு கலையாத நாஷனல், அறிவு ஒளிவீசி தலை நிமிர்ந்து ‘நாமார்க்கும் குடியல்லோம்’ எனும் தோறணையில் புன்னகை பூத்தமுகம்’ வலிகாமம் வடக்கின் பிரமுகர்களில் இவரும் ஒருவரான கணிப்பு. அதிபர், ஆசிரியர் என்பதோடு சமூகப்பணிகளிலும் அக்கறை கொண்டவர். ஒரு பணியை எடுத்துக் கொண்டால் அதனைப் பூரணமாக செய்து முடிக்கும்வரை ஓயமாட்டார்.

பாடசாலை மாணவரிடையே நடக்கும் போட்டிகளுக்கு நடுநிலையாளராக வருவார். புள்ளிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில பிரச்சினைகள் வரும். மனதைக்கவரும் வண்ணம் பேசும் ஆற்றலுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்தால் அவர் உச்சரிப்பு, குறியீடுகளில் கவனம் செலுத்துவார். யாழ். இலக்கிய வட்டம் போர் குழப்பங்கள் ஏற்பட்ட காலத்தில் சரியாக நடைபெறாத-தால் வலி வடக்கில் ‘தெல்லிப்பளை கலை இலக்கியக்களம்’ ஸ்தாபகமானது. சுப்பிரமணி ஐயர், கோகிலா மகேந்திரன், குறமகள், நாகராசன், அ.செல்லத்துரை, சி.அப்புத்துரை, A.T பொன்னுத்துரை போன்ற சிலர் நிர்வாகிகளாக இருந்தனர். சைக்கிள்களில் வந்து கூட வசதியாக இருந்தது.

நிர்வாகக் கூட்டங்கள் ஒவ்வொரு வீட்டிலும் அநேகமாக கல்லூரிவீதியில் அமைந்திருக்கும் எங்கள் வீட்டிலும் பொதுக்கூட்டங்கள் யூனியன் கல்லூரியிலும் நடைபெறும். அப்போதும் அப்புத்துரை மாஸ்டர் நேரம் தவறாதும் வேண்டிய விடயங்களை தட்டச்சில் பொறித்தோ, எழுதியோ நகல்களும் எடுத்துக்கொண்டு வந்து சேர்வார்.

முன்பு எழுதப்பட்ட புலவர் வரலாறுகளை சேகரித்து அவற்றின் இடையே காணப்பட்ட வேறுபாடுகளை ஆராய்ந்து நிவர்த்தி செய்து சிவசம்புப்புலவரில் தொடங்கி தொகுத்துச் கொண்டே வந்தார். மிகத்திறமையான அட்டை போட்டு முதற்பாகம் , இரண்டாம்பாகம் எழுதி முடித்து மூன்றாம் பாகம் எழுதிக்கொண்டிருந்த போது நோய் வாய்ப்படுகின்றார். ஆயினும் மனைவியார் அதனைப் பூரணப்படுத்தி விட்டார்.

இத்தனைக்கும் மத்தியில் இவரது புலமையை ஏற்ற மக்கள் பலர் நினைவு மலர்களை அடிப்பித்தனர். அவற்றை இவர் வெறும் கல்வெட்டுகளாக இல்லாமல் ஏதாவதொரு சமய சம்பிரதாயங்களை - இவை மூட நம்பிக்கைகள் என்று ஒதுக்கி வருவோர்களுக்காக அவற்றை விளக்கியும் விஞ்ஞானரீதியான, அறிவு பூர்வமான விளக்கங்களைக் கொடுத்தும் அவை அழிந்து போகாவண்ணம் பாதுகாக்க விழைந்தார். அவற்றில் அபரக்கிரியைகள், பூப்புனித நீராட்டு போன்றவை இடம்பெற்றன.

இந்த சமய சம்பிரதாயங்கள் மனிதகணத்தின் வளர்ச்சிக்குத் தடையானவை. அறிவு வளர்ச்சிக்கு இடையூறானவை. மூடப்பழக்கங்கள் பொன்னான நேரத்தை மண்ணாக்கி விழுங்குகின்றன என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கிய முற்போக்குவாதிகளுக்கு விளக்கங் கொடுப்பது போன்றே அந்நினைவு மலர்களை அமைத்தார்.

இலட்சியங்கள், கொள்கைகள், போக்கு வாக்குகள் வெவ்வேறாக இருந்தாலும், அவரவர் வாழ்க்கை நெறிகளில் அவர் செம்மையாகவும், நேர்த்தியாகவும், சலனமின்றியும் ஒரேவழியில் வாழ்ந்திருந்தார். எதிலும் ஒரு செய்நேர்த்தி, ஒரு பூரணத்துவம் இதனால் அவர் பாராட்டுக்குரியவர். தத்தம் கருமமே கட்டளைக்கல். வெவ்வேறு துறைகளில் செயற்பட்ட எம் போன்றோர்க்கு அவரது துறையில் செம்மையாகவும் நேர்த்தியாகவும் செயற்பட்டமையை பாராட்டாமல் இருக்கமுடியாது.

அவரது மூன்றாவது பாகத்தில் எமது பெயரும் இருப்பதாக மனைவியார் சொல்லியிருந்தார். எமது கரத்துக்கு அது எட்டவில்லை. அவரது அந்தியேட்டிக்காக கொழும்பில் அவரது நூல்களின் தொகுப்பு ஒன்று வெளிவர இருப்பதாக அறிகின்றோம். ‘தமிழ்ப்புலவர் மாலையில்’ பண்டிதர் அவர்களும் தமிழ் மணம்கமழும் அழகான மலராகச் சேர்ந்து கொண்டுள்ளார். அதற்கான வாழ்த்துக்களை அவரது குடும்பம், நண்பர், அனைவருக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறாம்.



**வள்ளிநாயகி இராமலிங்கம்**

# றோஜேர்ஸ் டிஜிட்டல் டிவி வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான கோலிவூட் நிகழ்வுகளை கொண்டுவருகிறது.

றோஜேர்ஸ் தனது டிஜிட்டல் டிவி வாடிக்கையாளர்களுக்கு தனது தமிழ் அலைவரிசைகளின் வரிசையில் KTV சேர்க்கப்பட உள்ளது என்ற செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. தமிழ் சினிமா இரசிகர்களுக்கு மேலும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாக 687 ஆவது அலைவரிசையில் KTV ஐ அறிமுகப்படுத்தும் முகமாக இலவசமாக டிசெம்பர் 4, 2012 ஆம் திகதி வரை பார்க்கலாம் என்பதனை தெரியப்படுத்துகின்றது.

சண் டிவி குழுமத்தின் ஓர் அங்கமாகவும், தாய் நாட்டில் பலராலும் விரும்பி பார்க்கப்படுவதுமான ஒரே ஒரு 24 மணிநேர தமிழ் சினிமாப்பட அலைவரிசை யான KTV மிகவும் பிரபல்யம் வாய்ந்த படங்களின் தொகுப்பையும் மேலும் பல நிகழ்வுகளையும் கொண்டுள்ளது. மேலும் பல திரைப்பட சினிமா நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்பி எல்லோரையும் மகிழ்ச்சியான ‘கொண்டாட்டம்’ நிலையில் வைத்திருக்கிறது. இவற்றைவிட சினிமாப்பட ஆரம்ப விழாக்களையும் (Mahurats), பட தொடக்க பூஜைகளையும், படப்பாடல்கள் (ஒலி இறுவட்டு) வெளியீடுகளையும், தயாரிப்பில் உள்ள படங்களின் சில காட்சிகள், மற்றய அலைவரிசைகளில் வராத படப்பிடிப்பு தளங்களில் எடுக்கப்படும் காட்சிகளையும் தருகிறது. சினிமாப்படங்கள் சம்பந்தமாக இவ் அலைவரிசை சொந்தமாகவும் நிகழ்ச்சிகளை தயாரித்தும் தருகிறது. இதில் வரும் பிரபல்யம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் சில ‘ஆல் இன் ஆல் அலமேலு’ மற்றும் ‘திரை மின்னல்கள்’ ஆகும். திரைமின்னல்கள் திரைப்படத்தில் வரும் சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை காட்டுவனவாகும்.

றொஜேர்ஸ் டிஜிட்டல் டிவி வாடிக்கையாளர்கள் 687 ஆவது அலை-வரிசைக்கு செல்வதன் மூலம் இலவச முன்னோட்ட நிகழ்வுகளை பார்க்கலாம். நீங்கள் றொஜேர்ஸ் டிஜிட்டல் டிவி வாடிக்கையாளர்கள் இல்லையா? அழையுங்கள் 1 888 ROGERS1 அல்லது rogers.com/multicultural இல் மேலதிக விபரங்களை பெறுங்கள்.

# JOB

வேலையாட்கள் உடனடியாகத் தேவை.

**Flyers** போடுவதற்கு ஆட்கள் தேவை.

# உடனடி வேலை வாய்ப்பு

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வாகனசாரதிகளும் தேவை

நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

# DYN Exports Inc.

## 7900 Keele Street, Unit 1
## Vaughan, ON L4K 2A3
## (Keele & Administration Road)

தொடர்புக்கு:

பிரபா: **647.622.6679**

# நால்வர் நான்மணி மாலை

அகவல்

பாடறிந் தொழுகுதல் பத்திக்கு நன்றா
வீடுருந் தொழுகுதல் வீட்டினைத் தருமா
சிற்றின்பம் இன்றிப் பேரின்பம் சேருமா
பற்றற் றவனைப் பற்றுதல் பாசமா
புலன்களை அடக்குதல் புத்தியா பத்தியா
மலங்களை நீக்குதல் வாழ்க்கைக்கு நல்லதா
சித்தம் தெளியும் திருவா சகத்தில்
எத்தனை வினாவோ அத்தனை வகைக்கும்
விடைகள் வாதவூர் அடிகாள்
கடல்முத் துக்கள்போற் கிடைக்கின் றனவே. (16)

வெண்பா

கிடைக்கும் திருமுலைப்பால் கேடில்பொற் றாளம்
கிடைக்கும் குடையும் கிழியும் - படிக்காசும்
பல்லக்கும் பாலறா வாயற்குப் பாடுதற்குச்
சொல்லும் சுரக்கும் தொடர்ந்து. (17)

கட்டளைக் கலித்துறை

தொடர்ந்து சமண்செய்த சூழ்ச்சிகள் திட்டங்கள் தோற்றதனால்
படர்ந்திடச் சைவமும் பல்லவன் கோயில் பலவற்றினை
இடமெங்கும் கட்டி விழாக்கள் இயற்றிட ஏமுறவே
நடந்தது நாடெங்கும் நாவுக் கரசர்தம் நற்பெயரே. (18)

விருத்தம்

பெயரினைப் பெற்றோர் எண்ணிப்
பெருமையால் வைப்பர் வைத்த
பெயரினைச் சுருக்கல் மாற்றல்
பிள்ளைகட் கழகு மில்லை
பெயரினுக் கேற்ப வாழ்ந்த
நம்பியா ரூரர் பெற்ற
உயர்வினை உணர்ந்து பார்க்கின்
உருகுமாம் உள்ளம் ஐயா. (19)

அகவல்

ஐயா மாணிக்க வாசக அன்பால்
மையார் மடந்தை மெய்யோர் பாகரைப்
பாடிப் பரவியும் ஆடிக் கசிந்தும்
கூடிக் குலவியும் குருந்த மரநிழல்
கண்டும் வாசகம் கருத்துடன் கேட்டும்
கொண்டு சென்ற பொருள்களைக் கொடுத்தும்
முருகியற் குதிரைகள் ஆவணி மூலத்தில்
வருமென வாய்மலர்ந் தருளியும் பரிகளை
வராமற் செய்தே வருத்திய
பராபரர் காட்டிய பண்பென்ன பண்பே! (20)

வெண்பா

பண்புக்கும் பக்திக்கும் பாலம் அமைத்தவொரு
நண்பகலோ நன்மணியோ நாயகரோ - பெண்பனையாய்
ஆண்பனையை மாற்றி அமணர் அரன்நீற்றின்
மாண்பதனைக் காணவைத்த மன். (21)

கட்டளைக் கலித்துறை

மன்மதன் மாயத்தை நெற்றிக்கண் மாயத்தால் மாற்றியவர்
தன்னருள் பெற்றுச் சரியைத்தொண் டாற்றிய தாண்டவக்கோன்
பொன்னையும் மண்ணையும் ஒன்றாக நோக்கிய பூமனத்தார்
இன்னலத் தாள்களை என்தலை வைத்தென்றும் ஏத்துவனே. (22)

விருத்தம்

ஏத்துவார் அன்பை ஏத்தும்
ஏழைபங் காளர் தாள்கள்
ஏத்தியே இருவ ரோடில்
லறம்மகிழ்ந் தியற்றி னாரை
மாத்தவ ஆரூ ராரை
மாசிலாத் தோழர் தம்மை
ஏத்துவேன் யானும் ஏத்தி
இடர்களைப் போக்கு வேனே. (23)



கவிஞர் வி. கந்தவனம்

# செங்கன்னூர்...

வழிபாடாகவே செய்கிறார்கள்.

இந்தக் கோயிலில் உள்ள குளத்துக்கு அகஸ்திய குண்டதீர்த்தம் என்று பெயர். அதற்குப் பின்னால் மறைந்திருக்கும் ஐதீகமும் சுவாரஸ்யமானது. கயிலாயத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடக்கவிருக்கிறது. முப்பத்து முக்கோடி தேவர்களும் அந்த திவ்விய தருணத்தைத் தரிசிக்கக் கூடி நின்றனர். அதனால், பாரம் தாங்காத பூமி சாய்ந்ததாகவும் அதைத் தவிர்க்க சிவன், அகத்திய முனிவர் வந்தமர்ந்தது செங்கன்னூரில் என்றும், அவரின் கமண்டலத்திலிருந்து தோன்றியதே அந்தத் தீர்த்தக் குளம் என்றும் நம்பப்படுகிறது.




நாம் கோயிலுக்குள் நுழைந்ததும் முட்டை வடிவ மேடை ஒன்று உள்ளது. அது 'கூத்தம்பலம்' என அழைக்கப்படுகிறது. கோயிலில் கலை வடிவங்கள் அரங்கேறி வந்த மேடை அது. பெருந்தச்சன் எனப்படும் புகழ்பெற்ற கட்டடக்கலை நிபுணர் இதைக் கட்டியுள்ளார். அவர் கட்டிய சமயத்தில் அங்கு நூற்றியெட்டு தூண்கள் இருந்ததாகவும் அதன் நடுவே ஒரு சின்ன மேடையில் விளக்கை எரியச் செய்தால் அதன் நிழல் கீழே படாதபடியும் இருந்தது என்றும் கூறப்படுகிறது. பிறகு, வைதிகர்கள் சிலருடன் ஏற்பட்ட மனக்கசப்பால் பெருந்தச்சனே சாபமிட்டுத் தூண்களை எரித்துவிட்டதாகவும் அதில் மேடை மட்டும் எஞ்சியதாகவும் சொல்லப்படுகிறது.

கூத்தம்பலத்துக்கு அருகிலேயே சிறிய பாறை ஒன்று உள்ளது. அதில் ஒற்றைக் கால் வைத்து ஊன்றி நின்றபடி, திருக்கோயில் கலசத்தைப் பார்த்து வணங்கினால் கொடிய விஷத் தாக்குதல் நீங்குவதுடன் தேவர்கள் அனைவரையும் வணங்குதற்கு சமம் என்றும் கருதப்படுகிறது.

இந்த வித்தியாசமான வணக்க முறைக்குப் பின்னால் ஒரு கதை உள்ளது. முன்னொரு காலத்தில் விஷக்கடிகளுக்கு வைத்தியம் பார்த்துவந்த மூசது என்பவரின் மருத்துவக் குடும்பம் கோயிலுக்கு அருகே தங்கி இருந்தது. சிவன் மீது அளவற்ற பக்திகொண்ட அந்த வைத்தியன் பெயரும் புகழும் பெற்றவனாக வளர்ந்தார். அப்போது புதிதாக வந்த வைத்தியன் ஒருவன், தானே சிறந்தவன் என்று கூறி வந்தான். சில காலத்துக்குப் பிறகு அவர்களிடையே போட்டி அதிகரித்தது. இருவரில் யார் வல்லவர் என்று முடிவு செய்ய போட்டி ஒன்றை நடத்தினார். அதில் பொய் சொல்லியும் ஏமாற்றியும் புதிய வைத்தியன் மூசது வைத்தியனை வென்றுவிட, அவர் மனம் நொந்து போனார். அன்றிரவில் அவர் கனவில் தோன்றிய சிவபெருமான் புதிய வைத்தியனின் பொய்முகத்தைக் கிழிக்க ஓர் உபாயம் சொன்னார். திருக்கோயிலில் உள்ள பாறை இடுக்கு ஒன்றில் புதிய வைத்தியனை கைவிட்டுத் தான் பரிசுத்தமானவன் என்று சத்தியம் செய்யச் சொல்லும்படி யோசனை கூறி மறைத்தார்.

மறுநாள், மக்கள் கூட்டத்துக்கு நடுவே இறைவன் சொன்ன இடத்தில் புதிய வைத்தியன் கைவிட்டு மறுபடியும் பொய் சொல்ல... அந்த இடுக்கில் இருந்த பாம்பு அவனைத் தீண்டியது. அதிர்ச்சியில் உறைந்த புது வைத்தியன், உண்மையை ஒப்புக்கொண்டதோடு தான் செய்த தவறுக்குப் பரிகாரமாக தான் படித்த வைத்திய புத்தகங்களையும் பயன்படுத்திவந்த மூலி கைகளையும் கோயில் சந்நிதியிலேயே குழிதோண்டிப் புதைத்தான். பிறகு, அதன்மீது பாறையை வைத்து மூடி இறைவனிடம் மனமுருக மன்னிப்புக் கோரினான். புதிய வைத்தியனின் தவறை மன்னித்த சிவன், விஷக்கடியிலிருந்து முக்தி கொடுக்கும் சக்தியை அந்தக் கல்லுக்கு வழங்கினார். வைத்தியனை சர்ப்பம் தீண்டிய அந்த இடுக்கு இப்போது 'சத்தியக் குழி' என்று அழைக்கப்படுகிறது. ராஜாக்கள் காலத்திலும் அதன்பிறகும் பல பொய்களைக் கண்டறிய அது பேருதவியாக இருந்திருக்கிறது.

இந்த மகாதேவன் கோயிலில் தினமும் ஐந்து வேளை பூஜை. மார்கழி பன்னிரண்டாம் தேதி முதல் இருபத்தெட்டு நாட்கள் இக்கோயிலில் முக்கிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. கருவறை கோபுரத்தின் மேற்குத் திசையில் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும் அந்தணரின் உருவம் ஒன்று உள்ளது. அந்த உருவத்தின்மீது கருவறை கோபுரத்தின் நிழல் படும் நேரம்தான் திருவிழா தொடங்க உகந்த நேரம் என்று கருதப்படுகிறது. இந்த இருபத்தெட்டு நாட்களில் முதல் பதினெட்டு நாட்கள் சிறிய அளவிலும் கடைசி பத்து நாட்கள் பெரிய அளவிலும் கொண்டாடப்படுகிறது. இருபத்தெட்டு நாட்களில் சிவனும் பார்வதியும் மட்டுமே யானை மீது எழுந்தருளுவார்கள். கடைசி ஆறு நாட்களில் சிவன் - பார்வதியுடன் ஐயப்பன், கணபதி ஆகியோரும் எழுந்தருளுவர்.

மாங்கல்ய பாக்கியம் கிடைக்கவும் பெண்களின் கருப்பை சம்பந்தமான பிரச்சினைகள் தீரவும் குழந்தை பாக்கியத்துக்காகவும் பெண்கள் பலரும் இங்கு வந்து வேண்டி, தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் வழியில் இளைப்பாறுமிடமாகவும் இக்கோயில் விளங்குகிறது.

எப்படி போகலாம், எங்கு தங்கலாம்?

சென்னையில் இருந்து பேருந்து, ரயில் மூலமாக செங்கன்னூரை அடையலாம். கோட்டயம் நகரிலிருந்து முப்பத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. ஆலப்புலா, கோட்டயம் இரண்டுமே தங்குவதற்கு உகந்த இடங்கள்.

# செங்கன்னூர் - மாங்கல்ய பாக்கியம்!



## கேரளா சுற்றுலா இடங்கள் - 17

கேரள மாநிலம், ஆலப்புழை மாவட்டத்தில் உள்ள செங்கன்னூர் இங்குள்ள புகழ்பெற்ற மகாதேவன் ஆலயத்தால் உலகப் பிரசித்தி பெற்றது. எண்ணற்ற சிறப்பு அம்சங்களைத் தன்னுள் கொண்டு, பக்தர்களுக்கு அருள்புரிவதற்காகக் கம்பீரமாக நிற்கிறது இந்தக் கோயில். சிவனும் பார்வதியும் இங்கு முக்கிய பிரதிஷ்டையாக இருக்கிறார்கள். ஒரே கருவறையில் சிவன் கிழக்கு நோக்கியும் பார்வதி மேற்கு நோக்கியும் இருப்பது இந்தக் கோயிலின் சிறப்பு!

இந்தக் கோயில் உருவானதன் பின்னணி மிகவும் சுவாரஸ்யமானது. தட்சன் என்ற அசுரனின் மகள் ஸதிதேவி. அவள் சிவன் மீது அளவற்ற பற்றுக் கொண்டிருந்தாள். அது தட்சனுக்குப் பிடிக்கவில்லை. சிவனைப் பழிதீர்க்க நினைத்த தட்சன், யாகம் ஒன்றை நடத்தினான். இந்த யாகத்தால் மனம் நொந்த ஸதிதேவி தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். இதை அறிந்த சிவன் கோபாவேசமானார். ஸதிதேவியின் உடலைத் தன் தோளில் சுமந்தபடி தாண்டவம் ஆடினார். மகாசிவனின் கோபத்தைத் தணிக்கத் துணிந்த விஷ்ணு மறைந்திருந்து, அம்பெய்து ஸதிதேவியின் உடலை சிவனின் தோளிலிருந்து வீழ்த்தினார். விஷ்ணுவின் அம்பு பட்டுச் சிதறிய ஸதிதேவியின் உடல் பல துண்டுகளாக பூமியில் விழுந்தன. அவற்றில் ஸதிதேவியின் இடுப்பின் கீழ்ப் பகுதி வந்து விழுந்த இடமே, செங்கன்னூர் மகாசிவனின் ஆலயமாக மாறியது என்பது தலவரலாறு.

இக்கோயிலில் உள்ள தேவிக்கு நடத்தப்படும் திருப்பூத்து ஆறாட்டு மிகவும் பிரசித்தி பெற்றது. தவிர, வேறு எந்தக் கோயிலிலும் காண இயலாத ஒன்று. பெண்களுக்கு இயல்பாக ஏற்படும் மாதவிலக்குக்கு இந்த தேவியும் விதிவிலக்கல்ல என்பது ஆச்சரியமான விடயம். தேவிக்கு உடுத்தும் சேலைகள் நித்திய பூஜைகளின் போது மாற்றப்படுகிறது. சில நாட்களில் தேவி உடுத்திய ஆடைகளில் 'அடையாளம்' தென்படுகிறது. அந்த ஆடைகள் பரம்பரை பரம்பரையாகக் கோயிலில் பூஜை செய்துவரும் தாளமன் மடம், வஞ்சிப் புழா ஆகிய புரோகிதக் குடும்பத்து பெண்களிடம் பத்திரமாக அனுப்பப்பட்டு, அது மாதவிலக்குதானா என்று உறுதி செய்யப்படுகிறது. மாதவிலக்காக இருக்கும் பட்சத்தில் தேவியின் சக்தியை வேறொரு சிலையில் ஆவாஹனம் செய்து அதை மற்றோர் அறைக்கு மாற்றி வைத்து பூஜிக்கிறார்கள். அந்த நாட்களில் கருவறைக்குள் எவரும் செல்லமாட்டார்கள். மாதவிலக்கு முடிந்ததும் தேவிக்கு ஆறாட்டு நடத்தப்பட்டு, சிவனின் வரவேற்புடன்

**- வழிப்போக்கன் -**

மறுபடியும் கருவறைக்குச் செல்கிறாள் தேவி. திருப்பூப்பின் போது தேவி உடுத்திய ஆடைகளை பக்தர்கள் விலை கொடுத்து வாங்கிச்சென்று போற்றிப் பாதுகாக்கிறார்கள். திருப்பூப்பின் போது நடத்தப்படும் பூஜையைச் சிறப்பு

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


கண்ணில் தெரியும் கரடிகள்

சில மணி நேரத்தில் வீட்டில் இருந்து கொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?

LIVE CHAT ROOM & LIVE FLOOR TRADING




THE 5 RICHEST MEN IN THE WORLD




கொட்டிக் கொடுக்கும் EMINI S&P500! ஒரு போர்ட்போலியோ தயார்!

பயமுறுத்துகின்ற நெகட்டிவ் மாற்றங்கள்! கணிப்புகளைச் செய்வது எப்படி என்று பார்ப்பதற்குமுன் கணிப்புத்திறனை எப்படி பதப்படுத்தி சம்பாதிப்பது என்று நீங்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். இன்று பங்குசந்தை எப்படி இருக்கும் என்று அறிய ஆவலா? அழையுங்கள் : 647-706-2964

EMini S&P500 டெக்னிக்கல்ப் பார்வை:

செண்டிமெண்டல் வீக்காகவும், டெக்னிக்கலாக ஸ்ட்ராங்காகவும், பண்டமெண்டல் செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகவும் வந்து சந்தையை நல்ல வேகத்தில் கீழே எடுத்துச் சென்றுவிட்டது EMini S&P 500 - 1315 என்பது மிகச் சுலபமான டார்கெட்டாகவும் 1400 WILL PENETRATE TO 1429 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505! செய்திகள் நெகட்டிவாக வந்துகொண்டேயிருப்பதால் 1363 WILL SLIDE DOWN TO 1315 AND 1295 TO HIT THE PREVIOUS LOW 1252 & 1100

தேவை - பணம்
தேடல் - CanBull Inc
வெற்றி - நிச்சயம்

GTA SQUARE
222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில்
தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

2%* முதல்

# SKN FINANCIAL

(Pawn Brokers)

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

முழுக்காப்புறுதி செய்யப்பட்ட ஒரே நிறுவனம்

**416-269-5393**

உங்கள் பெறுமதியான நகைகளை விற்க வேண்டாம்!
மிகக் குறைந்த வட்டிக்கு எம்மிடம் அடகு வைத்து உங்கள் உடனடிப் பணத்தேவையைப் பூர்த்தி செய்த பின்னர் நகைகளை மீட்டுக் கொள்ளலாம்.

ஏற்கனவே அடைவில் இருக்கும் உங்கள் நகைகளைக் குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்ய நாம் உதவுவோம்.

GOLD LOAN

- அவசரப் பணத் தேவையா?
- புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- புதிய மனை வாங்குவதில் பணச் சிக்கலா?
- உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்கு பல விதமான திட்டங்கள் உள்ளன!
- வட்டித் தொகைக்கு வரி விலக்குப் பற்றுச் சீட்டு வழங்கப்படும்

உங்கள் நகைகளுக்கு பாதுகாப்பு,
குறைந்த வட்டி, நிறைந்த பெறுமதி,
அன்பான சேவையைக்
கனடாவில் வழங்கும் ஒரே நிறுவனம்.

5 நிமிடங்களில் உங்கள் கையில் பணம்
இன்றே நாடுங்கள்

## SKN FINANCIAL

(Pawn Brokers)

4-2677 Eglinton Ave. East
Scarborough, ON M1K 2S2 (Eglinton & Brimley)

SKN FINANCIAL is operated by
SKN CONSUMER FINANCE LTD.

* 2% per month equivalent to 24% per annum
Terms and conditions may apply

PRINT FAST.ca :: 416 752 3278


மற்றுமொரு சந்தர்ப்பம்
TRIDEL இன் புதியவரவு
TEN YORK
RISING ABOVE IT ALL
TRIDEL®
BUILT FOR LIFE
416.321.6969
GARDINER EXPY.
LAKESHORE BLVD. W
LOWER
SIMCOE ST.
TEN YORK
YORK ST.
BAY ST.
HARBOUR ST.
LAKESHORE BLVD. E
QUEENS QUAY W.
Exclusive Brokerage
VIP ACCESS & Special Price
Call for more information
www.homelifegtarealty.com
HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE
GTA SQUARE 5215 Finch Ave. E. #203 Toronto, M1S 0C2.
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3.
Off: 416.321.6969
Fax: 416.321.6963
Off: 905.712.2666
Fax: 905.712.0037

# 'மாற்றான்' - திரை விமர்சனம்

சோம்பலான சூர்யா, ஜாலியான சூர்யா என ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள், அவர்களுக்குள்ளேயே ஈகோ, காரணம் மரபணு ஆராய்ச்சியாளரான அப்பாவின் சோதனை, அப்பாவின் பால்பவுடர் கம்பெனியின் அசுர வளர்ச்சி, அதன் பின்னணியில் பல ரகசியங்கள், அதனால் இரட்டையர்களுக்குள் பிரச்சினை, கடைசியில் கதாநாயகன் வெற்றிபெறுவது என்று நான்கு வரியில் எழுதிவிடக்கூடிய கதை தான். மரபணு ஆராய்ச்சியாளரான தனது தந்தை குழந்தைகளுக்கான பால் பவுடரில் ஆபத்தானவைகளைக் கலந்து விற்பனை செய்வதைக் கண்டறியும் மகன் சூர்யா, தனது தந்தையின் வியாபார முகமூடியை எப்படி கழட்டியெறிகிறார் என்பதை 'ஏண்டா இந்தப் படத்தைப் பார்த்தோம்' என நொந்துகொள்ளும் அளவுக்கு இழுவையாய்

**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

சொல்லியிருக்கிறார்கள். ஒட்டிப் பிறந்த இரட்டையர்களாக சூர்யா நடித்திருக்கிறார். சூர்யாவின் நடிப்பு படத்துக்குப் படம் மென்மேலும் மெருகேறி வருகிறது என்பதைத்தான் இப்படமும் காட்டுகிறது. விமலன், அகிலன் நடிப்பில் வித்தியாசம் காட்டும் அளவுக்கு இருக்கும் காட்சிப்படுத்தல்களில் கஷ்டப்பட்டுத்தான் நடித்திருக்கிறார் சூர்யா. இரண்டு பேரின்



உடல்மொழி, வசன உச்சரிப்பு போன்றவற்றில் மிகவும் மெனக்கெட்டிருக்கிறார். குறிப்பாய் இடைவேளைக்கு முன்பு வரும் எம்.ஜி.எம், சண்டைக் காட்சிகளிலும், இரு சூர்யாவிற்குமிடையே வரும் சண்டைக் காட்சிகளிலும் சுவாரஸ்யம். விமலனை விடவும் அகிலன் சூர்யாதான் பிரமாதப் படுத்தியிருக்கிறார். அவர்கள் இரட்டையர் களாக இல்லாமல் இருந்திருந்தாலும் சூர்யா இன்னும் நன்றாக நடித்திருப்பார் என்றே தோன்றுகிறது.

'இரட்டையர்கள் வேடம் திரைக்கதைக்கு தேவையும் இல்லை. கதைக்கு தேவையில்லாமலே ஏதாவது வித்தியாசமாக செய்யவேண்டும்' என்று வைத்திருக்கிறனர். பாதி படம் முடிந்த பிறகு இரட்டையர்களும் பிரிந்துவிடுகிறார்கள். ஒரு மசாலா பட நாயகன் செய்யும் அதே வேலையைத்தான் இந்தப் பட நாயகனும் செய்கிறான். பின் எதற்கு இரட்டைப் பாத்திர விளையாட்டு? காஜல் அகர்வால் அழகாக இருக்கிறார். அவருடைய கண்களே தனி கதையை பேசுகின்றன! பெரிய கண்களுடன் இரண்டு சூர்யாவையும் விழுங்கி விடுவது போல பார்க்கிறார். பல மொழிகள் பேசுவதும், எந்த நாட்டுக்கு போனாலும் அங்கே இவருக்கு ஒரு நண்பர் இருப்பதும்தான் லாஜிக்காக இடிக்கிறது. சூர்யாவின் அப்பாவாக நடித்திருக்கும் சச்சின் கண்டேல்கருக்கு வில்லத்தனம் பொருத்தமாகவே இருக்கிறது. உக்ரைன் பெண்ணின் கேமிரா பேனாவை பிடிங்கிக்கொண்டு வார்த்தைகளால் விளாசும்போது அவரை சந்தேகப்படவே முடியவில்லை. சூர்யா அம்மா தாராவுடன் சண்டையிட்டு இன்னும் நல்லா சாப்பிடு என்று கோபப்படும் காட்சியிலும், வீட்டிலிருந்து வெளியேறி விவாகரத்து கேட்கும் தாராவை, அவளது அண்ணன் வீட்டிற்கே சென்று சமாதானப்படுத்தும் காட்சியிலும் அவ்வளவு நல்லவனாக காண்பித்துக்கொள்கிறார். சச்சின் கண்டேல்கரின் திரைமொழியை விட அவருக்கு பின்னணி குரல் கொடுத்திருக்கும் குமார் நடராஜனின் நடிப்பு இன்னும் அருமை. சச்சின்

தொடர்ச்சி 29ஆம் பக்கம்



# சார்பியல் - 7

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

லோறன்சின் விளக்கத்தினை இன்னும் விரிவாகப் பார்ப்போம். சாதாரண கோல் ஒன்றினை எடுத்துக் கொள்வோம். அக்கோல் அணுக்களின் சேர்க்கையினால் ஆனது என்பது இப்போது எங்கள் எல்வோருக்குமே தெரியும். கோலில் உள்ள அணுக்களை மின்காந்தவிசையானது ஒன்றாக கட்டி வைத்திருக்கின்றது. வசதியாக, இதனது நீளமும் ஒரு மீற்றர் எனவும் கருதுவோம். இக்கோலானது ஏதோவொரு வேகத்தில் தன் நீளப் பக்கமாக இயங்குகின்றது என்போம். எல்லா இடங்களிலும் ஈதர் பரவி உள்ளது என்ற எடுகோளின்படி, அக்கோலின் இயக்கமும் ஈதரினுள் இருக்கும். ஈதரில் இயங்குகின்ற அக்கோலில் ஈதரினால், அதன் வேகத்தின் அளவிற்கு ஒத்ததாக, கோலில் அணுக்களை இணைத்திருக்கும் மின்காந்த விசையில் மாற்றங்கள் ஏற்படுகிறது. அதனால் அக்கோல் தனது நீளப்பக்கமாக, அளவிலே சின்னதாகச் சுருங்குகின்றது. இவ்விதமாக லோறன்ஸ் விளக்கம் தந்தார். எவ்வளவினால் குறைவடையும் என்பதனையும் லோறன்ஸ் குறிப்பிட்டு இருந்தார். அதற்கான சமன்பாடு ஒன்றினையும் லோறன்ஸ் தந்திருந்தார். அவரது சமன்பாட்டின்படி, புவியினது இயக்கத்தில் இயங்குகின்ற ஒரு மீற்றர் நீளப் பொருளில் ஏற்படக் கூடிய நீளமாற்றம் மில்லியனில் ஒரு பகுதியாகும்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில், மைக்கல்சன் மோர்லியின் பரிசோதனை முடிவிற்கு விளக்கம் தந்தார் லோறன்ஸ். ஒளியின் வேகத்தினை அளந்த கருவி யானது, புவியுடன் சேர்ந்து இயங்குவதால், அது புவியினது வேகத்தினைக் கொண்டிருக்கும். அதனால் அது தான் செல்லுகின்ற திசையில், ஈதரில் இயங்குவதனால் சிறியதாகின்றது. இப்படி யாகச் சுருங்குகின்ற அளவானது கணிக்கப்படுகின்ற ஒளியின் வேகத்தினை எப்போதும் ஒரே அளவினதாக காட்டுகின்றது. இதற்கு ஒத்ததாகவே நேரக் குறுக்கமும் அங்கு நிகழ்கிறது. மைக்கல்சன் மோர்லியின் பரிசோதனை முடிவிற்கு லோறன்ஸ் கொடுத்த விளக்கமானது, ஈதர் இருக்கின்றது என்பதனை ஏதோஒரு விதத்தில் காட்டுவது போல இருந்தாலும் ஈதர்க்காற்றின் விளைவைக் காட்டவில்லை. லோறன்ஸ் இந்த முடிவுகளைக் கூறிய காலத்திலேயே ஆங்கிலேய விஞ்ஞானியான ஜோர்ச் பிற்ஸ்ஜெராட் என்பவரும் இதனைக் கூறியிருந்தார். தனித்தனியாக இருவரிடமும் இருந்து வந்த முடிவானது அம்முடிவின் நம்பகத் தன்மையைத் உறுதிப்படுத்தி யிருந்தது. இந்தக் குறுக்கத்திற்கான மாற்றத்தினை லோரன்ஸ் - பிற்ஸ்ஜெராட் மாற்றீடு (Lorentz – Fitzgerald Transformation) என்பார்கள். லோறன்சின் இம்முடிவுகளை லோறன்சின் சுருக்கம்

$$\left.\begin{aligned} x' &= \frac{x - vt}{\sqrt{1 - \frac{v^2}{c^2}}} \\ y' &= y \\ z' &= z \\ t' &= \frac{t - (v/c^2)\,x}{\sqrt{1 - \frac{v^2}{c^2}}} \end{aligned}\right\}$$

Lorentz Transformation Equations

(Lorentz Contractoin) என்கிறார்கள். மிகவும் அழகான, அதேசமயம் ஆச்சரிய மானதுமான விளக்கம்தான். சாதாரண நடைமுறை வாழ்க்கையில் இதனை ஏற்றுக்கொள்வது சற்றுச் சிரமம் தான். ஆனாலும் லோரன்ஸ் தனது கணித நிறுவல்களில் இதனைக் காட்டியிருந்தார். மற்றய விஞ்ஞானிகள் முழுமையாக ஏற்று கொள்ளத் தயங்கிய இந்த முடிவுகளை லோறன்சால் கூட நடைமுறையில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனெனப் பாருங்கள்.

எமது புவி எவ்வளவு பெரியது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகாயத்தில் மணிக்கு 93,000 கிலோமீற்றர் (கிட்டத்தட்ட செக்கனுக்கு 30 கிலோமீற்றர்கள்) கதியில் தலைதெறிக்க ஓடிக் கொண்டு இருக்கின்றது என்பதும் உங்களுக்குத் தெரியும். அதாவது கதிரவனைச் சுற்றிக் கொண்டு இருக்கின்றது. ஒருவேளை புவியானது கிட்டத்தட்ட ஒளியின் வேகத்தில் கதிரவனைச் சுற்றிக் கொண்டு வந்தால் அது ஒரு சிறிய 'பிஸ்கட்' பருமனுக்கு வந்து விடுமாம். லோறன்சின் சுருக்கம் இப்படித்தான் கூறுகின்றது. என்ன நம்புவீர்களா? லோறன்சாலும் இதனை நம்ப முடியாமற்தானே இருக்கும். ஆனால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. ஈற்றில் அக்காலத்தின் நம்பிக்கைளின் காரணமாக எழுந்த பயத்தாலோ என்னவோ தமது முடிவுகளை கைவிட்டுவிட்டார். இந்த அற்புதமான கணித முடிவுகளையிட்டு அதிகம் அக்கறை கொள்ளாது விட்டுவிட்டார். விஞ்ஞானி ஒருவருக்கு இருக்க வேண்டிய துணிச்சல் ஒருவேளை அவரிடம் இல்லையோ என்ற எண்ணம்தான் எழுகின்றது. ஆனாலும் உண்மையான சார்பியலின் பிறப்பிற்கு இந்த லோறன்சின் குறுக்கமும் ஒரு முக்கிய காரணியாக இருந்தது. இவை இவ்விதம்



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 36ஆம் பக்கம்



# BASEMENT RENT

***NEILSON & MORNINGSIDE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2012.
416.298.0843 / 416.319.2250

***MARKHAM & STEELES***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Family preferred. Avail.December 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.558.8562

***MORNINGSIDE & LAWRENCE***
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. December 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.888.0633

***MORNINGSIDE & SHEPPARD***
1 Bedroom bsmt for rent.Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.998.0966

***STEELES & STAINES***
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.868.8975 / 647.768.8587

***PHARMACY & FINCH***
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $350.
தொடர்புகளுக்கு: 647.706.4187

***YORKMILLS & VICTORIAPARK***
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to all facilities. Avail. immediately. Rent $750 + 1/3 utilities. 850 Sq.ft bsmt.
தொடர்புகளுக்கு: 647.721.1276

***BRIMLEY & ELLESMERE***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.877.3810

***BRIMLEY & LAWRENCE***
1 or 2 or 3 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.894.9122

***MORNINGSIDE & OLD FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime. ***4 Bedroom house for sale. Close to all facilities.***
தொடர்புகளுக்கு: 416.456.7420

***TAPSCOTT & MCLEVIN***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Everything included. Close to school, TTC, Malvern mall. No pets & No smoking. Avail. December 01, 2012.
416.269.7052 / 416.358.7265

***MORNINGSIDE & SEWELLS***
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: ***416.551.8379***

***MARKHAM & ELSON***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.471.2582 / 647.505.2582

***FINCH & MIDDLEFIELD***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 15, 2012.
தொடர்புகளுக்கு: 416.931.3444

***BRIMLEY & LAWRENCE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet. New Lamanite floor. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.268.3019

***STAINES & STEELES***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Family preferred.
647.833.7471 / 416.803.4184

***MCCOWAN & MCNICOLL***
Large 1 bedroom bsmt for rent. Sep. entrance, washroom, kitchen, livingroom, parking. Close to TTC. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.321.8558

***MORNINGSIDE & SEWELLS***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to HWY 401 & all facilities. Avail. Anytime.
647.724.8116 / 647.740.4695

***SCAR.GOLF CLUB & ELLESMERE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 15, 2012.
தொடர்புகளுக்கு: 416.836.2253

***EGLINTON & MIDLAND***
2 Big bedroom bsmt for rent. Sep. entrance, parking. Bills inclusive. Close to Kennedy subway, school, TTC.
416.750.0363 / 416.759.9675

***MARKHAM & DENISON***
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. December 01, 2012. Couple preferred.
905.209.9212 / 416.562.5113

***SCAR.GOLF CLUB & ELLESMERE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.648.3137

***MORNINGSIDE & SEWELLS***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.839.0679

***MIDLAND & EGLINTON***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, mall, TTC. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.755.8397

***BELLAMY & PANDORA CIR.***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

***BIRCHMOUNT & LAWRENCE***
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to to TTC, mall, subway, school. Family or students preferred. Avail. December 01, 2012.
416.701.9942 / 647.883.2257

***NEILSON & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to all facilities. அத்துடன் மேல்தளத்தில் அறையும் வாடகைக்கு உண்டு. மாணவிகள் மட்டும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.414.6094

***KENNEDY & ELLESMERE***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet. Close to all facilities. No smoking & No drink. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.315.6140

***MCCOWAN & BRIMORTON***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2012.
416.439.1570 / 416.431.5195

***BRIMLEY & MCNICOLL***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.866.9464

***NEILSON & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

***MORNINGSIDE & SHEPPARD***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.826.4205

***MORNINGSIDE & STAINES***
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.303.4172

***BELLAMY & LAWRENCE***
2 Bedroom ground floor apt. for rent. Close to mall, TTC, school, tamil stores. Ladies or young couple preferred.
தொடர்புகளுக்கு: 416.258.2074

***MARKHAM & DENISON***
Newly renovated 1 large bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.821.2344

***KENNEDY & FINCH***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, hospital. Avail. December 01, 2012.
416.819.6654 / 647.703.7781

***BRIMLEY & ELLESMERE***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
416.431.5195 / 416.439.1570

***MORNINGSIDE & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.347.1685 / 647.449.1685

***BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

***MARKHAM & ELSON***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.7594

***LAWRENCE & BIRCHMOUNT***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.588.2410

***ELLESMERE & SCAR.GOLF CLUB***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.419.7873 / 416.335.9290

***BRIMLEY & ELLESMERE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.627.7556 / 416.409.8896

***MARKHAM & SHEPPARD***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Seniors or Single person preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.840.4557

***MARKHAM & ELLESMERE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Couple preferred. Avail. immediately.
647.343.2387 / 647.680.5093

***LAWRENCE & MARKHAM***
1 Bedroom bsmt & 1 Bachelor apt. for rent. Close to all facilities. Parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
416.627.6194 / 416.282.9235

***MORNINGSIDE / SHEPPARD***
Newly renovated 2 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Gardening செய்யும் வசதியும் உண்டு. Mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking.
416.834.1081 / 647.783.9063

***MORNINGSIDE & MCNICOLL***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.335.9608 / 416.844.4164

***KENNEDY & FINCH***
2 Bedroom bsmt for rent. Cable, parking. Close to TTC, Tamil stores, Temple, Grace Hospital, school. Avail. immediately.
416.230.7696 / 647.966.8612/ 416.412.0406

மேலும் பக்கங்கள் 25, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

## BASEMENT FOR RENT

**STAINES & STEELES**
2 bedroom bsmt and 1 Bedroom for rent - main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. 416.805.5722 / 647.348.1913

---

**MORNINGSIDE & SHEPPARED**
Newly renovation 2 bedroom bsmt for rent. Sep. entrance, cable, internet. Couple or students preferred. Close to TTC, mall.
416.286.1755 / 647.852.3806

---

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.505.4316

---

**MCCOWAN & 14TH AVE**
1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.725.6863

---

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.438.3724

---

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No smoking & No pets.
905.334.7398 / 905.554.3327

---

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, washroom, kitchen. Close to all facilities. Couple preferred. Avail. November 01, 2012.
905.294.1117 / 647.962.4315

---

**VICTORIAPARK & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.752.5038 / 647.208.9096

---

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school & all facilities.
தொடர்புகளுக்கு: 905.294.1018

---

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

---

**MORNINGSIDE & FINCH**
Newly done 1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.855.0339

---

**MIDDLEFIELD & DENISON**
One Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. No drinks & No pets.
416.823.3415 / 905.472.3548

---

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, mall. Avail. immediately.
416.335.3638 / 647.821.1284

## BASEMENT FOR RENT

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to bus, shopping, school, etc. Avail. immediately.
905.201.4812 / 647.768.1499

---

**16TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

---

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Very convenience location.
தொடர்புகளுக்கு: 416.264.3899

---

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to temple, mall, Tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.296.7932

---

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. All utilities, parking. Close to TTC, plaza & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.817.9994

---

**MORNINGSIDE & KINGSTONE**
Brand new One bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MCCOWAN &LAWRENCE**
One bedroom bsmt also Available.
416.902.1758 / 416.294.6000

---

**ELLESMERE & KENNEDY**
1 Bedroom bsmt for rent. Laundry, washroom, kitchen. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.
416.298.1598 / 647.239.7269

## ROOM FOR RENT

**KENNEDY & SHEPPARD**
One Master bedroom for rent in a condo. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.309.2350

---

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Close to mall, TTC, HWY, Science techno center, hospital, etc. 3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.852.1296

---

**FINCH & NEILSON**
1 big bedroom for rent. Sep. washroom, laundry, park, cable. Close to mall, TTC, etc. 2 bedroom bsmt also available.
Home: 416.332.8517 /
Cell: 647.289.8780

---

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.949.1968

---

**KENNEDY & ELLESMERE**
1 Master Bedroom for rent. Laundry. Close to all facilities. Avail.immediately.
416.609.0349 / 416.725.3665

## ROOM FOR RENT

**MCLEVIN & ELSON**
1 Bedroom for rent. 3 Piece washroom, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.206.3436

---

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

---

**MCCOWAN & LAWRENCE**
Room for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
647.827.5529 / 647.294.2212 / 647.717.9537

---

**MARKHAM & ELSON**
Rooms for rent in main floor. Ladies preferred. Parking. Close to all facilities. Avail. Anytime.
647.206.9438 / 905.201.8320

---

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

---

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

---

**674 KENNEDY RD**
**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.298.4800 / 416.454.4466

---

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom immediately available in bsmt for rent with sep. entrance. Including parking, laundry and washroom also available.
416.291.3153 / 647.388.2478
416.754.0823 (Call after 6.00pm)

---

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence YRT. ஒருவர் விரும்பத்தக்கது. Available: immediately.
416.994.9635 / 416.757.9456

---

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.438.2626 / 647.286.7687

---

**MORNINGSIDE & NEILSON**
2 Large bedrooms வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Including bedroom set. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.0072

---

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

---

**NEILSON & FINCH MORNINGSIDE**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

## ROOM FOR RENT

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.557.7241

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
3 Bedroom + 1 bedroom bsmt house for rent. Parking, laundry. இரண்டும் தனித்தனியாக கொடுக்கப்படும். $1399 upper level only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.271.5973

---

**NEILSON & SHEPPARD**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.969.0175

---

**9TH LINE & REEVES WAY**
New 4 bedroom house for rent. Parking, landry, 3 washrooms. Close to go station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.296.7932

---

**MCCOWAN & LAWRENCE**
3 Rooms for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

## உடனடி வாடகைக்கு

2 Bedroom கொண்டோ வோஷ் ரூம் கிச்சின், லிவிங்ரூம், பாக்கிங் மற்றும் பல வசதிகளுடன் கூடியது. (கெனடி / எல்ஸ்மயர்)
2 Bedroom பேஸ்மன்ட் பிக்கரிங்கில்
மேலதிக விபரங்களுக்கு: 416.816.9011

## APARTMENTS ROOMS FOR RENT

1 or 2 or 3 bedrooms available
NEWLY Renovated High-Rise Apartments Building. Utilities Incld, Clean. Free Parking. Close to TTC, Tamil store in building, Schools.. **Pl. CALL: 416.264.2818**

## CONDO. R

**NEILSON & FINCH**
2 Bedroom condo. for rent. Walking distance to mall, school, 24hrs. Finch bus.
தொடர்புகளுக்கு: 416.904.2844

## BUSINESS FOR SALE

**RICHMOUNDHILL**
Restaurant for sale. Pizza & Bar.
தொடர்புகளுக்கு: 647.854.0011

## AIRPORT SERVICE

### Need A Ride?

விமான நிலையத்திலிருந்து ஆட்களை கூட்டிவரவும், விமானநிலையத்திற்கு அழைத்துச்செல்லவும்
அழையுங்கள்: 647.701.6617

மேலும் பக்கங்கள் 24, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# வணங்குகிறோம்!



காந்தள் மலர்கள் விரிந்தாடும்
கார்த்திகைத் திங்களில் உம்நினைவை
ஏந்தி நெஞ்சில் நன்றியுடன்
என்றும் போற்றி ஏற்றிடுவோம்!
தீந்தமிழ்த் தாயின் விலங்குடைக்கச்
செருக்களம் சென்று உயிர்நீத்த
ஏந்தல் களேமா வீரர்களே!
இருகை கூப்பி வணங்குகிறோம்!!

தந்தை செல்வா போன்றபல
தலைவர் எல்லாம் போராடி
எந்தப் பயனும் காணாது
இறுதியிற் கையறு நிலையெய்தி
நொந்த போது தமிழரது
நோய்க்கு மருந்தாய் நம்முன்னே
வந்த தலைவன் பாதையிலே
வாழ்ந்த தியாகச் செம்மல்களே!

முப்படை வைத்து உலகெல்லாம்
மூக்கில் விரலை வைத்திடவே
அப்படை நடத்தி அகிலத்தை
அசந்து நிற்கச் செய்தவனின்
சொற்படி நடந்து மண்மீட்கத்
துணிந்து உயிரைத் தந்தீரே!
எப்படி உங்களை நாம்மறப்போம்
என்றும் நெஞ்சிற் சுமந்திடுவோம்!

சொல்லும் செயலும் ஒன்றாக்கித்
துணிந்தெம் தலைவன் பாதையிலே
வெல்வோம் என்ற ஓர்மத்தில்
வேள்வி காத்த வீரர்களே!
அல்லும் பகலும் எமக்காக
அயரா துழைத்த செல்வங்களே!
சொல்வோம் நன்றிகள் உங்களுக்குத்
துதிப்போம் இருகை கூப்பியிவண்.

வாழ வேண்டிய காலத்தை
மலரும் இளமைக் கனவுகளை
தோழ ரோடு உறவாடித்
துள்ளித் திரியும் பருவத்தை
ஈழம் காணும் கனவுக்காய்
எங்கோ வைத்து உயிரீந்த
ஆழ மான உம்முணர்வை
அஞ்சலி செய்து போற்றுகிறோம்!
உங்கள் கொடையை மதிக்கின்றோம்!
உமக்காய்க் கண்ணீர் வடிக்கின்றோம்!!
எங்கே நாங்கள் வாழ்ந்தாலும்
ஈழம் காண உயிர்தந்த
தங்கள் உன்னத இலட்சியத்தை
தடைகள் உடைத்து நாமடையப்
பொங்கி எழுவோம் வீரர்களே!
பொறுப்புடன் நடப்போம் தோழர்களே!!

ஏங்கித் தவிக்கும் ஈழவரின்
இலட்சியக் கனவைத் தமதாக்கிப்
பாங்காய்ப் பட்டம் பதவிக்குப்
பயன்படுத் திடுவோர் முகத்திரையை
நாங்கள் கிழித்துத் தமிழீழம்
நாளை மலரச் சபதங்கள்
ஈங்கு எடுப்போம் வீரர்களே!
என்றும் உங்களை நாம்மறவோம்!

குத்துக் கரணம் போட்டிடுவோர்
குத்துக் கரணம் போடட்டும்!
செத்தும் சாகா தெம்மோடு
சேர்ந்து வாழும் வீரர்களே!
ரத்தம் சிந்திய எம்மண்ணை
நாளை மீட்போம் இதுசபதம்!
புத்தொளி வீசும் அம்மண்ணிற்
புதுவாழ் வமைப்போம் பாருங்கள்!!

- அருள்மணி -

# சுமைகளை சுகங்களாக்குங்கள்

**தாய் கருவை வயிற்றில் பத்துமாதம் சுமக்கிறாள். பிறந்தபின் சேயை தந்தை தோளில் சுமக்கிறார். எல்லோரும் ஏதாவது ஒரு சுமையை உள்ளத்திலே சுமந்து கொண்டே இருக்கிறார்கள். எனவே அனைவரும் சுமை தாங்கிகளே. சுமைகளை சுகங்களாக்குங்கள்.**

எனக்கு மட்டும் ஆண்டவன் இவ்வளவு கஷ்டத்தை கொடுத்திருக்கிறானே! இதுமாதிரி பலர் பல சந்தர்ப்பங்களில் சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். ஏதோ ஆண்டவன் எல்லோருக்கும் அளந்து அளந்து கஷ்டத்தைக் கொடுப்பது போலவும் ஒரு சிலருக்கு மட்டும் அளவேயில்லாமல் கஷ்டத்தை அள்ளி வந்து அவர்கள் வீட்டில் கொட்டி விடுவது போலவும் பேசுவது எவ்வளவு அபத்தமானது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

வெயில் என்பது ஒரே அளவாகத்தான் காயும். தெருவில் வருவோர் போவோரை கவனித்துப் பாருங்கள். ஒருவர் என்ன மோசமான வெயில் எனக்கூறி நிழல் தேடி ஒதுக்கிடம் தேடுவார். இன்னொருவர் 'சே என்ன ஒரேயடியாக இப்படிக் கொளுத்துது' என்று சொல்லி இளநீர் வாங்கி குடிப்பார். மற்றொருவர் தள்ளாடி எதையும் பொருட்படுத்தாமல் தன் வேலையை முடிக்க வேண்டி தெருவில் விறுவிறுவென்று நடந்து கொண்டிருப்பார். இப்போது சொல்லுங்கள் சூரியன் தன் வெப்பத்தை ஒருவருக்கு 22 டிகிரியாகவும் இளநீர் குடித்தவருக்கு 32 டிகிரியாகவும், மயங்கி விழுந்தவருக்கு 40 டிகிரியாகவும் தனித்தனியாகவா பிரித்துக் கொடுத்தது. இல்லை, தெருவில் விறுவிறுவென நடந்தவருக்கு மட்டும் விசேடமாக குடைபிடித்ததா? சூரியன் தன் கடமையை ஒருவருக்கு கூட்டியும் மற்றவருக்கு குறைத்தும் செய்வதில்லை.



அதே போலத்தான் ஆண்டவனும் தன் கடமையை செய்து கொண்டிருக்கிறார். முனுசாமிக்கு முப்பது கிலோ, நாராயணசாமிக்கு நாற்பது கிலோ என அவர் கஷ்டங்களை பிரித்தா கொடுக்கிறார். தாங்கும் சக்தி இல்லாத சிலர் கஷ்டம் வந்தபோது திட்டுகிறார்கள். இன்னும் சிலர் ஐயோ இவ்வளவு கஷ்டமா என்று அங்கலாய்த்து தலையில் கை வைத்து உட்கார்ந்து விடுகிறார்கள். இன்னும் சிலர் தாங்கும் சக்தியின்றி ஒரேயடியாகப் படுத்து விடுகிறார்கள். மிகுந்த பக்தி கொண்டவர்கள் தான் தாங்கும் சக்தியோடு தடங்கல்களை பொருட்படுத்தாமல் தடையின்றி தம்வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்து மேற்கொள்கின்றனர். எனவே கஷ்டங்கள் என்பது கால் நடையாகப் போகிறவர்களுக்கும் உண்டு. காரில் போகிறவர்களுக்கும் உண்டு. அப்படியானால் கோயில் எதற்கு? தெய்வம் எதற்கு என்று வினவலாம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இருக்கும் போது ஒன்றின் அருமை தெரியாது. இல்லாத போதுதான் அதன் அருமை தெரியும். உப்பு என்பது நம்மைப் பொறுத்தவரை சாதாரண விடயம். அதைப்பற்றி பெரிதாக நினைத்துப் பார்த்து ஏங்கமாட்டோம். அதேவேளை மஞ்சட்காமாலை வந்தால் ஒருமாதம் உப்பில்லாமல் பத்திய உணவு சாப்பிடும் போதுதான் நமக்கு அமுதமாக தெரியும். அதற்காக ஏங்குவோம். இதேபோன்று கடவுளின் அருமையும் கஷ்டத்தில் தான் தெரியும்.

மனித மூளை அபாரமானது. வியத்தகு சாதனைகளை அது புரிந்துள்ளது. காற்றில் ஏறி விண்ணை வெற்றி கொண்டுவிட்டான் மனிதன். கணினியை செயற்கை மூளை எனலாம். எனவே மனிதனது கண்டுபிடிப்புகள் அவனை கைகூப்பித் தொழ வைக்கின்றன. இருந்தும் அவன் கடவுளை நாட வேண்டியுள்ளது.

சைக்கிள் ஓட்டும் சாதாரண மனிதனிலிருந்து ஆகாய விமானத்தை ஓட்டும் பைலட் வரை கடவுளை வணங்க கோயிலுக்கு செல்கிறார்கள் என்பதிலிருந்து அவரவர் நிலைக்கு ஏற்ப ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு குறையை வைத்திருப்பது புலனாகிறது. கஷ்டப்படாத மனிதன், கவலையில்லாத மனிதன், தோல்வி காணாத மனிதன் இவ்வுலகில் இல்லவேயில்லை.

சுமைகளை சுகங்களாக நினைக்கும் மனப்பக்குவமும் வந்து விட்டால் போதும். சுமைகள் நாளடைவில் மறைந்தே போகும். அதற்கு ஒரேவழி பக்திதான்.

வாழ்க்கையில் நாமே நமக்கே ஏற்றிக்கொள்ளுதல் சுமைகள் தான். அவை சீனப்பெருஞ்சுவர் போல நீண்டு செல்லும். தூக்கமுடியாத அளவிற்கு சுமைகளை தூக்கிக் கொண்டு ஏன் நாம் ஆண்டவன் அடியினை நாடுகின்றோம். அப்பொழுது ஆனந்த சுகம் கிட்டும்.
நிலவு அழுது புரள்வதில்லை.



நா. க. சிவராமலிங்கம்



## காணி விற்பனைக்கு

வவுனியா பண்டாரிக்குளத்தில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மகாவித்தியாலயத்திற்கு முன்புறம் உள்ளது.
416.414.2280 / 416.297.5203

## CAR FOR SALE

1997 & 1998 CRV cars for sale. Black colour. 4 Door. Automatic. Good condition.
416.688.8364 / 416.754.2002

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569

## CAR FOR SALE

2009 Honda Civic car for sale. 45,000 km. Fully loaded. Power lock & Power window. Price $10,995.
தொடர்புகளுக்கு: 416.575.5055

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough. ***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

## மணமகள் தேவை

France ஐ வதிவிடமாக் கொண்ட 42 வயதையுடைய ரோமன் கத்தோலிக்க விவாகரத்தான மணமகனுக்கு கனடாவில் பெண் தேவை. விவாகரத்தான பிள்ளைகள் அற்ற மதம் மாறக்கூடிய பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.335.0758

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை வதிவிடமாக கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 647.918.5520

## தையல் வகுப்புக்கள்
## தையல் *Orders*

***MARKHAM & LAWRENCE***

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## வீடுகள், கொண்டோக்கள் வாடகைக்கு தேவை

- எமி வீடு ,பேஸ்மன்ட், கொண்டோ மாசம் மாசம் உங்கட பணத்தை வீணாக்குதா?
- உடனடியாக. சோலியில்லாத ஆக்கள கண்டுபிடிச்சு இலகுவாக வாடகையை பெற வேண்டுமா?

**அழையுங்கள்...**
**Jey 416-816-9011**

Jey Rasathurai
Sales Representative

Rapid Realty Inc. Brokerage
www.rapidrealty.ca
Bus:416-259-2002

## HOUSE FOR SALE
## PRIVATE SALE

***MIDDLEFIELD & FINCH***

2 Bedroom + Den house for sale.1 washroom. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.1661

## HOUSE FOR SALE

யாழ்ப்பாணம் KKS வீதியில் பழைய Milk White Company க்கு அருகாமையில் மூன்று பரப்புக் காணியுடன் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளும் நிறைந்த இரண்டுமாடி வீடு விற்பனைக்கு உண்டு. Jaffna University, Technical College, Hindu College, Hindu Ladies College மிக குறுகிய தூரத்தில் உண்டு.
தொடர்புகளுக்கு:
416.291.6667 / 416.895.8111

## TUITION
## KEY BOARD CLASSES

***MARKHAM & LAWRENCE***

ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## TUITION

தரம் Gr. 3 - Gr. -12
***Math, Science, English***
கனேடிய பட்டம் பெற்ற ஆசிரியரினால் வீட்டில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.293.6211

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## JOB JOB JOB

ஸ்காபரோ Birchmount & Sheppard வீதியில் 2258 இலக்கத்தில் புதிதாக திறக்கப்பட உள்ள புதிய உணவகத்திற்கு உடனடியாக அனுபவமும் ஆற்றலும் உள்ள சமையல்காரர்கள் தேவைப்படுகிறனர். குறிப்பாக தென் இந்திய உணவு வகைகளுடன், தாயக உணவு தயாரிப்பதிலும் மிகுந்த அனுபவம் கொண்டவராக இருத்தல் அவசியம்.
தொடர்புகளுக்கு: 647.401.2114

## Live In Caregivers Needed

***KEELE & EGLINTON***

வயது வந்த தம்பதியினரை வீட்டோடு இருந்து பராமரிக்க Live In Caregivers தேவைப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.818.2632

## JOB JOB JOB

Pizza கடை ஒன்றிற்கு Delivery driver தேவை. வாகனம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.875.6869

## HELP WANTED FOR OFFICE JOB

Full-time or Par-time. No experience needed. We will train you.
Moneytimes@rogers.com
Contact: 416.938.7510

## JOB JOB JOB

***KEELE & STEELES***

பகுதியில் Body works & painting வேலைக்கு ஆள் தேவை. தொடர்புகளுக்கு
416.667.1626 / 647.831.9005

மேலும் பக்கங்கள் 24, 25

## JOB JOB JOB

### *Professional Tamil Translators*

**தமிழ் மொழிபெயர்ப்பாளர் தேவை**

We are looking to hire certified professional Tamil Translators. Successful candidates must have excellent communication skills in Tamil and English.
Please email resumes to ***ontariocareers@yahoo.ca*** with subject heading "Translator"
***Fax: 905-477-5193***

## OFFICE SPACE FOR RENT

### *MORNINGSIDE & SHEPPARD*

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.** ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

## *Pl. Call: Murale - 416.569.4065*

## EZ JOB AGENCY

### *MARKHAM & LAWRENCE*

Warehousing helper, Forklift (Operator), Driver, Shipping & Receiving, Machine Operator, Heavy Lifting.
***Start to Work Register Now***
***416.430.0888 / Fax: 416.431.0666***

## யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

**காலம்:** ஞாயிற்றுக் கிழமை, டிசம்பர் 02, 2012 **நேரம் :** காலை 10.00 மணி
**இடம்:** ஸ்காபரோ சிவிக் சென்ரர், ***Council Chamber, Scarborough Civic Center, 150 Borough Dr. , Scarborough , ON M1P 4N7*** இல் நடைபெறவுள்ளது.

உங்கள் கருத்துக்களைத் தெரிவித்து புதிய நிர்வாகக் குழுவைத் தெரிவு செய்வதற்காக அனைத்துப் பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா அன்புடன் அழைக்கிறது.

தொடர்புகள்: பாலேந்திரா: 416.230.5506 தயா: 416.421.6469
www.jaffnahinducanada.com

## தமிழ் மொழிப் பயிற்சி நூல்
## வெளியீட்டு விழா

**காலம்:** நவம்பர் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணி.
**இடம்:** சென்.கிளமென்ற் ஒ.்.றிட் மசிடேனியன் தேவாலயம்

***Macedonian Orthodox Church***
***St. Clement of OHRID 76. Overlea Boulevard***
***Toronto, ON, M4H 1C5***

# மனோசக்தி - *MENTAL POWER*

அணுவிற்குள் அற்புதமான சக்தி அடங்கியிருக்கின்றது. இது இயற்கையின் மிகப்பெரிய இரகசியமாகும். பிரபஞ்ச அமைப்பில் மனிதன் சிறியவன்
என்றாலும் அவனது ஆற்றல் மிகவும் பெரியது என்பதனை விஞ்ஞான ஆய்வுகள் தெளிவாக்கி வருகின்றன. இயற்கையின் ஆற்றல்களை ஆராய்ந்து வரும் விஞ்ஞானம் மனிதசக்தியை மனோ சக்தியை ஆராய முற்பட்டுள்ளது. மனித ஆற்றலைப் புரிந்து கொள்ளுவதற்குப் பிரபஞ்சம் பற்றிய அறிவு இன்றியமை யாதது. ஞாயிற்றுத் தொகுதியின் இயக்கத்தில் பூமியும் ஒரு அங்கம். பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றிவருகின்றது. சந்திரன் பூமியைச் சுற்றி வருகின்றது. அனைத்துக் கோள்களினது இயக்கங்களினாலும் பருவகாலங்கள் தோன்றுகின்றன. இந்த இயக்கத்தினை ஆரம்பித்து வைத்தவர் யார்? இதனை அறிய முற்பட்ட வேளையில் ஏதோ ஒரு சக்தி காந்தசக்தி இயக்கங்களை நடத்துகின்றது என்று மட்டுமே தெரிகின்றது. காந்தமயமான பிரபஞ்சத்தில் தோன்றிய மனிதனிடமும் அபராசக்தி புதைந்து கிடக்கின்றது.

சிறிய வடிவமான அணுவை உடைக்கும் போது அளவற்ற ஆற்றல் பிறப்பது போன்று சிறிய மனித உடலில், மனத்துடன் தொடர்புடைய மனோசக்தி அளவற்ற ஆற்றலுடன் தொழிற்படுகின்றது. மனித இயக்கத்தில் இதயத்துடிப்பு, நரம்பு மண்டலங்கள் எவ்வாறு தொழிற்பட ஆரம்பித்தன, தொடர்ந்து செயற்படு கின்றன என்ற ஆய்வு இன்னும் நடைபெறுகின்றது. மனிதமூளை கணினி போன்ற ஆற்றலுடன் செயல்படுகின்ற நிலையில் மனித உடலிலும் ஒருவகை காந்தசக்தி செயல்படுகின்றதா? என்ற வினா எழுகின்றது.

சிலவேளைகளில் சிலரது பார்வையில் காந்தசக்தி இருப்பதனை நாம் கண்டு வியந்து போய்விடுகின்றோம். கண்களை வர்ணிக்கும் போது காந்தம் போன்ற கண்கள் என்று கூறுவதனை அவதானிக்கின்றோம். இதே போன்று நரம்பு மண்டலம் மூளை அனைத்தும் தொழிற்படும் போது மனோசக்தி பிறக்கின்றது. பல மகான்களின் காந்தம் நிரம்பிய பார்வையும் காந்தசக்தியுடன் கூடிய உடற் தொழிற்பாடும் அசாதாரண நிலைக்கு அவர்களைக் கொண்டு சென்றுவிடுகின்றது. நம்மால் முடியாத ஒன்றினை அவர்கள் செய்யும்போது அற்புதம் நிகழ்த்தப்படுவதாக எண்ணுகின்றோம். எத்தனையோ அபூர்வ மனிதர்கள், ஆற்றல் மிக்க மகான்கள், மனோசக்தி படைத்த யோகிகள் வரலாற்று ரீதியில் வாழ்ந்துள்ளனர்.

மனத்தின் ஆற்றல் உண்மையில் சாதாரண அறிவினால் புரியமுடியாத ஒன்று. மனத்தினை ஒருமைப்படுத்தி தன்னை ஜீவ ஒளியாக மாற்றிய மனோசக்தி படைத்த மகான்கள் பலரை இந்திய துணைக்கண்டம் உலகிற்குத் தந்துள்ளது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நடப்பதனைக் கூறியவர்கள். உடலை நெருப்பால் சுட்டபோதும் வலியை உணராதவர்கள். பார்வையால் ஆயிரக் கணக்கானவர் களைப் பெட்டிப் பாம்பாக மாற்றியவர்கள். ஸ்பரிசத்தால் நோய்களை மாற்றியவர்கள் எனப்பலர் வாழ்ந்துள்ளனர். இந்திய துணைக்கண்டம் மட்டுமன்றி பல



நாடுகளில் நடைபெற்ற ஆய்வின் மூலம் அபூர்வ சக்தி படைத்த மனம் பலரிடம் இருந்துள்ளது என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. தூரங்களைத் தாண்டி மனம் வியாபிக்கின்றது என்ற உண்மைகள் வெளிவந்துள்ளன. நம் ஒவ்வொருவரிலும் சக்தியுள்ள மனம் இருந்தாலும் சிலரிடம் இது அபரிமிதமாக இருக்கின்றது.

மனத்திற்கு உள்ள ஆற்றலே 'மனோசக்தி' என்ற வகையில், மனத்தினை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை நினைவுமனம், ஆழ்மனம், அதீதமனம் என்பன. அன்றாடம் நடைபெறும் வாழ்க்கை தொழிற்பாடுகள் நினைவு மனமாகவும், அனுபவங்களின் பதிவு ஆழ்மனமாகவும் வெளியே சென்று பிரபஞ்சத்துடன் தொடர்புபடுவது அதீத மனம் என்றும் கொள்ளலாம். உடலைப் போன்று மனம் களைப்படைவது குறைவு. மனத்தினை உற்சாகமாக வைத்துக் கொள்ளும்போது பல அற்புதங்கள் நிகழ்கின்றன. தியானத்தின் மூலம் மனம் களைப்படையாது காக்கப்படுகின்றது. அத்துடன் பிரபஞ்சத்துடனும் இணைக்கப் படுகின்றது. சிந்தனை கூர்மையாகின்றது. சாதாரணமான அறிவு ஞானம் ஆகின்றது. இந்த அறிவே பலரைத் தூர திருஷ்டித்தனம் நிறைந்ததாக்குகின்றது. பல தீர்க்கதரிசிகள் மனோபலம் உடையவர்களாத் திகழ்ந்துள்ளார்கள்.

அலெக்சி கேரஸ் என்ற அறிஞர் இதுபற்றிக் கூறும்போது நம் உடல் பற்றிய அறிவை நாம் வளர்த்த அளவுக்கு எம் மனநிலை பற்றிய அறிவை வளர்க்க வில்லை என்று கூறுகின்றார். ஐன்ஸ்டீன் முதல் தோமஸ் அல்வா எடிசன் வரையில் பிரபஞ்ச அறிவு பெற்ற பல விஞ்ஞானிகள் வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் திடீரென்று தோன்றிய மனோசக்தியால் கண்டுபிடிப்பு செய்துள்ளனர். இதனை விஞ்ஞானி ஐன்ஸ்டீன் குறிப்பிடும் போது 'குறிப்பிட்ட எல்லைவரை செல்ல முடிந்தது அதற்கு பின்பு மனம் தாவிச் சில உண்மைகளைக் கண்டறிந்து' என்று கூறியுள்ளார். இக்கூற்றில் உண்மையுண்டு. பிரபஞ்ச பேராற்றலுடன் மனம் தொடர்புகொண்டு பல உண்மைகளைப் பெற்றுக்கொண்ட தனை எம்மால் உணர முடிகின்றது.

மனோசக்தியைக் கண்களில் தேக்கி காந்தசக்திபடைத்த மகான்களில் சுவாமி விவேகானந்தர் என்றும் எமது நினைவுக்கு வருவார். இவரது கண்களில் ஒளிவீசும். பிறரைக் கவரும் வசீகரம் பார்வையில் இருந்தது. மனோவசியம் என்னும் கலையிலும் பார்வையே உதவுகின்றது. ஒருவரை நித்திரையாக்கும் போது எமது உறுதியான எண்ணங்கள் மிகுந்த ஆற்றல் படைத்தவை. ஒரு குறிக்கோளை வசீகரித்து தமது விருப்பப்படி தொழிற்பட வைக்கின்றார்கள். 'நீ என்ன நினைக்கின்றாயோ அது போலவே உன் வாழ்வு அமைகின்றது' என்ற கூற்றில் உள்ளது போன்று வாழ்வுக்கு எண்ணங்கள் முக்கியமானவை. அபூர்வ மான எண்ணங்களே ஆக்கபூர்வமான சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. அபூர்வமான எண்ணங்களே ஆக்கபூர்வ மான சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. எமது வாழ்வு மற்றவர்களினால் உருவானதல்ல. எமது எண்ணங்களினால் உருவாகின்றது. தொடர்ச்சியான சாதக-மான சிந்தனைகள் மூலம் மனோபலம் அல்லது மனோசக்தி ஏற்பட்டு புதிய சூழ்நிலைக்கே நாம் இட்டுச் செல்லப்படுகின்றோம்.

எதுவும் நடக்கும் என்று சிந்திப்பதே ஆக்கபூர்வமான சிந்தனையாகும். எதிர்மறையான சிந்தனை தோல்வியில் முடிந்து விடுகின்றது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஆழ்மனத்தில் எதிர்மறை எண்ணங்கள் படிந்து விடுவதால் எமது ஆக்க பூர்வ சிந்தனைகள் தடைப்பட்டுப் போகின்றன. விஞ்ஞான ஆய்வுப்படி தினசரி படுக்கைக்குச் செல்லும்போது நாம் எதிர்மறை எண்ணங்களை அகற்றி ஆக்கபூர்வ சிந்தனைகளை உருவாக்க வேண்டும். மகிழ்ச்சியான அலைகள் தோன்றுவதால் நம்பிக்கையும் உறுதியும் தோன்றும். மின்சாரத்தினைக் கண்டு பிடித்த தோமஸ் அல்வா எடிசன், விமானத்தினைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள், மோட்டார் இயந்திரத்தினைப் பரவலாக்கிய போர்ட் போன்றவர்கள் நம்பிக்கையுடன் ஆக்கபூர்வ சிந்தனையில் ஈடுபட்டமையால் தான் பல சாதனைகளைப் படைக்க முடிந்தது.

மனோசக்தியில் நம்பிக்கை மிகவும் இன்றியமையாதது. நம்பிக்கை என்னும் போது கடவுள் நம்பிக்கை மட்டுமல்ல. எந்த ஒரு கருமத்திலும் நம்பிக்கை வைப்பதே அதுவாகும். நம்பிக்கை தனிமனிதர்களை சாதனை படைக்க வைத்துள்ளது. உளவியல் சிகிச்சை முறையில் நம்பிக்கை முக்கிய பங்கு கொள்கின்றது. ஆன்மீக வடிவத்தில் நம்பிக்கை எழுந்து மனோதிடம் நிலை பெறுவதும் அவரவர் எண்ணங்களைப் பொறுத்தது. இந்து மதத்தில் உள்ள சடங்குகள், வழிபாடுகள் அனைத்தும் நம்பிக்கையின் வேறு வடிவங்கள். இது உண்மையில் ஒரு மனோதத்துவப் பயிற்சியேயாகும்.

மனிதனிடம் உள்ள காந்தசக்தி எவ்வாறு மனோசக்தியாகின்றது என்ற ஆய்வும் நடைபெற்றுள்ளது. ஆழ்மனமே பிரபஞ்சத் துடன் மனோசக்தியை இணைக்கின்றது. சில வேளைகளில் மனத்துடன் எமது உடலும் தொடர்புபடுகின்றது. பொதுவாக ஞானிகள், ஆன்மீகவாதிகளின் உடல் ஒளிவீசும் தன்மையன. பார்த்த மாத்திரத்தில் எம்மையறியாமல் அவர்களின் உடலின் எம்மை இணைத்துப் பார்க்கின்றோம். இவர்கள் நம்பிக்கை யுடையவர்கள். கம்பீரமாக நடக்கிறார்கள். சொற்களில் சக்தி, ஆணித்தரம்



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

Professional Pest Control
*Elimination of Roaches & Mice*
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997
• Cockroaches • Rats & Mice
• Wasps & bees • Birds
• Ants & Spiders



ELECTRICAL WORKS



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

# 'மாற்றான்'...

கண்டேல்கர் தன் அகலக் கண்களை விரித்து சமாளித்திருக்கும் இடங்களில் எல்லாம் பின்னணிக் குரல் அபாரமாக அதை ஈடு செய்கிறது.

சுவாரசியங்கள் இதில் வெளிப்படுகின்றன. இதற்காக உழைத்திருப்பதற்கு நிச்சயம் பாராட்ட வேண்டும். வளர்ந்த சூர்யாக்களும் வெவ்வேறு குணாதியங்களுடன் இருப்பது



ஒளிப்பதிவு சௌந்தர்ராஜன். இந்தியாவில் முதல் முறையாய் பெர்பாமென்ஸ் கேப்சரிங் எனும் டெக்னாலஜியை பயன்படுத்தியிருக்கிறார்கள். நார்வேயில் வரும் பாடல் காட்சிகளில் நம்மை ரசிக்க வைக்கிறார். இடைவேளைக்கு முன் வரும் எம்.ஜி.எம் சண்டைக்காட்சிகளிலும் ஒளிப் பதிவு அபாரம். 'கால் முளைத்த பூவே', 'நாணி கோணி' ஆகிய பாடல்கள் கேட்கும் படியாய் இருக்கின்றன. ஆனால், ஹாரிஸ் ஜெயராஜுக்கும் பின்னணியிசைக்கும் ஏதும் சம்பந்தமில்லை என்பதை இப்படம் மீண்டும் நிரூபிக்கிறது. இரண்டாவது பாதியில் வரும் துரத்தல் காட்சிகளில் வரும் பின்னணி இசையே அதற்குச் சான்று. சூர்யா, காஜல் அகர்வால், சச்சின் கண்டேல்கர், ஒளிப்பதி வாளர் எல்லோருடைய உழைப்பையும் தன் அபத்தமான திரைக்கதையின் மூலம் விை-ரயமாக்கியிருக்கிறார் இயக்குநர் கே.வி. ஆனந்த். படம் துவங்கும் போது மிகச் சிறப்பாகவே துவங்குகிறது. இரட்டைக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாவது வழக்கம் போல ஒரு பாடலின் பின்னணி யில் சொல்லப்படுகிறது. பல சின்னச் சின்ன

வும் கூட சுவாரசியம்தான். ஆனால், இப்படிப்பட்ட சின்ன சின்ன சுவாரசியங்களை தவிர்த்து கதையென்று ஒன்றும் இல்லை. கதையை விடுத்து ஒரு சுவாரசியமான பொழுதுபோக்குப் படமாகவும் இதனை அணுக முடியவில்லை.

1992 பார்சிலோனா ஒலிம்பிக்கில் ரஷ்யாவில் இருந்து பிரிந்த நாடுகள் ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்த நாடுகள் அணியாகப் போட்டியிட்டு மொத்தம் 112 மெடல்களை பெற்று முதலிடம் பெற்றன. இதில் அதிக பதக்கங்களை வாங்கியது உக்ரைன் நாட்டு அணி. இந்தச் சின்ன விடயத்தை மையமாக வைத்து எழுத்தாளர்கள் சுபா எழுதியிருப்பது கட்டுக் கதைதான் என்றாலும் அதனை கொஞ்சம் நம்பும்படியாக கொடுத்திருக்கலாம். அவ்வளவு லாஜிக் ஓட்டைகள். இதய மாற்று அறுவை சிகிச்சை செய்த ஒருவன் அந்த ஓட்டம் ஓடுவது எல்லாம் சிரிப்பாக இருக்கிறது. ரஷ்ய அதிகாரிகளின் காட்சிகள் எல்லாம் மீறல்களின் உச்சம்.

மாற்றான் - தோற்றான்!

# மனோசக்தி

இவர்களிடம் மிளிர்கின்றன. இதனையே மேலைநாடுகளில் Body Language என்று கூறுகின்றனர். நேரடிப் பரீட்சையில் ஒருவரை அளப்பதற்கு அவரது உடல் அமைப்பு தொழிற்பாடுகள் அவதானிக்கப்படுகின்றன. அழுத்தமான சிந்தனை அதிர்வுகள் மூலம் எமது உடல்தொழிற்பாடு நிகழ்கின்றது.

மனோசக்தியில் ஒருவரது வாழ்வு வெற்றி பெறுகின்றது. உண்மையில் எமது வெற்றி என்பது வெளியில் இல்லை. உள்ளே நிகழ்கின்றது. பலவீனமான எண்ணங்கள் எமது வெற்றிக்கு தடைபோடுகின்றன. எண்ணத்தில் தளர்ச்சி ஏற்பட்டால் நாம் வெற்றிபெறமுடியாது. வெறும் உழைப்பு மட்டும் எம்மை வெற்றி பெறவைக்காது. ஆக்கபூர்வமான சிந்தனையுடன் கூடிய உழைப்பே எமக்குத் தேவையாக உள்ளது. ஓர் இலக்கில், நம்பிக்கையில் எண்ணங்கள் தொழிற்பட வேண்டும். இதற்கு முன்னிலையாக கற்பனை உணர்ச்சி அவசியமாகும். உதாரணமாக சிற்பி ஒருவர் கல்லில் வடிக்கும் சிலை பற்றி கற்பனை செய்து கொண்டு சிலையை விடுத்து மற்றவற்றை அகற்றி விடுகின்றார். அவர் செதுக்குவது வேண்டாத பகுதிகளைத்தான். இது போன்றுதான் சிந்தனைகளில் வேண்டாதவற்றினை அகற்றிவிட வேண்டும். எமது வாழ்வில் நாம் பெற்றுக் கொள்ளுகின்ற சக்தி என்பது மனோபலம், மனோசக்தி, மனஆற்றல் என்பவற்றின் கூட்டுறவில் உருவாகின்றது.

இயற்கையில் உள்ள தொடர்பு முறைகள் எவ்வளவு அற்புதமானவை. பறவைகள், விலங்குகள் பருவங்களை முன்கூட்டியே அறிந்து தொழிற்படுகின்றன. மானிடர்களில் கண் அற்றவர்கள் கூட மனக்கண்ணில் பார்த்து வாழ்கின்றனர். இசைக் கலைஞர்கள் வெளி உலகில் சஞ்சரிக்கின்றார்கள். ஓவியர்கள் உலகினை உள்ளத்துள் வரவழைக்கின்ற னர். அனைத்திற்கும் காரணம் எமது உறுதியான எண்ணங்கள் ஆகும். ஞானதிருஷ்டி என்ற சொல்லில் உள்ள அர்த்தம்தான் எவ்வளவு. மனத்தில் ஏற்படுகின்ற ஞான உணர்வு எவ்வளவு அற்புதமானது. சாதாரண மனிதர்களில் இருந்து அசாதாரண மனிதர்களைப் பிரிப்பது இந்த ஞானதிருஷ்டி தான். இது எவ்வாறு ஏற்படுகின்றது என்பதே கேள்வியாகும். உள்மன ஆற்றலில் கட்டப்படும் மனோசக்தி அளவிடற்கரிய ஆற்றல்களை உருவாக்குகின்றது. இந்திய நாட்டில் வாழ்ந்த ஞானிகள் விஞ்ஞானம் வளர்வதற்கு முன்பு துல்லியமாக கணக்கிட்டு இயற்கை விதிகளைக் கூறி உள்ளனர். பிரபஞ்ச அறிவினை தமது மனோசக்தியில் பெற்றிருக்கிறார்கள். பிரபஞ்ச இரகசியங்களை அறிந்துள்ளனர். மனமே கருவியாகி ஞானதிருஷ்டியாகின்றது. இன்றும் மனோசக்தியின் ஆற்றல் ஆன்மீகத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

மேலை நாட்டினர் இன்று தியானத்தினை வாழ்வின் அம்சமாக மாற்றி வருகின்றனர். ஆழ்மன ஆற்றலை வளர்ச்சி பெறச் செய்து மனோசக்தியை கூட்ட முயலுகின்றனர். நம்மிடமுள்ள சக்தி எம்மால் உணரப்படவில்லை. விவேகானந்தர் கூறியது போன்று



மனிதனில் நிறைந்துள்ள பரிபூரணம் கல்வியாகின்றது. ஒளி என்பது வெளியில் இல்லை. உள்ளே இருக்கின்றது. 'மனம் போல வாழ்வு' அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' போன்ற வாக்கியங்களும் மனம் பெற்றுள்ள ஆற்றலைக் காட்டுவன. மன ஆற்றல், மனோசக்தி, மனோபலம் உள்ளவர்கள் வாழ்வு என்றும் ஒளி பெற்றுத் திகழும் என்றே கல்வியாளர்கள் கருதுகின்றனர்.





TUTORING
By Qualified & Experienced Tutors

KEEN TUTORING CENTRE

GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR

- SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
- MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
- DATA MGT, ENGLISH & FRENCH

Call (647) 341 3975 / (647) 869 3974

# அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

# நான்காம் முறை 500 ரூபாய்!

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கின்றேன். சைவ சமயத்துறையில் ஆண்களா? பெண்களா? அதிக நாட்டமுடையவர்கள் என்ற ஒரு பட்டிமன்றம் எங்களூரில் நடைபெற்றது. நான் நடுவர். இரவு எட்டு மணியளவில் நடைபெறும் என்று அறிவித்திருந்தார்கள். ஆண்கள் அணிக்கு ஆண்களும், பெண்கள் அணிக்கு பெண்களுமாக வாதிடுவார்கள் என்ற செய்தி கேட்போர் தொகையை அதிகப்படுத்தியிருந்தது. அன்றைய நிகழ்வில் சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தனிச் சொற்பொழிவும் ஏற்பாடாகியிருந்தது. அவர்கள் தனது பேச்சு முடிந்த பின்பும் மேடையிலே இருந்தார்கள். எங்களூருக்குச் சொற்பொழிவுக்கு வருபவர்கள் அன்றைய தினம் வேறு ஊர்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை. தூரம், தொலைவு, நேரம், காலம் என்பவை காரணங்களாகும். பட்டிமன்றம் தொடங்கி எனது முன்னுரையும் முடிந்தது. திருவுளச் சீட்டுப் போட்டே முதல் அணியைப் பேச அழைப்பது எனது வழக்கம். காரணம் முதல் பேசுபவரே கடைசியாக நிறைவுரை நிகழ்த்த வேண்டும் என்பது பட்டிமன்ற விதிகளில் ஒன்று.

நண்பா!
திருவுளச் சீட்டில் பெண்களின் அணிக்கே முதன்மை உரை என்று வந்தது. பெண்கள் அணித்தலைவியை பேசும்படி அழைத்தேன். இவர் ஒரு வில்லங்கம். குறிப்பிட்ட நேரத்தில் பேச்சை நிறுத்தமாட்டா. நிறுத்தும்படி மணியோசை செய்தாலும் கேட்காதவர் போல் பேசிக் கொண்டிருப்பா. தலைமை தாங்குபவர்களைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தும் ஆரணங்கு. ஒழுங்கு முறைகளுக்கு கட்டுப்படாத காரிகை. பெண்ணியல் சிந்தனைக்கு ஏறினால் சன்னமாடி சபையோரையும் கலையாடை-வக்கும் சாதுரியம் மிக்கவர். இவர் மேடைக்கு வந்தால் மன்னாதி மன்னரும் மடங்கிப்போவார். பேச்சைக்குறுக்கு வழியாலும் கொண்டுபோய் பிரதான வழிக்கு ஏற்றும் கெட்டித்தனம் மிக்கவர்.

'பெண்கள் அணிக்கே திருவுளம் அனுமதித்தால் அன்னை தங்கம்மா என்ற அப்பாக்குட்டியே முதலில் பேசி எங்களை ஆசீர்வாதிக்க வேண்டும்' என்ற கோரிக்கையை பெண்கள் அணித்தலைவி முன்வைத்தார். தர்மசங்கடம் என்ற ஒரு அறச்சங்கம் இருக்கிறதே! அது என்னைச் சங்கடத்துள் தள்ளியது. தர்மம் என்றால் அறம் என்று கருத்து. நான் அன்னையை திரும்பிப் பார்த்தேன். அவர் சிரித்துக் கொண்டிருந்தார். 'இந்த அரங்கு நீதிமன்றம் போன்றது. எடுத்த வழக்குக்கு உரியவர்களே விவாதம் புரிய வேண்டும். மரியாதைக்குரிய அன்னையை சிக்கலில் மாட்டி விடாதீர்கள் என்று கூறி மீண்டும் பெண்கள் அணித் தலைவியை பேசும்படி அழைத்தேன். அன்னையே கைதட்டி இதனை வரவேற்றார். பட்டிமன்றம் தொடங்கியது. விவாதங்கள் சூடாகிச் சூறாவளியாகிச் சுழன்று அடித்தது.

வேடிக்கை என்ன தெரியுமா? வாதிட்ட எல்லோரும் பெரிய புராணத்து மங்கையற்கரசியார், திலகவதியார், காரைக்கால் அம்மையார் என்று தொடங்கி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியில் கொண்டு வந்து முடிச்சுப்போட்டார்கள். இதற்குள் ஒருவினோதமும் நடந்தது. ஆண்கள் அணியினர் அப்பர் பெருமானில் இருந்து இணைத்து அன்னை தங்கம்மாவுடன் முடிச்சுப் போட்டார்கள். விளைவு என்னவென்றால் ஆண்கள் அணியினர் அனைவரும் தம்மை மறந்து தங்கம்மாவை நினைத்து பெண்கள் அணிக்கே ஆதரவாகப் பேசினார்கள்.



நண்பா!
நடுவர் தீர்ப்பை எப்படிச் சொல்வது? நியாயப்படி தீர்ப்புக்கூறுவதானால் இருவேறு கருத்துக்கள் மோதியிருக்க வேண்டும். இது மோதல் இல்லாத ஒரே கருத்தை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் பேசிய அரங்கமாதலால் தங்கம்மா அப்பாக்குட்டி என்றபொருளில் அனைவரும் நன்றாகப் பேசினார்கள். பாராட்டுக்கள் என்று கூறிக்கூட்டத்தை நிறைவு செய்தேன். அன்னை எழுந்து அனைவருக்கும் ஆசிகூறிச் சென்றார். பெண்கள் அணியைச் சேர்ந்தவர்கள் என்னைச் சுற்றி வளைத்தார்கள். அவர்களை ஆண்கள் அணியினர் சுற்றி வளைத்தார்கள். யாதுமாகி நின்றாய் தேவி என்று பரம் பொருளான பராசக்தியை வியந்தான் பாரதி.

'எண்ணிய முடித்தல் வேண்டும். நல்லதே எண்ணல் வேண்டும் திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல்லறிவு வேண்டும். பண்ணிய பாவம் எல்லாம் பரிதிமுன் பனியே போல நசிந்திடல் வேண்டும் அன்னாய்' என்று பாடிச் சொற்பொழிவு செய்தும் கடயவனுக்கும் கடைத்தேற்றம் வேண்டும் என்ற கருணை வழியில் பயணித்து புண்ணிய விடுதிகளையும், புண்ணியச் செயல்களை யும் ஊரூராக ஓடி ஓடி உழைத்தவர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி. அந்தக்காலத்தில் நிலவிய சீதனக் கொடுமையைச் சாடியவர். நான் எழுதிய சீதனக் கொடுமை ஒழிக என்ற நூலைப்பற்றி பேசும் இடங்களில் எல்லாம் சிலாகித்து உரையாற்றியவர்.

நண்பா!
அவர் செல்வி நிலையிலிருந்து அன்னை நிலைக்கு உயர்ந்தவர். நான் நடத்திய ஆலயமணி இதழில் அவரை அட்டைப் படத்தில் அலங்கரித்து 'அன்னை' என்ற பதத்தை முன்மொழிந்தேன். சிவராத்திரி தினங்களில் நான் எட்டு ஒன்பது இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் உரையாற்றி யிருக்கின்றேன். ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு சமகாலப் பிரச்சினைகளை எடுத்து சிவசம்பத்தோடு கலந்து பேசுவது எனது வழக்கம். ஒருவருடம் நடந்த சிவராத்திரி இரவில் சீதனக்கொடுமை பற்றியே பேசினேன். இந்தப் புதுமை முறையை சிரித்திரன் இதழில் அதன் ஆசிரியர் சுந்தரர் 'நிலைக்கண்ணாடி' என்ற ஆசிரியத் தலையங்கப்பகுதியில் விதந்து எழுதியதை நீ மறந்திருக்கமாட்டாய். சுந்தரரை சவாரித் தம்பரை சிரித்திரன் இதழை நாம் மறக்கமுடியுமா? ஓம்! கலகலப்புத்தீசன் 'விளம்பரம்' இதழில் கலக்கிறாரே! நிற்க! அன்னையவர்கள் என்பொருட்டு மிகுந்த அன்பு பாராட்டியவர். கருத்து மேடைகளில் நான் இல்லாத சமயங்களில் என்னைச் சீண்டுபவர்களுக்கு சிரித்தபடி ஊசி ஏற்றுவார். ஆரோக்கியம் தரும் நல்லகிருமிகளை நச்சுக்கிருமிகள் விழுங்கி விடக்கூடாது என்று நோகாது ஊசிபோட்ட உத்தமி அவர்.

மலேசியா சிங்கப்பூர் பகுதிகளில் 1990ஆம் ஆண்டில் நடந்த எனது சமய இலக்கியச் சுற்றுப் பயணத்தின் போது சபையோர் கேட்ட சமயசம்பந்தமான கேள்விகளில் ஒன்று அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி நலமாய் இருக்கிறாரா? அவர் சேவைகளைக் கூறுங்கள் என்பதாகும். பெரியபுராணப் பெண்கள் வரிசையில் மங்கையர்க்குத் தனியரசி, எங்கள் குலதெய்வமகள் அவர். நவீன



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

Accounting & Tax Services
• Book keeping • Preparation of monthly & year - end financial statements • Filing of annual corporate returns • Payroll
• Periodical HST & WSIB returns • Personal tex planning & preparation of returns • CRA audit representation

Guru: 647.400.8730 / Nithi: 416.219.4902
E-mail: accounting.taxservices@hotmail.com

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

மணி பதினொன்று இருக்கும். அப்போதுதான் தனது காரியங்களை ஓரளவுக்கு முடித்து விட்டு மீதியை அடுத்த நாளுக்காய்ப் பிற்போட்டுவிட்டு படுக்கைக்கு ஆயத்தமாக படுக்கையறைக்குள் நுழைந்தவன் திகைத்து விட்டான். படுக்கையில் நீலவேணி சம்மணம் கட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. இனம் தெரியாத சத்தத்தில் அவள் முனகிக் கொண்டு இருந்தது ஏதோபோல இருந்தது அவனுக்கு. கொஞ்சம் அவசரமாக கட்டிலை நெருங்கியவன் நீலவேணியை மெதுவாக தட்டி, 'என்னப்பா! என்ன.. என்ன?'

**◊ கனி ◊**

கண்களைத் திறந்தவள் முதலில் தன் கணவனைத் தள்ளிவிட்டு மலங்க மலங்கப் பார்த்தாள். கொஞ்சம் பின் தள்ளப்பட்ட சிவா, திரும்பிச் சுவரண்டை போய் அறையின் வெளிச்சத்தைப் போட்டான், சுற்றுமுற்றும் பார்த்த நீலவேணி, தான் படுக்கை அறையில் இருப்பதை உணர்ந்து கொண்டாள். சமையலறையும் இல்லை, அந்த அசிங்கமான, பயங்கர உருவங்களு மில்லை. அப்பொழுதுதான் அவள் தெரிந்து கொண்டாள், தான் கண்டது கனவு என்று. ஆனாலும் அவளால் அது கனவுதான் என்று நம்பமுடியவில்லை.

கட்டிலில் இருந்து எழுந்தவள் கணவனண்டை ஓடி வந்தாள். தான் கண்ட கனவினைச் சொன்னாள். சிவா ஒன்றுமே சொல்லவில்லை. ஆதரவாக அவளைத் தடவிக் கொடுத்தவன் 'வெறும் கனவுதானே! நீர் ஒண்டுக்கும் பயப்படாதையும்' எனக் கூறியவன், 'பாதர் சொன்னதை நினைச்சுக் கொண்டு படுத்திருப்பீர், அதுதான் இப்பிடிக் கனவு வந்திருக்குது'. சிவாவிற்கும் அடிமனதிலும் ஏதோ போலத்தான் இருந்தது. ஆனாலும் நிலவேணிக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

'எதுக்கும் ஒருக்கா குசினியையும் பாத்திட்டு வாறேன்'. சிவா சமையலறை நோக்கிக் புறப்பட ஆயத்தமாக, 'நானும் வாறேன்' நீலவேணியும் வந்து ஒட்டிக் கொண்டாள். இருவருமே சமையலறையைப் போய்ப் பார்த்தார்கள். சமையலறை எதுவித வித்தியாசமுமின்றி வழமை போலவே இருந்தது. குளிரூட்டியில் இருந்து தண்ணீர்ப் போத்தல் ஒன்றினை எடுத்த சிவா கொஞ்சம் தண்ணீரைக் குடித்துவிட்டு நீலவேணிக்கும் கொடுத்தான். தயக்கத்துடன் தண்ணீரை வாங்கி, சிறிது நேரம் தண்ணீரைக் கையில் வைத்திருந்தவள், பின்னர் தண்ணீரை அருந்திவிட்டுத் தண்ணீர்ப் போத்தலை சிவாவிடம் கொடுத்தாள்.

'பாத்தீரே! ஒண்டுமில்லை'

'ஆனாலும் ஒருநாளும் இல்லாத மாதிரி இண்டைக்கு, அப்பாடியோ இப்பிடிப் பயங்கரக் கனவு ஒரு நாளும் காணேலை'

'நான் சொன்னனான்தானே! பாதர் சொன்னதை நினைச்சுக் கொண்டு படுத்திருப்பீர். அதுதான் இப்பிடி..' முடிக்க வில்லை சிவா. ஆனாலும் பாதர் சொன்னது அவனுக்கு இப்ப ஏதோ செய்தது. இருவரும் சமையலறையை விட்டு வெளியே வந்தார்கள். வெளியே வரும்போது சமையலறையினுள் மீண்டும் ஒருதடவை சிவா எட்டிப் பார்த்தான். என்னவோ தெரிய வில்லை, பார்க்க வேண்டும் போல் இருந்தது, அவனுக்கு.

மறுநாள்! பாதர் அருள் கூடவே இரண்டு இறைஊழியர்களுடன் சிவாவின் வீட்டுக்கு வந்தார். மூவருமே தூய வெள்ளங்கிகளுடன் வந்திருந்தார்கள். இடுப்பில் கறுப்பு நிறத்திலான பட்டிகளைக் கட்டியிருந்தார்கள். சிறிய சிலுவை, ஒவ்வொருவரது கழுத்திலும் தொங்கிக் கொண்டிருந்தன. மூவரது கைகளிலும் பரிசுத்த வேதாகமம் இருந்தது. பாதர் அருளின் கைகளில் சிறியதாய் ஒரு கறுப்புப் பையும் காணப்பட்டது. மூவரையும் சிவா குடும்பத்தவர்கள் வரவேற்று உபசரித்து முடிந்ததும் பாதர் அருள் நேரடியாகவே விடயத்திற்கு வந்தார்.

'றொபேர்ட் நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேளுங்கோ. பின்னராக எல்லா வற்றையும் பார்ப்போம். பொதுவாகவே புதுவீடு கள் என்றால் பிசாசுகளின் குடியிருப்புத்தான் முதலில் இருக்கும். அதனால்தான் எச்சமயத்த வர்களாக இருந்தாலும் புதியதாய் வீட்டுக்கு புகுமுன் தகுந்த பரிகார நடவடிக்கைகள் எடுப்பது வழக்கம். பொதுவாகவே சாதாரண பிசாசு கள், சாத்தான்களுக்கான பரிகாரங் களையே செய்வார்கள். தொண்ணூறு அல்லது தொண்ணூற்றொன்பது வீதமான வீடுகளுக்கு அது போதும். சில வீடுகள் மாத்திரம் வலிமையான பிசாசுகளின் குடியிருப்பாக அமைந்துவிடும். இப்படியான பிசாசுகள் மிகவும் கொடுமையானவை. சில சமயங்களின் வீட்டில் இருப்பவர்களின் உயிரிற்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியவை. அவற்றினைச் சாதாரணமான பரிகாரங்களினால் துரத்திவிட முடியாது. நல்ல தகுந்த வைராக்கியமான ஜெபத்தினால்தான் அவற்றைத் துரத்தலாம்' தொடர்ந்து கூறினார், பாதர் அருள்.

'நேற்று நான் வீட்டினுள் நுழையும்போதே தெரிந்து கொண்டேன், வீட்டினுள் சில அமானுடங்கள் இருப்பதை. அவற்றின் தொல்லையினால்தான் உங்களுக்கு இந்தத் தீராத தலைவலி போன்ற உபாதைகள். ஒருவேளை திருவிற்குக்கூட இது மாதிரியான தொல்லைகள் இருக்கலாம். ஆனாலும் அவர் வீட்டில் இல்லாது தொலை தூரத்தில் இருப்பதால் அவ்வளவு பெரியதாக அவரைத் தொந்தரவு செய்யாதுகள்' என்றார் பாதர் அருள். இவ்வேளையில் நீலவேணி குறுக்கிட்டு இரவு தனக்கு நேர்ந்த அனுபவத்தினைக் கூறினாள்.

கவனமாகக் கேட்டனர் மூவரும்.

இன்னமும் வரும்.


ஏழுமின்னல் கூடி மின்னுதே

காலம் இலக்கிய நிகழ்வு

பேச்சு | பாட்டு | நடனம் | கூத்து

காலம் சஞ்சிகையின் 40வது இதழ் வெளியீடு




அ.முத்துலிங்கம், என்.கே. மாகலிங்கம், செல்வா கனகநாயகம்
சேரன், வெங்கட்ரமணன், சந்திரகாந்தன்

ஆனந்தப்பிரசாத்,
மாலினி பரராஜசிங்கம்

விஜயமனோகரன்

அண்ணாவியார் இசைத்தென்றல் ம.யேசுதாசன்

-digi Media Creations-



வாழும்தமிழ்
புதிய புத்தகங்கள்
குறைந்த
விலையில்

St. Maria Goretti Catholic School
21 Kenmark Boulevard
(Kennedy Road & Eglinton Avenue East)
kalam@tamilbook.com
416-731-1752

DEC
01
மாலை 5:30

# ஒரு மனிதனைக் கண்டேன்!

எனது இரண்டு மருமகன்மார் கொழும்பில் வாழ்கின்றனர். மூத்தவன் அருள். அடுத்தவன் பிரணவன். இருவருமே இங்கிலாந்து குடிமக்கள். ஆனால் பிடிவாதமாக இலங்கையில் தான் வசிப்போம் என வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நல்ல பதவிகள். ஏன் இத்தனை நாட்டுப் பாசமோ தெரியவில்லை? இளையவன் பிரணவன் தான் சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்தில் குழந்தைகளுக்கான புற்றுநோய் மையம் ஆரம்பிப்பதற்காகக் ஹம்பாந்தோட்டையில் இருந்து பருத்தித் துறை வரை நடைபயணம் மேற்கொண்டு நிதி திரட்டியவன். அவன் பம்பலப்பிட்டி வாசி. 'மாமா, நீங்கள் கட்டாயம் அவரைக் காணவேண்டும்' என்றான் மருமகன் அருள். அவன் வாசம் செய்யும் விசாலமான வீடு கறுவாக்காடு என்று தொன்று தொட்டுப் பிரமாதமாகப் பேசப்பட்ட கொழும்பு நகரின் உயர்குடிமக்கள் வாழும் பகுதி. ஆகவே யாரோ பிரபலம் பற்றித்தான் அவன் குறிப்பிடுகிறான் என்றே எண்ணினேன். நான் என்ன சின்ன மனிதனா? கொஞ்சம் என் மிடுக்கையும் புலப்படுத்தும் நோக்கிலே உன் விருப்பம் அதுதான் என்றால் கண்டு விட்டால் போச்சு என்றேன். அப்போது நேரம் 11:00 மணியாகிவிட்டது. 'மாமா இன்று நேரம் போய் விட்டது. நாளை காலையில் வந்தால் அவரைப் பார்க்கலாம்' என்றான். அப்படி என்றால் ஆள் கொஞ்சம் உயர்சாதி தான் என எண்ணினேன். நான் தங்கியிருப்பது பம்பலப்பிட்டியில் உள்ள மற்றைய மருமகன் பிரணவன் இல்லத்தில். அது என்ன அப்படி நேரத்தில் கறார். எனக்கு ரொறன்ரோவில் எத்தனை கிராக்கி தெரியுமா என்றேன். 'ஓம் அண்ணா அப்பாவின் தலைக்கு ரொம்பக் கிராக்கி, உள்ளே உள்ளதற்கு அல்ல, வெளியே காணப்படுவது மற்றையோர் பலரின் பொறாமைக்கு ஆளாகியுள்ளது' என்றாள் மகள். மனதிலே ஒரு பரபரப்பு. யார் அந்த மகானுபாவன். மருமகனைக் கேட்க என் தற்பெருமை இடம் கொடுக்கவில்லை. பார்க்கலாம் அந்தக் கொம்பனை என எண்ணினேன்.



மறுநாட் காலை அந்தச் சந்தர்ப்பமும் வந்தது. மருமகன் காலையிலேயே வந்து விட்டான். வாருங்கள் மாமா வீட்டிற்குப் போகலாம் என்றான். எனது பிள்ளைகளுடன் அவன் மனைவியுமாகக் காரில் ஏறிச் சென்றோம். பிரதான வீதியிலிருந்து பிரிந்து அவன் வசிக்கும் கிளை வீதியில் கார் புகுந்தது. சிறிது தூரம் சென்றதும் 'மாமா அதோ போகிறாரே ஒருவர் அவரைப் பற்றியே தான் நான் கூறினேன் என்றான் அருள். எனக்கோ படு ஏமாற்றம். இவரைப் பார்ப்பதற்கா இத்தனை ஆர்வம் காட்டினேன். நோஞ்சலான ஒரு உருவம். தலையில் வெள்ளை நிறத்தில் தடித்த ஒரு துணித் தொப்பி. அரைக்கால் சட்டை. கோடு போட்ட நீண்ட சேர்ட். காற்சட்டையை மறைத்த படியால் காற்சட்டை போட்டிருப்பதே தெரிய வில்லை. கொஞ்சம் எட்டிப் பார்க்கச் செய்தது. இரண்டு கைகளிலும் நீலநிறமான கையுறைகள். காலுறைகள் அற்ற கால்களை விளையாட்டு வீரரின் சப்பாத்து அணி செய்ய ஒரு சராசரி மனிதரைக் கண்டேன். இரண்டு கைகளிலும் பிளாஸ்ரிக் பை ஒன்றினைத் தூக்கியபடி நடந்து சென்றார். ஏமாற்றம் நிறைந்த என் முகத்தினைக் கண்ட அருள், 'மாமா அவர் செய்வதைப் பாருங்கள்' என்றான். அசிரத்தையாகப் பார்த்தேன். பரவசப்பட்டேன்.

இரண்டு பைகளையும் கீழே வைத்தவர் அவற்றில் இருந்து சிறு கோப்பைகள் இரண்டினை எடுத்து வைத்து அவற்றுள் ஒரு பையில் இருந்து சோற்றினையும் மறு பையிலிருந்து அவித்த மீன் ஒன்றினையும் போட்டு நிலத்தில் வைத்தார். சில நாய்களும் பூனைகளும் அயலில் இருந்து அங்கு வந்தன. அவர் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த நாய்களில் ஒன்றும் பூனைகளில் ஒன்றும் மெதுவாக வந்து அத்தட்டிலே உள்ள உணவினை உட்கொண்டன. ஏனையவை அருகே நின்றன. இச்சைப் பட்டு முண்டி அடித்து ஓடி, உணவினை உட்கொள்ள முயலவில்லை. ஆச்சரியமாக இருந்தது. காரினை விட்டு இறங்கி அவரை அண்மித்தேன். சுருங்கிய முகத்தில் இரண்டு மூன்று நாட்களாகச் சவரம் செய்யாத அடர்த்தியாக நரைத்த உரோமங்கள். தட்டிலே பிள்ளைகளுக்கு உணவினை வழங்கி அவர்கள் நிறைவாக உண்பதைக் கண்ட தாய் ஒருத்தியின் முகத்தில் பிரதிபலிக்கும் மந்தகாசத்தை அவர் முகத்திலும் கண்டேன். அவர் நான் வந்ததைக் கவனித்ததாகத் தெரியவில்லை. தட்டு ஒன்றிற்கு அருகே வந்த நாய் ஒன்றினைப் பார்த்து 'உனது முறை வரும் மட்டும் பொறுமையாக இரு' என ஆங்கிலத்தில் சொன்னார். அது விலகி நின்றது. எல்லா நாய்களும் தெரு நாய்களாக இருந்த போதிலும் வாளிப்பான உடற்கட்டுடையவை யாகக் காட்சி தந்தமை அவைக்கு சீராக உணவு கிடைத்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டின.

பேச்சுக் கொடுத்தேன். மிகச் சரளமாக ஆங்கிலம் பேசினார். உடற் சுகாதாரத்திலும் அதிக கவனம் செலுத்தியிருப்பது அவர் சாமானிர் அல்லர் எனக் காண்பித்தது. கல்வி அறிவு உடையவரென்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர் பெயர் வீரசேகரா. அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். தனிக்கட்டை. சில வருடங்களுக்கு முன் காலி நகரத்தில் வாழ்ந்து வந்தவர். அங்கு வாழப் பிடிக்காமையால் கொழும்பு நகரத்தில் கடந்த ஐந்து வருடங்களாக வாழ்ந்து வருகிறார். 'இங்கேயும் தொடர்ந்து நான் வாழ்வதற்கு விட்டு வைப்பார்களோ தெரிய வில்லை' என்றார். முகத்தில் விரக்தி எட்டிப் பார்த்தது. காலி நகரை விட்டு ஏன் இங்கு வந்தார் என்பதை அவரது கூற்றிலிந்து அனுமாத்துக் கொள்ள முடிந்தது. அவர் என்றுமே சமூகத்தோடு ஒட்டி உறவாடும் போக்கு இல்லாதவர்.

'ஐயா எத்தனை வருடமாக இதைச் செய்து வருகிறீர்கள்' என்றேன். 'நான் காலியில் அரச சேவையில் இருந்த பொழுது போதிய அவகாசம் கிடைக்கவில்லை. கிடைத்த பொழுது செய்தேன். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும் தினசரி செய்யத் தொடங்கி விட்டேன். கொழும்பு வந்து வசிக்கின்ற கடந்த ஐந்து வருடங்களாகச் செய்து வருகிறேன்' என்றார். 'உங்களுக்கு இவ்விதம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றிற்று' என நான் கேட்டதுமே சிறிது ஆவேசத்துடன் பேசத் தொடங்கி விட்டார். 'உங்களது சமயம் தானே கர்மா பற்றி நிறையவே சொல்கிறது. பிறப்பு எல்லோருக்கும் ஒன்று. நான் மனிதனாகப் பிறந்ததும் அது நாயாகப் பிறந்ததும் ஊழ்வினையே அன்றி வேறொன்றுமில்லை. அது எனது சகோதர சீவன். அதனைக் காப்பது என் கடன்' என்றார். 'இவர்கள் எல்லாம் மனித ஜடங்கள். செல்லப் பிராணிகள் என நாயையும் பூனையையும் வீட்டிலே அருமை அருமையாக வளர்ப்பார்கள். கொஞ்சுவார்கள் கட்டிப் புரள்வார்கள். படுக்கையைக் கூடப்பங்கு போடுவார்கள். ஆனால் எது வரைக்கும். கொஞ்சம் பாரதூரமாக நோய் ஏற்பட்டால் கொண்டு வந்து வீசி விடுகிறார்கள். அப்போ அவர்கள் அன்பு எங்கே போய்விட்டது. வெறும் வேசதாரிகள். அப்படி எறியப்பட்ட எத்தனையே ஜீவன்களை நானே எடுத்துச் சென்று என் செலவில் வைத்தியம் செய்து மீண்டும் அவர்களிடம் சேர்ப்பித்துள்ளேன். ஆனால் அவர்களுக்கு அது பிடிக்கவில்லை. நான் செய்வது ஏற்காத செயல் என அவர்கள் என்னைக் குரோதத்துடன் பார்க்கிறார்கள். நான் அஞ்சமாட்டேன்.



செய்வதைத் தொடர்ந்து செய்வேன். 'உங்களுக்கு விருப்பமில்லை என்றால் வழக்காடு மன்றம் போங்கள் அங்கே பார்த்துக் கொள்ளலாம், எனச் சவால் விட்டுள்ளேன்' என்றார். அவர் இங்கேயும் நீண்ட காலம் தங்காமல் ஜாகை மாற்ற வேண்டி வருமெனத் தோன்றிற்று. அவரது கருணைக்குப் பாத்திரமானவை பொதுவாக வீட்டிலே வளர்க்கப்படுகின்ற ஆனால் செல்லப் பிராணிகளாகக் கணிக்கப்படாத இரண்டும் கெட்டான் ஜீவன்களே. அவைகளுக்கு ஒதுங்குவதற்கு வீடுகளிலே இடமுண்டு. வீட்டார் உண்ட மிகுதி இருந்தால் அவை உண்பதற்கு உணவுண்டு. வீட்டிற்குக் காவல் என்ற தொழிலுண்டு. ஆகவே வீரசேகரா நாய்களுடன் பழுகுவதை ஊரவர்கள் பெரிதாக வரவேற்பதில்லை என்பது வெளிப்படை. வீரசேகரா இன்னும் ஒருபடி மேலே சென்று அயலவர்களின் வெறுப்பினையும் சம்பாரிக்கிறார். பெண் பூனைகளை கொண்டு சென்று கருத்தடை செய்து விட்டு விடுகிறார். அவர் யார் இதைச் செய்ய என்பது பூனைகளில் உடமையாளர் வாதம். நான் இதைச் செய்யாவிட்டால் இந்தத் தெருவே பூனகளால் நிரம்பி விடுமே என்பது பராமரிப்பவர் வாதம். பிரச்சினை வழக்காடு மன்றம் வரை செல்லாது என்பது எனது அபிப்பிராயம். ஆனால் வீரசேகரா விரைவிலே வேறோர் இடவாசியாகுவார் என்பது உறுதி.

அந்த இடத்தில் வந்து உண்ட நாய்கள் பூனைகள் எல்லாம் பசியாறி விட்டன. உண்ட களை தொண்டருக்கும் உண்டல்லவா. பூனைகள் அவ்விடத்தை விட்டு விலக, நாய்கள் தெருவோரத்தில் கால்களை எறிந்த படி ஓய்வெடுக்கத் தொடங்கின. வீரசேகரா தனது உடமைகளுடன் தனது அடுத்த தரிப்பிடம் செல்வதற்காக ஆயத்தம் செய்தார். நாமும் அவரிடம் விடைபெற்று காரில் ஏறி உட்கார்ந்தோம். 'எப்படி மாமா இந்த மனுசன்' என்றான் அருள். 'ஒரு மனிதனைக் கண்டேன்' என்றேன். மனத்தில் ஏதேதோ தோன்றின.

**-அதிபர் கனகசபாபதி-**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# மூத்தோர் வார்த்தை கேள்!



நரி ஒன்று காட்டில் அலைந்து திரிந்து கொண்டு இருந்தது. இரவு நேரமும் வந்து விட்டது. ஆனால் அந்த நரி இன்னும் அன்றைய உணவு ஒன்றும் உண்ண வில்லை. அது கிராமத்திற்கு போய் ஏதாவது ஒரு ஆடோ, கோழிகளோ சாப்பிடலாம் என்ற எண்ணத்தோடு கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கியது. அது எப்போது இருளும் என யோசித்தபடி மேகத்தை பார்த்து நடந்து கொண்டிருந்தது. அப்போது அது ஒரு கிணற்றில் திடீரென்று தவறி விழுந்து விட்டது. இதே நேரம் ஆடு ஒன்று, தன் வீட்டிலிருந்து தப்பிச் சென்று கொண்டிருந்தது. மறுநாள் அது தன் எஜமானின் உணவு ஆகிவிடும் என்று உணர்ந்து, வீட்டை விட்டு ஓடிக் கொண்டிருந்தது. ஆடு வேகமாக சென்று கொண்டிருந்தது. அருகில் ஒரு கிணற்றில் ஏதோ சத்தம் அதற்கு கேட்டது. அந்த கிணற்றில் எட்டிப்பார்த்த போது அங்கு ஒரு நரி இருப்பதைக் கண்டது. 'விழுந்து விட்டீர்களா?' எனக் கேட்டது.

நரி எங்கிருந்து குரல் வருகின்றது என்று நினைத்து, மேல் நோக்கி, 'இல்லை, சும்மா தண்ணீர் எப்படி இருக்கிறது என பார்க்க வந்தேன்', என கோபத்துடன் கூறியது. நரியின் குரலில் இருந்த கோபம் ஆட்டிற்கு தெரிந்தது. அது, 'சரி, நீங்கள் குடியுங்கோ, நான் செல்கிறேன்', எனக்கூறி திரும்பத் தொடங்கியது. நரியும் ஏக்கத்துடன், 'நான் அதை சும்மாதான் சொன்னேன்! எனக்கு உதவி வேண்டும்!' என்றது. 'உதவியா? நானா? நான் ஏமாறமாட்டேன்? உங்கள் பாட்டன் போல் நீங்கள் கிணற்றில் விழலாம். ஆனால் என் பாட்டியை போல் நான் உங்களுக்கு உதவி செய்து விட்டு ஏமாந்து கிணற்றிலிருந்து சாக மாட்டேன்! எனக்கு உந்தப் பிரச்சினை வேண்டாம்!' எனக்கூறி ஆடு கிளம்பியது.

'எனக்கு உதவினால் நான் உதவுவேன்!' என்றது நரி. பின்பு 'பரிசளிப்பேன்' என்றும் கூறியது. 'பரிசா? நீங்களா?. இல்லை, எனக்கு உங்களது பரிசு வேண்டாம்', என்றது ஆடு. நரி மீண்டும் உதவி கேட்டது. 'காலையில் எனது பழைய எஜமான் இக்கிணற்றில் தண்ணீர் எடுக்க வருவான். அவர் வாளி உள்ளே விடும்போது அதில் நீங்கள் ஏறி வரலாம்,' என்றது ஆடு.

'காலை வரையும் இருப்பதா?' என நரி கவலைப்பட்டது. 'அதை குதித்தபோது நினைத்திருக்க வேண்டும்,' என்றது ஆடு. 'நான் வேண்டும் என்று, குதித்தேனா?' என்றது நரி. 'அப்படியானால் இது ஒரு பாடமாக இருக்கட்டும். மற்றவர்களை ஏமாற்ற நினைக்கவும் வேண்டாம், கவனமாக கீழே பார்த்து நடக்கவும். உங்கள் பாட்டன் கதையையாவது கேட்டிருக்கலாம்' என்றது ஆடு. நரியும் மறுநாள் காலை ஆடு கூறியபடியே தப்பிச் சென்றது.

**நீதி: தீயோரை கண்டால் தூரவிலகு.**



**ஞா. ஆரணி**
**அகவை 14**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றத்தின் தீபாவளிக் கொண்டாட்டம்

2012 கார்த்திகை 10ஆம் திகதி சனிக்கிழமை மேற்படி நிகழ்ச்சி வழமைபோல் இவ்வருடமும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கௌரவ Michael Chan MPP அவர்களும் மற்றும் விசேட விருந்தினராக ஒன்ராரியோ மாகாணசபை உறுப்பினர் கௌரவ Bas Balkissoon, MPP அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். நிகழ்ச்சிகள் தொடங்க ஆயத்தமானபோது பிரதம விருந்தினர் தான் சற்றுத் தாமதமாக வருவதாக அனுப்பிய செய்தியையடுத்து அவரின் இடத்தில் Bas Balkissoon, MPP அவர்கள் தலைமையேற்றார்.

ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கேற்றல் அதனையடுத்து கனேடிய தேசிய கீதம், தமிழ்த்தாய் வணக்கம், மன்றக் கீதம் இறுதியாக இருநிமிட மௌன அஞ்சலி ஆகிய நிகழ்வுகள் முறையாக நடைபெற்றன. இதைத் தொடர்ந்து எமது மன்றத்தலைவர் திரு. மாயா கந்தையா அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்ட பின் கௌரவ Bas Balkissoon, MPP அவர்கள் உரையாற்றினார். இவரைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் அறிஞர் சாமி அப்பாத்துரையின் உரை நிகழ்ந்தது. அவர் தனது உரையின் போது தீபாவளியின் மகத்துவத்தை மிக ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இதைத் தொடர்ந்து Bas Balkissoon, MPP அவர்களை சங்கத்தின் தலைவர் அறிமுகம் செய்தபின்பு அவரின் உரை இடம் பெற்றது.

இதையடுத்து யாவரும் எதிர்பார்த்திருந்த 'வர்ணஜாலம்' என்னும் திரையிசை நடனம் மன்றத்தின் மகளிர் உறுப்பினர்களால் கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தாக அமைந்திருந்தது. மன்ற உறுப்பினர்கள் நடன ஆசிரியை திருமதி. சாஜி புவனேஸ்வரனின் உதவியுடன் ஒருமாத காலத்திற்கும் மேலாக பயின்றதன் பயனாக நடத்தியது மிகவும் பாராட்டிற்குரியது. இந்த நடன அமைப்புக்கான பாடல்களை அழகாக தொகுத்து உதவியவர் பிரஜித் சாந்தகுமார் என்பதும் குறிப்பிடத்தக்கது. வர்ணஜாலம் நிகழ்ச்சி முடிவுற்றதும் தலைவர் திரு. மாயா கந்தையா அவரது பாரியார் சகிதம் மேடையில் அனைத்து நடன தாரகைகளை அறிமுகப்படுத்தியதும் நடன ஆசிரியைக்கு அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

இதையடுத்து இசையமுதம் என்றபாடல் நிகழ்ச்சி திரு. கருணாகரன், திரு. ருக்மணி காந்தன் ஆகிய இருவரும் இணைந்து நடத்தினார்கள். இதையடுத்து மிகக் குறுகிய நேரத்தில் இசையும் கதையும் என்னும் நிகழ்ச்சியை எமது மன்ற உறுப்பினர் திரு. ஆலாலசுந்தரம் வழங்கினார்.

அடுத்து 'இதுவல்லவோ தீபாவளி' என்னும் சமூக நாடகம் எமது மன்ற உறுப்பினர் திருமதி. முத்துலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் சிறப்பாக நடந்தேறியது. இறுதியாக பல அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, 'வர்ணஜாலம்' என்ற நடன நிகழ்ச்சி மறுபடியும் நடத்தப்பட்டது. இறுதியாக எமது மன்றச் செயலாளர் திரு.சிவநேசன் சின்னையா அவர்களின் நன்றியுரை இடம் பெற்ற பின் இரவு உணவுடன் நிகழ்ச்சிகள் யாவும் முடிவுற்றது.







R.L. சேவியர்
கலாச்சாரக் குழுத் தலைவர்.

# நண்பன்

## சிறுகதை

தொலைபேசி மணி கேட்டு திடுக்கிட்டு ஹலோ… சொன்ன சின்னவனின் காதுகளில் கேட்ட செய்தி சில நிமிடங்கள் அவனை செயலிழக்க செய்தது. மறுமுனையில் அழைத்த நண்பன் சுரேசின் குரலில் கேட்ட செய்தியிலிருந்து அவனால் சில நிமிடங்கள் சுய நினைவுக்கு வர முடியவில்லை. மீண்டும் சுரேஸ் உரத்த குரலில் சின்னவன், சின்னவன் என அழைத்த சத்தம் கேட்டு சுய நினைவுக்கு வந்தவன் தன்னை சுதாகரித்துக்கொண்டு என்ன நடந்தது என கேட்டான். சுரேஸ் நடந்ததை சொன்னதும் கவலையினுடாக…நண்பன் ரவியை நினைத்து பெருமைப்பட்டுக்கொண்டான். ரவியின் இந்த மரண செய்தி அவன் குடும்பத்தை மட்டுமல்ல ஊரையே உலுக்கியிருக்குமே என்றான். அதற்கு சுரேஸ் ஊரே மரணித்து விட்டது என்றான்.

சில நிமிட மௌனத்தின் பின் சின்னவன், சுரேஸ்…டே சுரேஸ்… நான் காசு அனுப்புகின்றேன் ரவியின் செலவீனங்களுக்கு என்றவன், பிறகு உனக்கு போன் செய்கின்றேன் எனக்கூறி தொடர்பினை துண்டித்தான். தன் நண்பனின் இழப்பை தாங்கமுடியாது, பெருங்குரல் எடுத்து ஓ…. வென கதறி அழுதான். சின்னவனின் அழுகை சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்ட கமல் என்னடா…. இந்த சாமத்தில் அழுகின்றாய் என்ன நடந்ததென கேட்டான். கமல் நான் சொல்லுவேனே என் நண்பன் ரவி இயக்கத்தில் இருக்கின்றான் என்று, அவன் இன்று முகமாலை அடிபாட்டில் வீரச்சாவு அடைந்துவிட்டான் என்று இப்பதான் சுரேஸ் போன் பண்ணி சொன்னவன். சில வினாடிகள் கமலால் பேச முடியவில்லை. சற்று அமைதியின் பின் கமல், நாம் என்ன செய்ய முடியும், இப்படி இன்னும் எத்தனை செய்திகள் வரப்போகின்றனவோ தெரியாது? நாம் என்ன குற்றம் செய்தோமோ? தமிழராகப் பிறந்ததா குற்றம்? ஏன் இப்படியெல்லாம் நமக்கு மட்டும் நடக்கின்றது? இவற்றுக்கெல்லாம் ஒரு நாள் விடிவு வரும் என்று சின்னவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு, உனது நிலமையினை வேலைத்தளத்தில் நான் கூறுகின்றேன் என்றவன், உனக்கு ஏதும் தேவையென்றால் கேள் என்று சொல்லி மீண்டும் படுக்கச் சென்றுவிட்டான்.

கமலும், சின்னவனும் இருபது ஆண்டுகளுக்கு முதல் சந்தித்து, இன்றுவரை நல்ல நண்பர்களாக ஒரே தொடர்மாடி வீட்டில் வாழ்கின்றனர். கமலுக்கு, சின்னவனும் சின்னவனுக்கு, கமலும் தான் ஆறுதல். சின்னவனால் படுக்க முடியவில்லை, எப்படி…எப்படி… முடியும். முதலில் தன் வெளிநாட்டு வாழ்க்கையின் மேல் நொந்து கொண்டான். இந்த வாழ்க்கையையே வெறுத்தான். நாட்டு நிலமை தெரிந்தும் அவன் நண்பனின் இழப்பு அவனை இப்படி நினைக்க வைத்ததில் ஆச்சரியமில்லை தான். ஒரு அனாதையாக தான் இருப்பதாக நினைத்து நண்பன் ரவியின் இழப்பை நினைத்து கதறியவனின் மன ஓட்டம், ஈழம் நோக்கி விரிந்தது…. நான், சுரேஸ், ரவி மூவரும் சின்ன வயதிலிருந்தே நண்பர்கள். ஒன்றாக படித்து, விளையாடி, பல விதமான கருத்துக்களை விவாதித்து, சண்டைபிடித்து இப்படியாக பல பரிமாணங்களில் எங்கள் வாழ்க்கை, நல்ல நண்பர்களாக… எல்லாத் துறைகள் சார்ந்தும் விவாதிப்போம். அப்படி விவாதிக்கின்ற போதிலெல்லாம், ரவியின் கருத்தில் மார்க்கிச சிந்தனையினை காண முடியும். மக்கள் நலன் சார்ந்தே சிந்திப்பான். சிங்கள அரசின் ஏகாதிபத்தியத்திலிருந்து எம் மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்று சொல்லுவான். எம் மக்களுக்கான சரியான அரசியல் தலைமை இல்லையென்பது ரவியின் ஆதங்கமாகும்.

1983ம் ஆண்டு இயக்கங்களால் சிங்கள இராணுவத்திற்கு எதிரான ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த நாள் முதல்… ரவி, இயக்கங்கள் பற்றிய விபரங்களை அறிய ஆரம்பித்தான் என்பதனை அவனது உரையாடல்களில் அறிய முடிந்தது. ஆனால் இவன் போராட்ட அமைப்பில் இணைவானென்பதனை நானும், சுரேசும் எதிர்பாரக்கவேயில்லை. அவனின் குடும்பம், வயதான அப்பாவின் வருமானத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. இவனின் படிப்பு முடிந்ததும் தந்தையின் பொறுப்புக்களை ஏற்பான் என்ற நம்பிக்கையில் ரவியின் குடும்பம் இருந்தது.

சுயநினைவிற்கு வந்தவன் நடந்தது நடந்து விட்டது. ரவி தன் இலட்சியத்தில் வென்றுள்ளான். ரவி நீ வாழ்க என மனசிற்குள் வாழ்த்தியபோதும் தன் நண்பன் தன்னோடு இல்லையே என்ற அந்த பிரிவு சின்னவனின் மனதில் வலியை ஏற்படுத்தியது. சின்னவனால் ஒரு வேலையும் செய்ய முடியாமல் இருந்தது, தாங்கள் மூன்று பேரும் எடுத்த புகைப்படத்தினை எடுத்து ரவியை பார்த்துக்கொண்டிருந்தவனின் எண்ண அலைகள் பின் நோக்கி விரிந்தது…….

எமது ஊர் ஒரு கத்தோலிக்க ஊர். கடலும், கடல் சார்ந்த நிலமுமாகையால் நெய்தல் நிலம் என்றும் எம் முன்னோரின் காலத்தில் வணிகம் செய்வோரின் கப்பல்கள் வந்து போகும் துறைமுகமாக இருந்ததால் நாவாய் துறைமுகம் என்றும் அழைக்கப்பட்ட எம் ஊர் பிற்காலத்தில் நாவாந்துறையாக மாறியது. எம் மக்கள் ஒற்றுமையாகவும் ஒரே குடும்பம் போன்றும் வாழ்ந்து வந்தார்கள். மாதாவின் மேல் மிகுந்த நம்பிக்கையும், பக்தியும் கொண்டிருந்தார்கள். யாழ். நகரிலே சிறந்த உதைபந்தாட்ட கழகத்தில் ஒன்றாக எமது சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் விளங்கியது.

பாடசாலை நாட்களிலிருந்து எமக்கு உதைபந்தாட்டத்தின் மீது பிரியம் அதிகம். இதனால் பாடசாலை கழகத்தில் விளையாடியதன் பின் சென் மேரிஸ் வி.கழகத்தில் நாங்கள் மூன்று பேரும் விளையாடி வந்தோம். எம்மை விடவும் ரவி சிறந்த வீரன் தான். எப்போது உதைபந்தாட்ட போட்டியில் இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகின்றதோ, அந்த நிலமையை மாற்றி எமது கழகத்தினை வெற்றிக்கு கொண்டு செல்லும் திறமை ரவியிடம் உண்டு என்பதனை பாடசாலை நாட்களிலிருந்து நிரூபித்துள்ளான். அதையும் விட சிறந்த ஓட்ட வீரனும் கூட. 1500 மீற்றர், மரதன் ஓட்டப்போட்டிகளில் பல வெற்றிகளை பெற்றவன். இருந்தும் குடும்ப சூழல் காரணமாக அவனால் தொடர்ந்து படிக்க முடியாமல் போனது அவனுக்கு சரியான கவலை. எமது மாதாவின் திருநாள் ஒவ்வொரு வருடமும் ஆவணி 15ம் திகதியில் நடைபெறும். ஆவணி 6ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருநாள் 15ம் திகதி வரை ஊரே களை கட்டி விழாக்கோலம் பூண்டிருக்கும். வெளி ஊர்களில் வாழுகின்ற எமது சொந்தங்கள் எல்லோரும் விடுமுறை எடுத்துக்கொண்டு ஊருக்கு வந்து அன்னையின் திருநாளை கொண்டாடி மகிழ்வார்கள். 1985ம் ஆண்டு எமது மாதாவின் திருநாளை முன்னிட்டு அண்ணாவியார் ஆசீர்வாதம் அவர்களின் நெறியாழ்கையில் 'அலசு' என்ற நாட்டுக்கூத்து கடந்த ஆறு மாதங்களாக பழகிக்கொண்டிருக்கின்றார்கள். அண்ணாவியார் ஆசீர்வாதம் அவர்களின் நெறியாழ்கையில் கூத்தென்றாலே எம் மக்களுக்கு மட்டுமல்லாமல் அயல் ஊர் மக்களுக்கும் பலத்த எதிர்பார்ப்பு இருக்கும் காரணம் அவர் அந்தளவு கச்சிதமாக நடிகர்களை பாடல், ராகம் போன்றவற்றில் பயிற்சி கொடுப்பது மட்டுமல்லாமல் முழுமையாக எல்லா விடயத்திலும் கவனம் செலுத்துவார்.

85ம் ஆண்டு ஆவணி 15ம் திகதி மாதாவின் திருநாள் திருப்பலி மிகவும் சிறப்பாக ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்று ஊரே மகிழ்ச்சியில். பகல் முழுவதும் விளையாட்டுப்போட்டிகள், குறிப்பாக கடல் தொழில் சார்ந்த சமூகமாகையால் கடலிலும் வள்ளம் தாங்குதல், நீச்சல் என பல போட்டிகள் நடைபெற்றன. இம்முறை ரவி நீச்சல் போட்டியில் கலந்துகொண்டு முதலிடம் பெற்றான். இதனால் மரதன் ஓட்டப்போட்டியில் ரவியால் பங்குகொள்ள முடியாமல் போனது. நாட்டுக்கூத்துக்கான மேடை ஆயத்தங்கள் எல்லாம் தயாராகி, முழு ஊரே இரவு கூத்தில் கலந்துகொள்வதனால் ஊர் பெரியவர்களால் ஊரை கண்காணிக்கும் பொறுப்புகள் யாவும் இளைஞர்களிடம் வீதி, வீதியாக பிரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த பொறுப்பில் நான், சுரேஸ், ரவி மூன்று பேரும் மூன்றாம் குறுக்கு வீதிக்கு பொறுப்பாக நின்றோம். ஒலிபெருக்கியில் எங்களால் கூத்தின் பாடல்களை கேட்டு ரசிக்கமுடிந்தது. நடு இரவில் ரவி வீட்டுக்கு போயிட்டு வாறதாக சொல்லி சென்றான். போனவன் கூத்து முடியிற நேரமாகியும் திரும்பி வரவில்லை. கூத்து முடிந்ததும் நானும், சுரேசும் கூத்து நடந்த இடத்துக்கு நடந்தோம். போகும் வழியில் கூத்து பார்த்துவிட்டு வந்த வெளியிடத்து ஆட்களின் உரையாடலில் அண்ணாவியர் ஆசீர்வாதம் அவர்களின் திறமையையும், குறிப்பாக அலசாக நடித்த பாக்கியத்தைப்பற்றியும், அண்ணாவியாரால் பெமியான் மன்னனாக அறிமுகப்படுத்தப்பட்ட பெலிக்கானைப் பற்றியும் சிறப்பாக கதைத்ததோடு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தமாக சிறந்த கூத்து பார்த்தோம் என்ற மகிழ்ச்சியோடு கதைத்துக்கொண்டு போனது எமக்கு பெருமையாக இருந்தது. சுரேஸ்.. டே சின்னவன் பார்த்தியா ரவி போய் படுத்திட்டான். நாங்களும் வீட்டுக்கு போவோம் என்று கூறி சென்றான். இரவு முழுவதும் கூத்துப்பார்த்த களைப்பில் எமது ஊரே உறக்கத்தில் அமைதியாகியது.

பின்னேரம் 5மணியளவில் என் வீட்டுக்கு வந்த சுரேஸ், டே சின்னவன், ரவியை காணவில்லையெண்டு அவங்கட வீட்டில தேடுறாங்கடா. நம்மள தேடிட்டிருக்கிறாங்க என்று சொல்லுவதற்குள் ரவியின் அம்மா எங்கட வீட்டிற்கு வந்து…. சின்னவன், டே… சுரேஸ் எங்கயடா ரவி? உங்களோட தானே ராத்திரி நிண்டவன்? அதற்கு சின்னவன், அம்மா, … அவன் இரவு 1 மணியளவில் வீட்ட போயிட்டு வாறனெண்டு போனவன் வரவில்லை, நாங்கள் நினைத்தோம் அவன் களைப்பில் படுத்திட்டான் எண்டு. இப்பதான் சுரேஸ் சொல்ல எனக்கும் தெரியுது. அம்மா நீங்க வீட்ட போங்கோ நாங்கள் தேடிக்கொண்டு வாறம் என்று கூறி சுரேசும், நானும் தேடுவதற்காக வெளிக்கிடும் போது ரவியின் தங்கை அஞ்சலா ஓடி வந்து கடிதத்தை நீட்டினாள். அதை சின்னவன் வாசிக்கும் முன்பு ரவியின் அம்மா மகளிடம் என்னடி என்ன கடிதம் என கேட்க, அஞ்சலா சொன்னாள் அம்மா அண்ணன் இயக்கத்திற்கு போறனெண்டு எழுதி வைத்துவிட்டு போயிட்டார். இதைக் கேட்டு எல்லோரும்… உறைந்து போய் நிற்கையில் ரவியின் அம்மாவின் அழுகைச்சத்தம் ஊரின் அமைதியை பொடி பொடியாக்கியது. ரவியின் அம்மாவின் அழுகை சத்தம் கேட்டு எல்லோரும் எங்கள் வீட்டின் முன் கூடி செய்தியறிந்து அதிர்ச்சியில் நின்றார்கள். அந்த தாயால் எத்தனை துன்பத்தினை தாங்க முடியும். வறுமையின் இயலாமையினையா? அல்லது ஒரே ஒரு மகன் அவனும் இப்படி செய்துவிட்டானே என்பதனையா? பெரும் குரலெடுத்து கதறி அழுதார்.

ரவி வேலைக்கு போனாலும் நன்றாக வாசிப்பான். இன்றைய நாட்டு நிலமை, உலக நிலமை யாவையும் உடனுக்குடன் தெரிந்து வைத்திருப்பான். எம் மக்கள் சார்ந்த சிந்தனையோடும் அவர்களுக்கு எம்மால் என்ன செய்யலாம் என்ற எண்ணத்தினையும் அவனின் உரையாடல்களில் அவதானிக்கக்கூடியதாக இருக்கும். ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் எமக்கான தீர்வை அடையமுடியும் என்பதனை நம்பியவனாக இருந்தான். இவற்றின் விளைவே அவன் விடுதலைப்போராட்டத்தில் இணைவதற்கான காரணமாக இருக்கலாம் என்று ரவியின் எண்ணத்தில் தன்னை மறந்திருந்தவனை……

தொலைபேசி மணி சத்தம் சுயநினைவுக்கு கொண்டு வந்தது. தன்னை சுதாகரித்துக்கொண்டு போனை எடுத்து ஹலோ… சொன்னான். மறு முனையில் அவன் றூம் நண்பன் கமல். என்னடா என்ன செய்கிறாய் என விசாரித்தவன். வேலை இடத்தில் அதிகாரியிடம் விசயத்தை சொன்னதாகவும், அவர் மிகவும் கவலைப்பட்டதாகவும், நீ இலங்கை போவதென்றால் உனது வேலைக்கு தான் உத்தரவாதம் தருவதாகவும் கூறினார் எண்டான். இதைக் கேட்டதும் சின்னவனுக்கு ஆறுதலாக இருந்தது. சிறிய மௌனத்தின் பின்… இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி ஊருக்கு போய் வாவன் என்று கமல்



எழுத்துருவாக்கம்: ஆசீர் அன்ரனி
ஸ்காபரோ

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# நண்பன்

சொன்னதும், சற்று யோசித்தவன், கமல் நீ சொல்வதும் நல்லதுதான்... நன்றி கமல் என்றவன், ஆ.. அப்ப நான் ரிக்கட் அலுவலாக போயிட்டு வாறன், நீ வேலை முடிய வீட்ட வாவன் என்று கூறி போனை துண்டித்துக்கொண்டு புறப்பட்டான்.

பிரயாண ரிக்கட்டுடன் சின்னவன் வீட்டுக்கு வரும்போது கமல் வீட்டில் இருந்தான். டே சின்னவன் உன் நண்பன் சுரேஸ் போன் பண்ணினவன். நான் சொன்னேன் நீ இலங்கை வருவதாகவும் ரிக்கட் எடுத்துக்கொண்டு வந்து உங்களுக்கு விபரம் அறிவிப்பாய் எண்டும். அப்படியா... என்றவன், சுரேசுக்கு போன் செய்தான். தனது பிரயாண விபரத்தை கூறி முடித்ததும் சுரேஸ் சொன்னான் டே சின்னவன் நீ வாறாய் எண்டு சொன்னதும் ரவியின் அம்மா சிறிது ஆறுதலாக காணப்பட்டாடா'. சரியடா சுரேஸ், நான் நாளை அங்கு வந்து கதைக்கிறன், விமான நிலையத்துக்கு போக நேரமாகின்றது என சொல்லி போனை துண்டித்துக்கொண்டு விமான நிலையத்துக்கு புறப்பட்டான். நண்பன் கமலின் காரில் போகும் போதே தனக்கான சில வேலைகளை கமலிடம் கூறி மறந்திடாமல் செய்யுமாறு கேட்டுக்கொண்டான்.

கமலோ டே நீ ஒண்டுக்கும் யோசிக்காம போ நான் எல்லாம் பார்த்துக்கொள்ளுகின்றேன் என்று அன்போடு சொன்னான். அங்கு உனக்கு பணம் தேவைப்பட்டால் எனக்கு போன் செய்யுமாறும் கூறினான். சின்னவனின் மனம் உள்ளூராக நன்றி கூறியது. நண்பர்கள் வாழ்வின் ஈடு இணையற்றவர்கள். எப்படியெல்லாம் புரிந்துகொள்ளுகின்றார்கள். இப்படிதான் ஒரு வருசம் தன்னால் பரீட்சைக்கு காசு கட்ட முடியாமல் இருந்தபோது ரவி தன் அம்மாவ-டம் அழுது வேண்டிக்கொண்டு வந்து தந்தவன், என்று எண்ணியவனுக்கு அவனை இழந்துவிட்டேனே என்று பெருமூச்சு விட்டான். டே சின்னவன் கவனமாய் போயிட்டு வா... சுரேசிடமும் நான் விசாரித்ததாக கூறு என சொல்லி வழியனுப்பி வைத்தான் கமல்.

விமானத்தில் ஏறி தன் இருக்கையில் அமர்ந்தவனுக்கு பிரயாணத்தின் நீளத்தினை நினைத்து சோர்வு ஏற்பட்டது. சற்று கண்ணை மூடியவனுக்கு அவனின் எண்ண ஓட்டங்கள் பின்நோக்கி விரைந்தது. மன்னார் மாவட்டத்தில் மடு திருவிழா ஆடி மாதத்தில் களை கட்டி சிங்கள, தமிழ் கிறிஸ்தவர்கள் மாதாவின் திருநாளை சிறப்பாக கொண்டாடுவர்கள். இத்திருவிழாவிற்கு எமது ஊரிலிருந்து இளைஞர்கள் சைக்கிளில் போவது வழக்கம். நான், சுரேஸ், ரவி மூன்று பேரும் சைக்கிளில் போவதற்கு ஆசைப்பட்டு எமக்கான சைக்கிள்களும் ஆயத்தம் செய்துவிட்டோம். ஆனால் வீட்டில் அனுமதி எடுக்கவில்லை. 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தோம். வீட்டில் அனுமதி தரமாட்டார்கள் என்பது தெரியுமென்பதனால், நன்றாக யோசித்தபோது எமது ஊர் குருவானவர் ஞாபகத்துக்கு வந்தார். அவரிடம் நாங்கள் மூன்று பேரும் போய் விசயத்தை சொன்னோம். குருவானவரும் எங்கள் உணர்வுகளை புரிந்து கொண்டவராக எங்களின் பெற்றோர்களிடம் கேட்டு நாளை சொல்வதாக சொன்னார். எமக்கு நம்பிக்கை பிறந்தது. நாங்கள் ஆயத்தப்படுத்திய சைக்கிளில் பயிற்சி எடுத்துகொண்டிருந்தோம். விமானம் மேலே எழும்புவது போன்று சின்னவன் உணர்ந்தபோதும் அவன் கண்கள் திறபடவுமில்லை தன் எண்ண ஓட்டங்களிலிருந்தும் விடுபடவுமில்லை. மறு நாள் நாங்கள் மூவரும் குருவானவரை சந்திக்க சென்றோம். எம்மை கண்ட குருவானவர் சிறிய சிரிப்போடு எம்மை நோக்கி வந்து, எனது வார்த்தையை நம்பி ஓம் சொல்லிருக்கின்றார்கள். அங்கு போய் குழப்படிகள் செய்யக்கூடாது. கவனமாக போய்வாருங்கள் என்று வாழ்தினார். மூவரும் பெரு மகிழ்ச்சியோடு குருவானவருக்கு நன்றி கூறினோம்.

இரண்டு நாட்களின் பின் காலை 4மணியளவில் மொத்தம் 14 சைக்கிள் ஆயத்தமாகியது. ஒவ்வொருவரின் பெற்றோர், உறவினர்கள் என ஊரே திரண்டு நின்று ஜெபம் செய்து எங்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள். காலை 11 மணியளவில் மாங்குளத்தை அடைந்தோம். மாங்குளத்தில் சிறிது ஓய்வெடுத்தவிட்டு புறப்பட்டு கொஞ்ச தூரம் போகவில்லை சுரேசால் சைக்கிள் ஓட முடியாமல் கால் தசை இறுகிவிட்டது. இதற்காக எல்லோரும் நிற்காமல் நானும் ரவியும் நின்று சுரேசுக்கு தேவையான முதலுதவிகளை செய்து சற்று ஓய்வெடுத்த பின் மடு கோவிலை சென்றடைந்தோம். யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு நினைவுக்கு வந்த சின்னவனுக்கு முன்னால் விமான பணிப்பெண் நிற்பது தெரிந்தது. சாப்பாடு என்ன வேணுமென கேட்டு கொடுத்தார். சாப்பிட்டுவிட்டு அசதியாக இருந்ததனால் தூங்கிவிட்டான்.

ரவியின் உடலை இயக்கத்தினர் வீட்டுக்கு கொண்டு வந்தார்கள். ஊரே கதறியழுதது. ரவிய-ின் மூத்த தங்கச்சி அஞ்சலி கதறிய கதறல் எல்லோரின் இதயத்தையும் உலுக்கியெடுத்தது. இரண்டாவது தங்கச்சி ரமணி பித்து பிடித்தவள் போல் இருந்தது எல்லோருக்கும் பயமாக இருந்தது. ரவியின் அம்மா ரமணியை அழுமாறு கேட்டு அவளை கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருந்தார். ரவியின் அப்பா உடல் நலம் சரியில்லாமையினால் அவரை அழவ-ிடாமல் பார்த்துக்கொண்டார்கள். இருந்தும் ஒரே மகனின் இழப்பல்லவா? எப்படி அவரால் அழாமல் இருக்கமுடியும். மௌனமாக அவர் உள்ளம் கதறியமையை முகத்தில் காண முடிந்தது. அயல் ஊர்களில் இருந்தெல்லாம் உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் வந்து ரவிக்கு வீர வணக்கம் செலுத்தினார்கள். ஊர் முழுவதும் இளைஞர்கள் தோரணம் கட்டிக்கொண்டிருந்தார்கள். அப்படி கட்டிக்கொண்டிருந்தபோது குண்டுவீச்சு விமானம் மேலே பறந்து கொண்டிருந்தது. இழப்பின் வேதனையில் வாடும் எம்மை நோக்கி தாக்குவதற்காக சிங்கள ஏகாதிபத்தியத்தின் குண்டு வீச்சு விமானம் மேலே பறந்தது, எல்லோருக்கும் பயத்தை உருவாக்கியது. அப்படி குண்டு போட்டால் நாங்கள் சுட்டு தங்ளுவம் என்ற வீறாப்புடன் போராளிகள் படையணிகள் காவலில் நின்றனர். (தொடரும்)

# சங்க இலக்கியக் காதல் காட்சிகள் தலைமகன் வருவானோ தலைவியைத்தேடி

தலைவன் மீது காதல் மீதூரப் பெற்றாள் தலைவி. ஆனால் துர் அதிஷ்டவசமாக அவர்கள் ஒருவரை ஒருவர் இனிமேல் சந்திக்க முடியாது என்ற நிலை ஏற்படுகின்றது. தலைவி உடல் வெளுத்து நோய்வாய்ப்பட்டுள்ளாள். தலைவனின் பிரிவால் பசலை படர்ந்துள்ளது. இந்தக் காதல் நோய் தலைவன் வந்து அவளைக் கட்டி அணைத்து ஆரத்தழுவி அல்லது நீண்டநாட்களாக காதல்நோயால் பீடிக்கபட்டவளது காதல் வேட்கையைத் தணிக்க அவனொடு சேர்வதால் மட்டுமே தீரக்டியது. இந்தக் காதல் நோய் அவளது தோழியைத் (பாங்கி) தவிர வேறுயாருக்குமே தெரியாது. அவளது தாய் இவளின் மாற்றத்தைக் கண்டுகொண்டாள் எனினும் அதற்கான காரணத்தை அறியாள். தாய் மகளின் நோய்க்கான காரணத்தைக் கண்டறிய உண்மையைக் கண்டறியும் குறிசொல்லும் மகளிரை வரவழைத்தாள். பொதுவாக இந்தக் குறிசொல்லும் மகளிர் சொல்வது சரியானதாக இருப்பதில்லை. முருகன் இளம் பெண்களைப் பீடித்துள்ளான் என்று கூறி (முருகனின் பூசாரிதான் வேலன் என்பது சங்க இலக்கியம் கூறும்) வேலன் இந்த நோயைத் தீர்ப்பதற்காக வருவார். விலங்குகளைப் பலியிட்டு இளம் மகளிரின் நோயைப் போக்குவார். அந்த நங்கையோ அன்றி அவளது தோழியோ அவர்களை அலட்சியம் செய்யாது கேலிசெய்து சிரிப்பார்கள். இவர்களது கேலிக்குப் பூசாரி அல்லது முருகன் அல்லது பெற்றோரார் ஆளாவர். சங்க இலங்கியத்தில் இத்தகைய பல செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு உதாரணமாக கீழே தரப்பட்டுள்ள செய்யுளைப் பார்க்கலாம்.

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்
குணம்பொள் அருவிக் கான்கெழு நாடன்
மணம்கமழ் வியன்மார்பு அணங்கிய செல்லல்
இது என அறியா மறவரற் பொழுதில்
'படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தக்கை
நெடுவேட் பேண தணிகுவள் இவள் என,
முதவாய்ப் பெண்டிர் ஆவாய்க் கூற,
களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி,
வளநகர் சிலம்பம் பாடிப் பலி கொடுத்து,
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்,
முருகுஆற்றுப் படுத்த உருகெடு நடநாள்,
ஆரம் நாற, அருவிடர்த் ததைந்த சாரல்
சாரல் பல்பூ வண்டுபடச் சூடி
களிற்று - இரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்து இயங்கும் மரபின் வயப்புலி போல,
நல்மனை, நெடுநகர்க் காவலர் அறியாமை
தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப,
இன் உயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து,
நக்கனென் அல்லெனோ யானே - எய்த்த
நோய்தணி காதலர் வர, ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே?

அகநானூறு 22 (வெறிப்பாடிய காமக்கன்னியர் -பெண்புலவர்)

பரந்து விரிந்த அவனது நறுமணம் கமழும் மார்பினை உடைய அவர் குன்றும் குன்று சார்ந்த இடமாகிய குறிஞ்சி நிலத்தின் தலைமகனாவான். அங்கு காந்தர்வக் கன்னிகள் அல்லது காதல் தேவதைகள் உலாவும் வான்முட்ட உயர்ந்து நிற்கும் மலைக்குன்றின் உச்சியில் இருந்து வீழும் நீர்வீழ்ச்சி அந்தக் காந்தர்வக் கன்னியர்களினால் ஆட்கொள்ளப்பட்டதுவோ. அன்னைக்கு தன்மகளின் நடத்தையில் ஐயம் ஏற்படுகின்றது. எனவே காதல் கடவுளருக்கு மடைபரப்பி அந்தத் தீய தேவதையை ஓட்டி விடவேண்டும் எனப் பெற்றமனம் எண்ணுகின்றது. அதனால் அவள் மந்திரம் செபித்து தனது மகளைப் பீடித்துள்ள அந்தப் பிசாசை விரட்ட



தொடர்ச்சி 37ஆம் பக்கம்


## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## KOKUVIL NIGHT 2012

காலம்: *Saturday November 17, 2012.* நேரம்: *6:00 PM*
இடம்: *Princess Banquet Hall, 3330 pharmacy Ave. Scarborough, ON PHARMACY & MCNICOLL*
ரிக்கற் விபரங்களுக்கு அழையுங்கள்: ***416.414.3327 / 647.741.6645 / 416.321.9696***

# Education

**Review Tutorials - 127**

➢ **CHEMISTRY 12 & IB**

(i) (ii)




Give IUPAC name of the major product/s

➢ **Math 12** Prove:

$(i) \cos^2 x.\cos^2 y + \sin^2 x.\sin^2 y + \sin^2 x.\cos^2 y + \sin^2 y.\cos^2 x = 1$

$(ii) \sec^2 x - \sec^2 y = \tan^2 x - \tan^2 y$

➢ **(Gr 10)** Sum of a two digit number and one less than the number gives the reverse of the first number. If sum of the two digits of the first number is 10. Find the number.

➢ **PHYSICS**

**(Gr 11)** A 70 kg person is parachuting and experiencing $2.2 m/s^2$. The mass of the parachute is 5kg. (i) What upward force is exerted on open parachute by the air?
(ii) What downward force is exerted by the person on the parachute?

**(Gr12A)** A pitched 160 g baseball in a horizontal flight with a speed of 40m/s is struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction ( horizontally) with the speed of 52m/s. If the ball leaves the bat with a speed of 60m/s at an upward angle of 25° from the horizontal, calculate the average force exerted on the ball. Collision lasts for 1.2ms

**(Gr 12B)** Two masses A (5kg) and B (2kg) connected by a cord passes over a massless frictionless pulley P, fixed on an inclined surface (30°) as shown below. If the system is released ($\mu_k$= 0.15), calculate the acceleration of the system.




➢ **BIOLOGY(**Gr12): Describe the cyclic and and non-cyclic photophosporilation and its importance in carbon fixation

➢ **Answer key 126**

➢ **CHEMISTRY IB**

(i) 2-chloro, 2-methyl butane

(ii) $E_2$ reaction predominate when a tertiary halide is heated with a strong base.

**BIOLOGY**

**(G11)** Viruses do not reproduce, do not have structures such as cellular membrane or cell organelles.
viruses contain genes made of either DNA or RNA but not made of cells- no cell membrane, nucleus, or cytoplasm. no metabolic apparatus and do not digest, respire, and so on. can reproduce but only inside a host.

**(G12)** In mammals, erythrocytes lose nucleus and all other cellular organelles such as their mitochondria, Golgi apparatus and endoplasmic reticulum during its maturation. As a result of not containing mitochondria, they produce the energy carrier ATP by the glycolysis.

**(G 12A)** (a) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene

(b) 1- propanol + $H^+/Cr_2O_7^{2-}$ →Propanal
Distillation

Or use PCC/ $CH_2Cl_2$ propanal will be only product

(c) 1- propanol + $H^+/Cr_2O_7^{2-}$ →Propanoic acid

(d) Step1:-1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene
Step 2 : Propene + $H^+/H_2O$ → 2-proponol

(e) Step1:-1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene
Step 2 : Propene + HBr→ 2-bromo propane

(f) Step1:-1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene
Step 2 : Propene + $H^+/H_2O$ → 2-propanol
Step 3: 2-propanol $H^+/Cr_2O_7^{2-}$ → Propanone

➢ **MATH 12**

$f(x) = x(30-2x)(20-2x)$ ; $x(30-2x)(20-2x) = 1008$

$f(x) = 4x^3 - 100x^2 + 600x$ ; $4x^3 - 100x^2 + 600x = 1008$

$x$ = 3cm or 4.92cm

➢ **PHYSICS**

**(G12 B)** Assume that the bullet is inside the bob
If bob swing height of h m , use conservation energy

$\Delta \frac{1}{2} m_1 v_1^2 = \Delta(m_1 + m_2) gh$ **(Ans = 46m)**

**(G12 B)**

(i) I= $P_f - P_i = mV_f - mV_i$ (0.16x 52) – (0.16x9 –(40)
= 8.32 + 6.4
= 14.72 kg.m/s **(Ans= 15kg.m/s)**

(ii) $F_{(ave)} = J/\Delta t$ =15/0.0013 = 11323N **Ans=1.1x $10^5$ N)**

*Answer key 122 - next issue*

**Contact: 647 341 3975**
By **Dr. A.Sri Krishnaraj** PhD
**E mail: ask@ keentutoringcentre.com**
KEEN TUTORING CENTRE

# சார்பியல்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

இருக்க, லோட் கெல்வின் என்ற விஞ்ஞானியோ, மைக்கல்சன் - மோர்லி பரிசோதனை முடிவினை இயற்பியலின் கருமேகம் எனக் குறிப்பிட்டார். இக்கருமேகம் கலைக்கப்படும் போது இயற்பியலின் புதிய கதவுகள் திறக்கப்படலாமென அவர் கூறினார். அவர் கூறியது மிகச் சரியாகவே அமைந்தது. 1905ம் ஆண்டில் ஒருவரும் அறிந்திராத, சுவிஸ் நாட்டின், புதிய கண்டுபிடிப்புகளின் காப்புரிமை வழங்கும் நிறுவனத்தில் பணிபுரிந்த மூன்றாம் தர எழுதுவினைஞர் ஒருவர், தனது சிறப்பான ஐந்து விஞ்ஞானக் கட்டுரைகளில் ஒன்றாக இந்தச் சிக்கலுக்கான தீர்வினைக் கொண்டு வந்தார். அவர்தான் ஆறு வயதிலே ஒரே திசையைக் காட்டிக் கொண்டிருக்கும் திசையறிகருவியின் முள்ளினைப் பார்த்து அதிசயித்த, 16 வயதிலே ஒளியின் வேகத்தில் செல்லும் வண்டியின் முன் வெளிச்சம் எப்படித் தெரியும் என்ற குதர்க்கமான கேள்வியைக் கேட்ட அயன்ஸ்ரைன். பள்ளி நாட்களில் ஆசிரியர்களால், விரிவுரையாளர்களினால் 'சோம்பேறி' 'ஒன்றுக்கும் உதவாதவன்' என்றெல்லாம் கூறப்பட்ட அல்பேட் அயன்ஸ்ரைனுக்கு அப்போது வயது 26.

# அன்னை...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

பெரியபுராணம் தோன்றினால் அதிலே தங்கம்மா அம்மாவுக்குத் தனியிடம் வகுக்கப்படும் என்பது எனது பதிலாய் வெளிவரும். இன்று அன்னை உயிருடன் இல்லை. அவர் சேவைகள் உயிர்ப்பாய் நின்று உலகத் தமிழர்களை சிவத்தமிழ் வளர்ச்சிக்கும், மக்கள் சேவைக்கும் உந்து சக்தியாய் உதவுகின்றன.

அன்னை என் மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு வருகை தந்து ஆசீர்வதித்த போது எடுத்த புகைப்படத்தையே இங்கு காண்கிறீர்கள். அந்த நாள்காட்சிகளும், அந்த நாள் நினைவுகளும் இன்றைய நாள் இயக்கத்திற்கும் உணர்வு பூர்வமான உண்மைத் தொண்டுகளுக்கும் தூண்டுகோலாய் அமையுமல்லவா? 'தொண்டலாது உயிர்க்கு ஊதியம் இல்லை. அன்பு செய்வோம், தொண்டு செய்வோம் முடியாவிட்டால் சும்மாயிருப்போம். 'பல்சான்றீரே! பல்சான்றீரே! நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" அங்குபோகும் போதெல்லாம் ஏற்கெனவே படித்த புராணங்களையும் திருமுறைகளையும் மீண்டும் படித்துவிட்டுத்தான் போவேன். அவ்வளவு பயம் எனக்கு.

ஈழத்தமிழர்களின் கடவுள் நம்பிக்கை பற்றியும் சமயப்பற்று குறித்து வாரியார் சுவாமிகள் மனம் திறந்து பாராட்டியமை அவருடைய மேதைப்பண்புக்குச் சான்றாகும். ஈழத்தின் அன்றைய கல்விக்கட்டமைப்பும் கடவுள் நம்பிக்கையும் கலாச்சாரப் பண்புகளும் வாழ்க்கை விழுமியங்களும் இன்று சிதைக்கப்படுவதாய் கேள்விப்படுகிறோமே! இனி ஒரு விதிசெய்து அதை எந்நாளும் காத்து நமது கடமையை நிறைவேற்ற வேண்டும். சிறுதுளியும் பெருவெள்ளமாகும். நினைப்பு நெகிழ வைக்கும். செயல்படுத்துமே. இந்த இதழில் வந்த புகைப்படத்தினைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை என்று நினைக்கிறாயா?

**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*

தொடர்புகளுக்கு: ***416.917.6883***

# சங்க இலக்கிய...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

நினைக்கின்றாள். உண்மையை அறிந்து இறைவனை வணங்குவதற்கும் அதற்கேற்ற யாகத்தைச் செய்வதற்கும் ஏற்ற இடத்தைத் தெரிவுசெய்யும் படி காதல்வயப்பட்ட தலைம-



களின் அன்னை கட்டளை இடுகின்றாள். இது மலைவாள் மக்களின் மரபாதல் வேண்டும். தனது மகளைப்பீடித்துள்ள பிசாசை ஓட்டவேண்டும் எனத் தாய்மனம் எண்ணுவதில் தவறில்லையே? இங்கே அதற்காக குறிஞ்சிக்குமரன் அதாவது எதிர்ப்படும் அனைத்தையும் தவிடுபொடியாக்கக் கூடிய நீண்ட வேலை உடைய முருகனை வழிபட்டு அதனை அகற்ற நினைக்கின்றாள் அன்னை. அதற்கான ஒழுங்குகளையும் செய்கின்றாள். இதற்கு பண்டைய பிசாசை விரட்டும் கலையை நன்கறிந்த மலைக்குறத்தியை அழைத்து இதனைச் செய்வதற்கு அன்னை ஆயத்தங்களைச் செய்கின்றாள். அதற்கு சந்தனக் கட்டைகளை அவியில் இட்டு இரத்த தானம் முருகனுக்குச் செய்வது வழக்கமாக இருந்துள்ளது. இதனை அறிக-ின்றாள் தலைமகள். அவளது மனமோ மேலும் துன்பமடைகின்றது. அது நடக்க இருக்கும் அதே நடுயாமத்தில் 'எனது காதலன் வண்டுகள் மொய்க்கின்ற நறுமணம் வீசும் புத்தம் புதுமலரால் புனைந்த மாலையை அணிந்து யாரும் அறியாவண்ணம் நடுநிசியில் ஒரு யானை-யக் கொல்லுவதற்காக மிகக் கூர்மையான வெறிப்பார்வையோடு மிகப் பலம்பொருந்திய வேங்கை நகருவது போன்று மலை இடுக்குகளிடையே மறைந்து மறைந்து வருவார். அவரது இதயம் காதலால் நிறைந்திருக்கும். எனக்கு வேண்டியதை அவர் செய்வார். எனது இனிமை நிலை அப்படியே இன்ப மகிழ்வில் உருகி எனது உடலெல்லாம் உணர்ச்சியில் ததும்பி சிரிப்பொலி எழுப்ப அவர் எனது பிரிவு நோயை அகற்ற வருவார். அவர்கள் சொல்வது போன்று பிசாசை அகற்றுவதற்கு முருகனை வழிபடுவதால் அது நடக்கப்போவதில்லை. அன்னை எங்கே என் துன்பத்தை அறியப்போகின்றாள். அவள் அறியாள். என் தலைவன் வந்தால் தான் என் துயர் நீங்கும்' எனத் தோழிக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது குறிஞ்சி மகளிரின் காதல் ஏக்கம். இந்த அருமையான கவிதையை வெறி பற்றி காமக்கன்னியர் என்னும் பெண் புலவர் எழுதியுள்ளார்.

YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
Tel: 416.806.5397
905.201.7733
CALL: N. SELVAM



MATH, SCIENCE & ENGLISH TUITION
Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 647.831.0363

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

HomeLife / GTA Realty Inc., Brokerage*
*Independently Owned and Operated



Gulshan Sharma, B. Eng.
Broker
Cell: 416.407.5911
5215 Finch Ave. E. # 203 Toronto, ON.
Office: 416.321.6969

Brand New Gas Station with Convenience store. Short distance from Toronto. Rental income. also available.

Almost 2 acre piece of land commercially zoned in Etobicoke. (Subject to authority guidelines) Asking only $999,888.

Store and Apartment for sale with store rent ($2000+60%) and big 2 B/R Apartment in Scrborough. Asking only $419,900

ISLINGTON & HWY 401
Store with 2 Apartments for sale. Store rent almost $2400 per month. One apartment rented. Asking only $519,900

நகைச்சுவைத் தொடர் 257

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





கந்தசஸ்டி ஆரம்பம் 14 நவம்பர்.
காக்க காக்க கதிர்வேல் காக்க

ஸ்காபரோவைச் சேர்ந்த அன்னம்மா செல்லம்மா ஆகியோர் விருப்பமாக அவர்கள் நண்பர்களாகிய கதிர்காமத்தம்பி உலகநாதன் ராசம்மா ரூபன் ரூபி மீனா தாமோதரம் பேரம்பலம் முருகேசு ஆகியோருக்காகவும் தித்திப்பான தீபாவளி தினத்தில் இதோ உங்களுக்காக... கலகலப்பான பாடல் என அறிவிப்பாளர் முழக்கியெடுத்தபின்
'நீ சிரித்தால் தீபாவளி' பாடல் ஒலிபரப்பானது.
உலகர் பாட்டைக்கேட்டு சிரித்தார்.




ரூபனுக்கு சிறுவயதிலிருந்து தீபாவளிக்கு கடை கடையாய் ஏறி உடுப்பு வாங்கிய காலத்தை நினைத்துப் பார்த்தார்.

வானொலியில் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள் நேயர் விருப்பம் வாழ்த்துக்கள் பாராட்டுக்கள் பழைய தீபாவளி நினைவுகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன.

'தினம்....தினம்.... தீபாவளி...' பாடல் ஆரம்பித்தது.
தினமும் ஓப்பினிங் சேல் அல்லது குளோசிங் சேல் அது இது என எல்லா நாளும் சேல்.
சம்மர் ஸ்பிறிங் வின்ரர்.

பொங்கல் சிவராத்திரி ஈஸ்ரர் றம்ளான் என மாறி மாறி சேல் என்றால்
தினம்... தினம்... தீபாவளி... உண்மைதான். ஒரு வருடத்தில் எத்தனை புது உடுப்புகள்?

எத்தனையை உடுக்கிறோம். எத்தனை ஒருநாள் கூட உடுக்காமல் துணிக்கடை அலுமாரிகளில் கிடந்தவை பலர் வீட்டில் சூட்கேசினுள் அடங்கிக் கிடக்கின்றன. (ஆட்கள் வெளியே வராமல் அடங்கிக்கிடக்கும்போது உடுப்புகள் கிடந்தால் என்ன?)
'உன்னைக்கண்டு நானாட என்னைக்கண்டு நீயாட உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி'.

ரூபனும் ரூபியும் உலகருக்கும் ராசம்மாவுக்கும் உடுப்பு எடுத்துக்கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். என்ன எடுத்துக் கொடுத்தாலும் அவற்றை வைத்துவிட்டு வரும்போது சிங்கப்பூரில் வாங்கிய வேட்டியும் பின்னர் வாங்கியதில் தனக்குப்பிடித்ததை மட்டும் உடுப்பார். ராசம்மாவும் அப்பிடித்தான்.

'நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற'.

சான்டி புயல் ஒருபக்கம் தேர்தல் பிரசாரப் புயல் ஒருபக்கம் ஒருவாறு ஓய்ந்துவிட்டது. மழைவிட்டும் தூவாணம் போகவில்லை என்பது போல நிவாரண வேலைகள் ஆரம்பித்தது ஒருபக்கம் ஆரம்பிக்காதது மறுபக்கம்.






உலகே கண்விழித்துப் பார்த்த அமெரிக்க தேர்தல் முடிவு.
றொணி பல முயற்சியின் பின் தோல்வியையும் ஒபாமா மீண்டும் வரவேண்டுமென்ற முயற்சியில் வெற்றியையும் கண்டிருக்கிறார்.



தோல்விதான் வெற்றியின் முதல்படி.
பதவியென்பதும் அதில் கிடைக்கும் ஆரவாரம் மனிதனை அதிலிருந்து கீழ் இறங்கவிடாது.
பணம் பத்தும் செய்யும். பதவி அதைவிடக் கூடச்செய்யும்.
ஒபாமா பதவிக்காலத்தில் அரபுநாடே ஆட்டம் கண்டுவிட்டது.
சதாம் குசேன் கடாபி பின்லாடன் ஆகியோரின் அடக்கம்.

லிபியா ஆட்சிமாற்றம் இவையெல்லாவற்றிற்கும் பிள்ளையார் சுழி போட்டது யாரோ.
முடித்து வைத்தது ஒபாமா.
ஒசாமா முடிந்தார். ஒபாமா தொடர்கிறார். சூரன் போர் தொடர்கிறது.

காக்க காக்க கதிர்வேல் காக்க!
கந்தசஸ்டியையும் உலக அரசியலையும் கலந்தே பார்த்துக்கொண்டிருந்தார் உலகர்.

இதற்கிடையில் ஒபாமா பதவிக்கு வந்த 3 நாட்களுக்கிடையில் உலகையே உலுக்கும் அமெரிக்க உளவுப்படையைச் சேர்ந்த திருமணமான டேவிட் பெற்றேசனின் (David Petraeus) ராஜினாமா வெள்ளை மாளிகையை கறுக்க வைத்துள்ளது.



வேறு பெண்களுடனான உறவு விடயம் பகிரங்கமானதால் தனது பதவியை வெள்ளை மாளிகையில் உத்தியோகபூர்வமாக ராஜினாமா செய்துள்ளார்.
(தான் செய்த தவறே தனது ராஜினாமாவிற்கு காரணம் என்கிறார்)

பதவியில் இருக்கும் எத்தனைபேர் பிழை விடுகின்றனர்.
அப்படிப்பார்த்தால் எத்தனைபேர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்?
நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்
கண்ணதாசன் பாடல் வரிகள்.



ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே!
நவம்பர் 15....30

16. ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் மண்டலகால ஆரம்பம்
றொறன்ரோ ஐயப்பன் கோவில் மண்டலகால ஆரம்பம்
17. சர்வதேச மாணவர் நாள்
18. கந்தசஸ்டி விரதம் சூரசம்காரம்
18. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரப்பிள்ளை நினைவுதினம்
(வெள்ளிப்பனிமலையின் மீதுலாவுவோம்......கப்பல் விடுவோம்)
19. பிரபல நடிகர் எம். என். நம்பியார் நினைவு தினம்.
20. குழந்தைகள் நாள்
21. உலக தொலைக்காட்சி நாள்
27. மாவீரர் நாள்







வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்
மாபெரும் வீரர் மானம் காத்தோர் மக்கள் மனதில் நிற்கின்றார்.













# இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் ஒன்ராறியோ

ஒன்ராறியோவிலுள்ள, இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், ஓய்வூதியம் சம்பந்தமாக, கனடாவில் வாழும் இலங்கையரது பிரச்சினைகளை முன்னெடுக்கிறது. இச்சங்கத்தின் நிர்வாகசபை, அண்மையில் ஸ்காபுரோவில் (City Hall At The Scarborough Civic Centre) கூடி இலங்கை ஓய்வூதியம் சம்பந்தமாக இதுவரை ஓய்வூதியம் கிடைக்காதவர்களினதும், அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட அறிக்கைகளின்படி, கிடைக்கவேண்டிய மேலதிக பண உதவிகள் (Allowances) கிடைக்காதவர்களினதும் விடயங்களை உடனடியாக கவனிக்க வேண்டுமென ஏகமனதாக தீர்மானித்தது. அரசாங்கத்திலும், உள்ளூராட்சிகளிலும் சேவை செய்து ஓய்வூதியம் (Service Pension or widow and orphan pension) பெற தகுதியிருந்தும் பெறமுடியாமல் இருப்பவர்களது கோரிக்கைளையும், சங்கம் முன்னெடுக்க வேண்டுமென நிர்வாகசபை முடிவுசெய்துள்ளது.

முறையாக கிடைக்க வேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளை இற்றைவரை பெறாதவர்களும் தமது தொழில்களை தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களினால் விட்டுவிலகி ஓய்வூதியம் பெறமுடியாமல் இருப்பவர்களும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். உறுப்பினர்கள் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பிக்குமாறும் புதியவர்கள் சங்கப் பொருளாளர் (T.P No 416.266.7895) உடன் தொடர்பு கொண்டு அங்கத்தவராகும்படியும் கேட்கப்படுகின்றனர்.

மன்றத்தின் பின்வரும் நிர்வாகசபை பணிப்பாளர்கள், யாராயினும் ஒருவரிடமிருந்து ஓய்வூதியம் சம்பந்தமான விபரங்களை அறிந்து கொள்ளலாம். அவர்களைத் தொடர்பு கொள்ளும் பொழுது தங்களது அங்கத்துவ இலக்கத்தை (இருந்தால்) கொடுத்துதவுமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

***647.285.9336 / 416.291.6667 / 416.266.7895 / 416.879.6301***
***416.293.8592 / 289.997.0934 / 416.296.0136 / 416.454.6360***


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at ***Scarborough & Stouffville***
***Contact: 647.340.9490 / 647.831.0363***


0
20 YEARS
$$$$$
$$$
$$
$
$$
$$
$$$
$$$$
Siva Mailvaganam
Direct: 416 230 2991
Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca
80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4
Build An Investment & Protection For Your Loved Ones
BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA
AGE | FEMALE PER MONTH | FEMALE MAX COST | MALE PER MONTH | MALE MAX COST | TAX FREE MONEY
25 | $125.55 | $30,091 | $153.29 | $36,789 | $250,000 ++
30 | $170.68 | $40,992 | $193.71 | $46,470
25 | $198.55 | $47,652 | $271.26 | $65,102 | $500,000 ++
30 | $288.61 | $69,266 | $350.50 | $84,127
20 YRS PAY OUT PLAN
Super Visa (100% REFUNDABLE)
RRSP (SAVE 40%)
RESP (SAVE UP TO $9200)
Critical Illness Insurance (100% CASH BACK)
Life Insurance
Non-Medical Insurance
Disability Insurance
Mortgage Insurance
Travel Insurance
RBC Royal Bank
IA PACIFIC
BMO
Canada Life
Manulife Financial
We're Hiring!
Telemarketer, one who can speak Tamil & English.
Please contact 416 230 2991
GLORIOUS PRINT 905 471 2500


Markham Rd & 16 Th Ave
Bedrooms: 3 Washrooms: 2 Markham $399,900
White's Hill/Bur Oak
Bedrooms: 3 Washrooms:2 Markham $399,900
9th Line Bypas & 14th Ave
Bedrooms: 3 Washrooms: 3 Markham $429,900
Markham/Denison
Bedrooms: 2 Washrooms: 2 Markham $254,900
Lawrence/Mccowan
Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto $389,900
Ellesmere/Scar Golf Club
Bedrooms: 3+2 Washrooms: 1 Toronto $389,999
Brimorton/Scar Golf Club
Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto $399,000
Markham/ Ellesmere
Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto $389,000
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA
Realty Inc., Brokerage
Independently Owned and Operated
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S OC2
Office: 416-321-6969 Fax: 416-321-6963
Raj Paramasamy
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
Designed by: Qcopy.ca

MORTGAGE NEEDS....
Subo Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859
416.627.2222
subo@bmsic.com
BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
TD MCAP

BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No : M12001612
* New Mortgages * Refinance * Second Mortgages
Call me for any Mortgage Financing questions?
Cell: 416-575-3211 ,Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@gmail.com

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolidation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Investments

NEILSON MCLEVIN
Bedrooms: 2
Washrooms: 2
$169,900

BRAMPTON
Bedrooms: 3
Washrooms: 3
Bsmt: Finished
$399,900

MCCOWAN & HWY401
Bedrooms: 2
Washrooms: 2
$229,900

HWY 06 HALDIMAND
Restaurant + Motel for sale.
$579,000

MORNINGSIDE SHEPPARED
Bedrooms : 4 + 1
Washrooms: 4
$589,9000

QUEEN CREDITVIEW
SOLD
Bedrooms : 4+1
Washrooms: 6
$1,187,500

RE/MAX
Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
416.575.5055
Real Estate / Principal Mortgage Broker
Specialized in bank sale homes
Having difficulty of getting your mortgage
Please Contact me
*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.Jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

Free Real Estae Class
Free Realestate Class Call: 416.321.6969

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

ON THE SPOT
HOME INSPECTIONS INC.
Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist
InterNACHI
IAC2 CERTIFIED Mold Certified
CanNACHI
416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca
No 80 Corport Dr, Unit #201
Toronto ON M1H 3G5

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES